# காதல் வைத்துக் காத்திருந்தேன்!

- ஆர்.மணிமாலா

ஓய்ந்து அடங்கியது காற்று!

வலி தாளமாட்டாமல் இலை நுனிகளில் திரண்டிருந்த தண்ணீர் துளிகள் தொப், தொப்பென கீழே விழுந்து சிதறின.

விடிய விடிய பெய்த மழையில் மரங்கள் பளிச்சென குளித்திருந்தன. காற்றில் குளிர்ச்சி மிகுந்திருந்தது. பள்ளங்களில் தண்ணீர் தேங்கியிருந்தன. வாகனங்கள் பாரபட்சமில்லாமல் எல்லோர் மீதும் இருபக்கமும் தண்ணீரை பீய்ச்சியடித்தபடி சென்றன.

இரைச்சலை விலக்கி, கண்ணாடி ஜன்னல்களைத் திறந்த மிருணாளின் இளந்தளிர் மேனியை குளிர்த்தென்றல் ஒரு உலுக்கு உலுக்கியது.





பாபாவென கைகளைத் கோத்து கன்னத்தில் வைத்துக் கொண்ட மிதுனா அன்றைய மழைக்கால நேரத்தை ரசித்தாள். ஊசித்தூறலாய் விழுந்த சாரல் மழையை கண் கொட்டாமல் பார்த்தாள்.

ஆடாய் மிளகும், சுக்கும், ஏலக்காயும் தட்டிப் போட்ட டீயை குடிக்கவேண்டும் போல் இருந்தது.

பாத்ரூம் சென்று பல் விலக்கி, முகம் கழுவிக் கொண்டவள் படியிறங்கி கீழே வந்தாள்.

மிதுனாவுக்கு இருபத்தி மூன்று வயது. உடைத்த கோதுமை நிறத்தில் பார்த்தவர் அழகாயிருந்தாள். சிரிக்கும் போது சிலோகாவை நினைவுபடுத்துவாள்.

ஹாலின் மூலையில் அம்மா சாரங்கி ட்ரெட்மில்லில் அந்தக் குளிரிலும் வியர்க்க விறுவிறுக்க ஓடிக் கொண்டிருந்தாள்.

தொடையை கவ்விப்பிடித்த ட்ராக்சூட்டும், டீ ஷர்ட்டும் பனியனுமாய் இருந்த சாரங்கி மிக மிக இளமையாய் மிதுனாவிற்கு அக்கா போலிருந்தாள். தாழ்வாய் இறங்கியிருந்த கழுத்துப் பகுதியில் மேல் அழகு வஞ்சனையின்றி தெரிந்தது. தோள்பட்டைத் தாண்டி வளரவிடாத கூந்தலை ஒரு கிளிப்பில் அடக்கி இருந்தாள்.

சமையல்காரப் பெண்மணி எஸ்தர் அவளை கூச்சத்துடன் பார்த்தபடி கீரையை சுத்தம் செய்து கொண்டிருந்ததை மிதுனா பார்த்து விட்டாள்.

நிஜம் தான்! அம்மாவின் அழகும், உடையும் மற்றவர்களை கூச்ச செய்பவைதான்!

"எஸ்தர்!"

"என்னம்மா?"

"டீ வேணும்!"

"இதோ கொண்டு வர்றேம்மா!"

"சுக்கும், மிளகும் போட்டு..."

"சரிங்கம்மா!"

"ஹாய் மிதுனா... குட்மார்னிங்!" குரல் கேட்டுத் திரும்பினாள் சாரங்கி.

"குட்மார்னிங் மம்மி!"

"என்ன டார்லிங் டீ குடிக்க உட்கார்ந்துட்டே... வயிறு நிறைய தண்ணிய குடிச்சிட்டு எக்சர்சைஸ் பண்ணு!"

"ப்ச்... மூடு இல்லை மம்மி!"

"நோ... நோ... நேத்தும் நீ எக்சர்சைஸ் பண்ணலே... கமான்."

"என்னை விட்டுங்க மம்மி... நாளைக்குப் பண்ணிக்கறேன்."

ட்ரெட் மில்லை ஆஃப் பண்ணி விட்டு இவளை நோக்கி வந்தாள்.

"என்னாச்சுடா உனக்கு? கொஞ்ச நாளா உன்கிட்ட சில மாற்றங்கள் தெரியுது. உன் டிரஸ், ஆக்டிவிடிஸ் எல்லாத்திலேயும்! லைட்டா வெயிட் போட்டிருக்கே... வாரத்திலே மூணு நாள் எக்சர்சைஸ் பண்றதுக்கு லீவு போட்டுடறே... ஏன் மிதுனா?"

"நோ மம்மி. எதுவுமே இல்லே. ஆபிஸ்ல ஒர்க் அதிகம். அப்படி வேலையிலே மூழ்கிப் போறது பிடிச்சிருக்கு. பட் டார்டாசதறதை அவாய்ட் பண்ண முடியாதே!"

"சரி... ஓக்கே... ஆனா, இப்பல்லாம் நீ வெறும் சல்வார், சுடிதார்னுதான் போடறே! என்னாச்சு உன் ஜீன்ஸ்"ம், காக்ராச் சோளி கள்?"

"போரடிக்கப் போச்சு மம்மி!"

"அட!"

"அம்மா... ம்!" சுக்கு வாசனை மூக்கை துளைத்தது. எஸ்தர் மேஜை மீது வைத்தாள்.

"காலையிலே டீ சாப்பிடாதேன்னு எத்தனை முறை சொல்லியிருப்பேன்? பித்தம்டா. டோட்டல் ஃபாலோப் பண்ணு!"

"மம்மி... ப்ளீஸ்... இன்னைக்கு ஒரு நாள்" என்றபடி டீ கப்புடன் மாடிப்படியேறினாள்.

மகளை வியப்புடன் பார்த்தாள் சாரங்கி.

* * *

கண்ணாடி முன் நின்றாள் மிதுனா.

'கொஞ்சநாளா உன்கிட்ட சில மாற்றங்கள் தெரியுது' என்றது அம்மாவின் குரல்.

'ஆமாம் மம்மி... மாறிக்கிட்டு தான் வர்றேன். காரணம்... அவிந்த்!'

'அவரைப் பார்த்தபின் இந்த ஆழமாத மாற்றத்தான், இப்படியும் சந்தோஷமாய் வாழலாம் என்று புரிந்து கொண்டேன். இந்த மாற்றம் எனக்கு ரொம்பவே பிடித்திருக்கிறது மம்மி.'

குளித்து முடித்து, நைட்டியின் மேல் டவலைப் போட்டுக் கொண்டவள், வார்ட்ரோபைத் திறந்தாள்.

விதவிதமான உடைகள். அத்தனை கலரிலும் ஜீன்ஸ், மிடி, டாப்ஸ்! சாரங்கி மகளுக்காக வாங்கிக் குவித்திருந்தாள்.

கல்லூரிப் படிப்பு முடியும் வரை மிதுனாவின் தேசிய உடையே, ஜீன்ஸ்"ம், மிடியும் தான்! பார்பி பொம்மை மாதிரி கழுத்து வரை ஹேர் கட் பண்ணிக் கொண்டு, அம்மாவின் வழிநடத்தில் நடந்து கொண்டிருந்தவள் தான் மிதுனா!



எம்.பி.ஏ. முடித்ததும் உடனடியாக ஒரு ஸோஃப்ட்வேர் கம்பெனியில் மேனேஜர் அஸைன்மெண்ட் கை நிறைய சம்பளத்துடன் வேலை கிடைத்து விட்டது. அன்று மாறிய வாழ்க்கை தான் நாட்களை சுவாரஸ்யப்படுத்தி விட்டது.

சாரங்கியும் ஒரு பெரிய பன்னாட்டு நிறுவனத்தில் உயர்பதவி வகிப்பவள். அரை லட்சம் சம்பளம். வேலை நாட்டு கலாசாரத்தை கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருப்பவள். இரைவசாலி. யாரைப் பற்றியும் கவலைப்படாமல் தனக்கென வாழ்பவள். சாரங்கி மகா அழகி. இந்த வயதிலும் வயது வித்தியாசம் பார்க்காமல், அவளைப் பார்த்து ஏக்கப் பெருமூச்சு விடும் ஆண்கள் உண்டு. அதனாலேயே தன் அழகு மீது கர்வம் உண்டு. அதைப் பேணிக் காக்க இவசரி உடற்பயிற்சி செய்வாள்.

காலிங்பெல் அழைத்தது.

மிதுனா படியிறங்கி வந்தாள். அதற்குள் அம்மா கதவைத் திறந்து விட்டிருந்தாள்.

'ஹலோ...' என்றாள் விழிகள் விரிய சாரங்கி.

'ஹாய்...'

அப்பாவின் நண்பர் வெனின் வந்திருந்தார்.

"விஷ்ணு இல்லையா மேடம்?"

"வாட் மேடம்? கால் மீ சாரங்கி. நானும் உங்க ஃப்ரெண்ட் தானே மிஸ்டர் வெனின்?"

"ஓ...ஓ... ஆமா சாரங்கி!"

"ப்ளீஸ் கம்!"

சாரங்கி இன்னும் அதே உடையில் தான் இருந்தாள். வெனினின் பார்வை அவள் மீது ரோஜாவை போல் உருண்டது.

மிதுனாவுக்கு எரிந்தது.

"காபி ஆர் டீ?"

"நோ தாங்க்ஸ் சாரங்கி. இப்பதான் குடிச்சேன். விஷ்ணு எங்கே?"

"அந்த மனுஷன் பல்லி மாதிரி குப்புறக் கவிழ்ந்து தூங்கிட்டிருக்கார் இன்னும். எழுப்பி அனுப்பறேன்!"

சாரங்கி அறையை நோக்கி நடக்க, வெனின் அவளின் பின் பக்கத்தின் திரட்சியை கண் கொட்டாமல் ரசித்தான்.

மிதுனாவுக்கு மனது வலித்தது.

இனிப்பென்றால் ஈ மொய்க்கத்தான் செய்யும். அதை மூடி வைப்பது நம் புத்திசாலித்தனமில்லையா?

மாடிப்படியேறி தன்னறைக்குச் சென்று விட்டாள்.

* * *

"ஹாய் கிராண்ட் மிதுனா!"

"வந்துட்டேன் மம்மி!"

விஷ்ணுவும் டைனிங் டேபிள் முன் வந்தமர்ந்தார்.

இருவர் பக்கமும் பிரெட் ஆம்லெட் வைத்தாள். தானும் சாப்பிட்டாள்.

மிதுனாவிற்கு ஜூஸ் டிக் கொண்டு வந்தது.

"இன்னைக்கும் இது தான் டிபனா மம்மி?"

"இதுக்கென்ன குறை? கன்னத்தைப் பார், உப்பிப் போய் இருக்கிறது. டயட்டை ஃபாலோ பண்ணலையா? ம்... சாப்பிடு!"

"ப்ச். இந்த மனுஷக்கு... கமகமவென மணக்கும் இட்லியும், கேசரியும் சட்னியும் இருந்தால்... அமிர்தமாய் இருக்குமே!"

விஷ்ணு மகளை பரிதாபமாய் பார்த்தபடி சாப்பிட்டார். மகளின் பார்க்காத நேரம் கண்ணை சிமிட்டினார். மிதுனா புரிந்து கொண்டாள்.




விஷ்ணு தன் பிரீப்கேஸில் லேப் டாப் பையும், டேபிள் மீதிருந்த சில பேப்பர்களையும் எடுத்து வைத்தார்.

அறைக்குள் நுழைந்த சாரங்கி சில கணங்கள் தன் கணவனையே பார்த்தாள்.

டி.வி. சீரியலில் அப்பா வேஷம் போடுபவர் போலிருந்தார் விஷ்ணு. நெற்றி உச்சிவாங்கி, வழுக்கை பந்தல் போட்டிருந்தது. நிறமாய், களையாய் இருந்தார். நல்ல உயரம். லேசாய் தொப்பை. பிரபலமான ஐ.டி. கம்பெனியில் ப்ராஜக்ட் மேனேஜர். சாரங்கியை விட பத்தாயிரம் குறைவான சம்பளம்.

நிஜமா... ஏறிட்டுப் பார்த்தவர் சிரித்தார்.

"என்ன... அப்படிப் பார்க்கிறே சாரங்கி?"

"ஷிட்... இன் பண்ணலையா?"

"ம்ஹும்... லைட்டா தொப்பைப் போட்டிருக்கே... இன் பண்ணா பளிச்னு தெரியும்."

"ஆபிஸ்ல இதுக்கு சாப்பிடறீங்களோ?"

"சேச்சே... நீதான் சட்டமே போட்டிருக்கியே... காலையிலே பிரட், ஆம்லெட். இல்லேன்னா, ஓட்ஸ் ஆர் ராகி கஞ்சி. மதியம் கொஞ்சமா சாப்பாடு, நிறைய வெஜிடபிள்ஸ். ஒரு டம்ளர் மோர்! நைட்டு ரெண்டு சப்பாத்தி. அரைவேக்காடு வெஜிடபிள்ஸ். படுக்கப் போகிறப்ப போனா போகட்டும்னு பாதி டம்ளர் பால்! ஹும்... இதை சாப்பிட்டே

தொப்பை விழுந்துட்டுதே"

"என் டாட்டை கிண்டல் பண்ணினா லேசுல போறதுக்கு சான்ஸே இல்லையே... ஏதோ குறும்பு நடக்குது."

"இப்ப இதெல்லாம் ரொம்ப முக்கியமா? ஹோட்டல் மானேஜரிலே அஃபிஷியல் மீட்டிங் இருக்கு. லேட்டாச்சிம்மா?"

"ஹோட்டல் மானேஜரா? எனக்குத் தெரிஞ்ச அங்கே, நம்மோட காம்பௌண்ட் ஹாலோ கிடையாதே!"

"இப்ப புதுசா கட்டியிருக்கான் சாரங்கி... வழியை விடு!"

"டாடி... நானும் ரெடி!" என்றபடி வந்து நின்ற மிதுனாவை விழிகள் விழுந்து விடும் போல் வியந்தாள் சாரங்கி.

"ஹேய்... வாட் இஸ் திஸ்?"

மிதுனா... சேலைகட்டி, தலையில் பூச்சூடி இருந்தாள். நெற்றியில் மெல்லிய குங்குமத் தீற்று.

விஷ்ணு மகளைப் பார்த்து மனம் குளிர்ந்தார்.

"மிதுனா... நீயாம்மா இது? இந்த சேலையிலே எவ்வளவு அழகாயிருக்கே தெரியுமா?"

"கொஞ்ச நேரம் சும்மாயிருங்க. என்ன மிதுனா இது பட்டிக்காடு மாதிரி. உன் அழகுக்கு நீ பார்க்கிற வேலைக்கு ஜீன்ஸ், டாப்ஸ் தான் சூட்டபிள். நீ என்னடான்னா கிழவி மாதிரி புடவை கட்டறே! நானே என் கல்யாணத்தன்னைக்கு கட்டினதோட சரி... அதுக்கப் பிறகு சாரியெல்லாம் கட்டினதில்லே. பார்... இப்பக்கூட ஜீன்ஸ், ஷர்ட்டும் தான் போட்டிருக்கேன்."

"என்ன இப்ப? நீ கட்டலே... அதனால அவ கட்டறா. நல்ல விஷயம் தானே?"

"எப்படியோ போங்க. ஆமா, உங்களோட [illegible] எங்கே? டாடியோட... போறேங்களே!"

"இருக்கு மம்மி... டயர்டா இருந்தது. அதான் டாடிய ட்ராப் பண்ணிடச் சொன்னேன்."

"என் கார்ல வாயேன்... நான் ட்ராப் பண்ணிடறேன்."

"ஐயோ... வேணாம் மம்மி... நான் டாடியோடவே போயிடறேன்."

"அதுக்கேன் அலர்றே? மிதுனா ஒரு நிமிஷம்..." நகர்ந்தவளை பிடித்திழுத்து உற்றுப் பார்த்தாள்.

"குங்குமம்?"

"நேத்து ஃப்ரெண்டோட... கோவிலுக்குப் போயிருந்தேன் மம்மி! அந்த குங்குமத்தை

# தினம் ஒரு முத்தம்

குழந்தையை தினம் குறைந்தது ஒரு முறையாவது கொஞ்சி மகிழ்ந்து அன்பு முத்தம் கொடுக்க வேண்டும். இது குழந்தைக்கு ஆனந்தத்தை அளிக்கும்.

ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் இருந்தால் ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்தனியாக நேரம் ஒதுக்கி பேசி கொஞ்சி மகிழ வேண்டும். இதனால் பெற்றோர் நம்மை நன்றாக கவனிக்கிறார்கள் என்ற பாசமும் பற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும்.

தான்!"

"கோவிலுக்கா?" என்றாள் கேலியாய் சிரித்து.

"எப்பலேர்ந்து இந்த மாதிரி மூடத்தனமெல்லாம் பண்ண ஆரம்பிச்சே?"

"சாரங்கி... என்ன நான் சொல்றேன் இது? உனக்குத்தான் கடவுள் நம்பிக்கை கிடையாது. எனக்கு இருந்தாலும் உன் உணர்வுக்கு மரியாதை குடுத்தேன். இந்த வீட்லே பூஜையறையே கிடையாது. உன்னை அதைப்பத்தி நான் ஏதாவது சொல்லியிருப்பேனா? ஆனா, மிதுனாவுக்கு நம்பிக்கையிருக்கு. அவ சுதந்திரத்துல நீ ஏன் தலையிடறே?"

"ஆனா, நான் சொல்லி வளர்த்ததெல்லாம் வேற..."

"இருக்கட்டுமே மிதுனா படிச்சிருக்கா... சுயமா சம்பாதிக்கறா! அவளுக்குன்னு தனிப்பட்ட விருப்பங்கள் இருப்பது தப்பா என்ன? அது மட்டுமில்லே... இன்னும் கொஞ்ச நாள்ல அவ இன்னொரு வீட்டுக்கு வாழப் போறவ. அந்த வீட்ல பூஜையறை இருக்குமில்லையா? மிதுனாதானே விளக்கேத்தி ஆகணும். அட்லீஸ்ட் அதுக்காகவாவது பிராக்டிஸ் பண்ண கோவிலுக்குப் போகட்டும். சாரங்கி மாதிரியான வேடிக்கை வீட்டுக்கு வீடு இருக்குமா... முடியாதில்லையா?" என்றவரின் குரலில் கேலி இருந்தது.

சாரங்கியின் முகம் இருண்டு போனது.

விஷ்ணு கண்ணைக் காட்ட, "பை மம்மி!" என்று கூறி விட்டு மெல்ல நழுவினாள் மிதுனா.

விஷ்ணுவிற்கு கம்பெனி கார் கொடுத்திருந்தது. சாரங்கி தனக்கென ஒரு ஸ்பெஷல் கார் வாங்கி இருந்தாள். மிதுனா ஆக்டிவா வைத்திருந்தாள்.





அந்த வீடு சாரங்கியின் கனவு இல்லம்!

தன் சொந்த சம்பாத்தியத்தில் வாங்கிய ஒன்றரை கிரவுண்டு நிலத்தில் முன்புறம் கொஞ்சம் இடம் விட்டு விட்டு தாராளமாய் விசாலமாய் வீடு கட்டியிருந்தாள். சுற்றிலும் ஜன்னல்கள். காற்றுக்கோ, வெளிச்சத்திற்கோ பஞ்சமில்லை. அழகழகாய் மாடர்ன் ஆர்ட் வகையறாக்கள் சுவற்றை அலங்கரித்திருந்தன. உறுத்தாத வண்ணங்களில் சுவர்கள். கலைநயம் மிக்க சிற்பங்கள் கட்டித்து மூலைகளை அழகுபடுத்தின. வீட்டின் முன்புறம் சிறிய தோட்டம். எல்லாமே குரோட்டன்ஸ் வகை. புல்வெளியில் நான்கு சேர்கள்.

அவளுக்கு கடவுள் மீது நம்பிக்கை இல்லை என்பதால் வீட்டில் பூஜையறை என்று ஒன்று இல்லவே இல்லை. இது நாள் வரை அந்த வீட்டில் உயரிய சென்டின் நறுமணம் தவிர கற்பூர வாசனையோ, சாம்பிராணி வாசனையோ வந்ததில்லை.

புரட்சிகரமாய் சிந்திப்பவள். அதை செயலிலும் காட்டுபவள். திருமணம் என்பது மனப்பொருத்தம் மட்டுமே! அதை நிரூபிக்க கயிறு எதற்கு என்று... கட்டிய அன்றே கழற்றி வைத்துவிட்டாள். அதுவும் திருமணத்தை ரிஜிஸ்டர் பண்ண வேண்டுமே என்பதற்காக, ஃபார்மாலிட்டிக்காக கோவிலில் கட்டப்பட்ட தாலி! இன்றும் கூட ஒரு தினசரிச் சின்னமாய் விஷ்ணுவின் பீரோவில் உறங்குகிறது.

விஷ்ணுவின் கார் ஹோட்டல் மானேஜரின் முன் நின்றது.

அப்பாவைத் தொடர்ந்து மிதுனாவும் இறங்கினாள்.

சீருடை வைத்த காவலாளி பணிவாய் கதவைத் திறந்து விட்டான்.

ஏசிகாற்று சில்லிட்டது.

அறையின் ஒரு மூலையில் இருந்த மேஜையில் அமர்ந்தனர்.

விஷ்ணு மகளைப் பார்த்துப் பெருமூச்சு விட்டார்.

"என்ன டாடி?"

"உன்னைப் பார்த்தா மனசுக்கு கஷ்டமாயிருக்குடா!"

"ஏன் டாடி?"

"நானாவது பரவாயில்லை. இருபத்தஞ்சு வருஷமா காய்ந்த ரொட்டி, எல்லாம் சாப்பிட்டு பழகிட்டேன். கல்யாணத்துக்கும் பிறகு டாட்ஜிடாதான் ஆனா, நீ பிறந்ததிலேர்ந்தே டப்பா... தானே சாப்பிட்டுக்கிட்டிருக்கே! அப்பப்ப இதுபோல் ஹோட்டலுக்கு அழைச்சிட்டு வந்து வாங்கித் தர்றேன். எந்த வீட்டுல நடக்கும் இந்த கூத்து!"

"ஏன் டாடி... நீங்க சொல்லலையா இதெல்லாம்? இத்தனை சமைக்கணும். அதுதான் சமைக்கணும்!"

"ச்... நீ வேஸ்ட் மிதுனா. ஆரம்பத்திலேயே கேட்டிருக்கணும். உங்கம்மா மேல ரொம்ப காதல் எனக்கு. அதனாலேயே அவ என்னக் கொடுத்தாலும் அமிர்தமா சாப்பிட்டுட்டேன்!"

"இப்ப விஷமா தெரியுதாக்கும்!" என்றாள் சிரித்தபடி.

விஷ்ணு அந்த வார்த்தைக்கு மௌனத்தில் அமிழ்ந்து போனார்.

"என்ன டாடி யோசனை?"

"ஒண்ணுமில்லேம்மா! யாரோ எப்பவோ சொல்லி வச்சது போலவே தான் ஞாபகத்துக்கு வருது. இறைவனுக்கு அஞ்சுங்கள். அடுத்தபடியாக இறைவனுக்கு அஞ்சாதவனைக் கண்டு அஞ்சுங்கள் என்று! உங்கம்மாவோட... அசாத்திய துணிச்சலும், நாஸ்திகமும் பயத்தை தாம்மா தருது!"

"அம்மா அப்பவிருந்தே இப்படித்தானா?"

"இல்லேம்மா. வீட்டை எதிர்த்து ஜாதி விட்டு ஜாதி காதல் கல்யாணம் பண்ணிக்

விட்டோம். இன்னைக்கு வரை கொஞ்சம் பேர்தான் என்னை மன்னிக்கலே, ரெண்டு வரை படிச்சிருந்தவளை கல்யாணத்துக்குப் பிறகு மேற்கொண்டு படிக்க வச்சேன். படிச்சதும் ஒரு நல்ல கம்பெனியிலே வேலைக் கிடைச்சது. அங்கே அவங்களோட கம்பெனியிலே இருந்த பிரான்ச் ஆபிஸ்க்கு அனுப்பி அப்ரண்டிசா வேலை கத்துக் குடுத்திருக்காங்க. ஆறு மாசம் கழிச்சு வாசம் அவளை ரொம்பவே மாத்திடுச்சி. அதுக்குப் பிறகுதாம்மா... நீ பிறந்தே. சாரங்கி நல்லவதான். படிப்பு விஷயம், எங்களைப் பத்தி எல்லாமே நல்லது தான். ஆனா, அதையெல்லாம் நம்ம கலாசாரத்து முறையோட செஞ்சா... மனசுக்கு திருப்தியா இருக்கும்."

"........?"

"நானெல்லாம் ரொம்ப ஆசாரமா வளர்ந்தவன் மிதுனா. எங்கப்பாவும், அம்மாவும் பூஜையிலே உட்காந்தாங்கன்னா ரெண்டு மணி நேரமாகும் எழுந்திருக்க. எனக்கு ஸ்லோகங்கள் எல்லாம் அத்துப்படி. உங்கம்மாவுக்காக என்னை ரொம்பவே மாத்திக்கிட்டேன் மிதுனா. அவதான் இதுக்கு வரமாட்டேங்கறா! சரி... சரி... பழைய கதையைப் பேசி போரடிக்கிறேன். ஆபிஸ்க்கு நேரமாகுது. என்ன சாப்பிடறே... பனீர் டிக்கா, சப்பாத்தி."

"இல்லே டாடி... இட்லியும், வேர்க்கடலை சட்னியும் இருந்தா நல்லாயிருக்கும்."


"என்னது... இட்லியும், வேர்க்கடலை சட்னியுமா?" வியப்பும், திகைப்புமாக் கேட்டார்.

"அ...அதில்லே டாடி... இந்த க்ளைமேட்டுக்கு அப்படி சாப்பிடணும் போலிருக்கு."

"ஒரு விஷயத்துல உங்கம்மா சொல்றதுக்கு நானும் ஒத்துப் போறேன்."

"என்ன டாடி?"

"உன்கிட்டே ஒரு மாற்றம் தெரியுதுங்கறது!"




**ப**க்கத்து தெருவில் சேவலொன்று கூவ... அந்த நிசப்தமான அதிகாலை வேளையில் துல்லியமாய் காதில் விழுந்தது. கனகத்திற்கு சேவல் தான் அலாரம். சட்டென கண் விழித்தாள்.

பக்கத்தில் படுத்திருந்த ராஜாராமனிடமிருந்து சீரும் மாறாமல் குறட்டை சப்தம் வந்து கொண்டிருந்தது. கனகம் அவர் உறக்கம் கலையாமல் மெல்லமாய் எழுந்து அறையை விட்டு வெளியில் வந்தாள்.

அரைக் கடிகாரம் நாலரை மணி என்றது. கனகம் தலைமுடியை அவிழ்த்து உதறி கொண்டையிட்டு போட்டுக் கொண்டு குளியலறைக்குச் சென்றாள்.

பதினைந்தாவது நிமிடத்தில் குளித்து முடித்து வெளியில் வந்தவள் பூஜையறையைத் திறந்து கை கூப்பி, கண் மூடி சில கணங்கள் பிரார்த்தித்தவள் வெளியில் வந்தாள்.

விசாலமான வீடு அது!

காரைக்குடி செட்டிநாட்டு வீடுகளை நினைவுபடுத்தும் பாரம்பரியமிக்க வீடு.

இரண்டு கிரவுண்டு நிலத்தில், ஒரு கிரவுண்டை வீட்டிற்கும், ஒரு கிரவுண்டை தோட்டத்திற்கும் ஒதுக்கி அழகாய் வீட்டை கட்டியிருந்தார் ராஜாராமன்.

நான்கு படுக்கையறைகள், பெரிய ஹால், நீளமான தாழ்வாரம், அதன் நடுவில் மாடம் கட்டி துளசி செடி. இரண்டு மாடிக்கட்டிடம். அங்கும் கீழிருப்பதுபோலவே அறைகளும், ஹாலும் இருந்தது. மாடியில் யாரும் வசிக்கவில்லை. வாடகைக்கும் விடவில்லை. வீடு முழுக்கவே சிவப்பு கம்பளம் விரித்தது போல், சிவப்பு நிற வழவழ 'சிமெண்ட்' தரைதான். மருந்துக்குக் கூட டைல்ஸோ, மார்பிளோ கிடையாது.

கலைசொட்டும் தஞ்சாவூர் பெயிண்டிங்கும், தட்டும் தான் மாட்டப்பட்டிருந்தன. வாசலுக்கு வந்த கனகம் பெருக்கி, தெளித்து கோலம் போட்டாள். இந்த மாதிரி வேலைகளை அந்தக் குடும்பத்துப் பெண்களை தவிர வேறு யாரும் செய்யக் கூடாதென்பது ராஜாராமனின் உத்தரவு. குனிந்து, வளைந்து வேலை செய்வதை விடவும் சிறப்பான உடற்பயிற்சி வேறு இருக்கிறதா என்ன? என்பார். துணி துவைப்பதற்கு மட்டும் தான், அதுவும் கனகத்திற்கு ஆஸ்துமா தொந்தரவு இருப்பது தெரிந்த பிறகுதான் ஒரு ஆளைப் போட்டார். மற்றபடி எல்லா வேலைகளையும் அந்த வீட்டுப் பெண்கள் தான் செய்தாக வேண்டும்.

பெண்கள் என்றால் அந்த வீட்டைப் பொறுத்தவரை கனகமும், மகள் நளினியும் தான். நளினி கல்லூரியில் பி.பி.ஏ. படித்துக் கொண்டிருக்கிறாள்.



அவள் இந்த ஜெனரேஷன் பெண் என்பதாலோ, கல்லூரியில் படிப்பதாலோ எந்த சலுகையும் காட்டப்படவில்லை. இந்தக் மணிக்குள் எழுந்தாக வேண்டும். அம்மாவுக்கு ஒத்தாசையாக, கல்லூரிக்குப் போவதற்குள் சமையலில் உதவியாக இருக்க வேண்டும். நைட்டியை இரவில் மட்டுமே அணிய வேண்டும். அதுவும் அறைக்குள் மட்டுமே அணிய வேண்டும்... அதுவும் என்றதை மட்டும் அந்த அழிச்சாட்டியம் பண்ணி விட்டுத்தான் அணிய அனுமதி வாங்கி விட்டாள் நளினி. ஆனால், வெளியாட்கள் யாரேனும் வீட்டிற்குள் வந்தால்... கண்டிப்பாய் புடவையிலோ, சுடிதாரிலோ தான் நடமாட வேண்டும். ஜீன்ஸ் போன்ற மாடர்ன் உடைகளுக்கு அறவே தடையுத்தரவு போடப்பட்டுள்ளது. முக்கியமான விசேஷ நாட்களிலாவது நளினி பூஜையறையில் அம்மன் ஸ்துதி பாடல்களை பாட வேண்டும்.

ஆரம்பத்தில் சிரமப்பட்டாலும் நளினிக்கு பாரம்பரியமான கட்டுப்பாடுகள் பிடித்துப் போய் விட்டன.

கனகம் நளினியின் அறையை நோக்கி வந்தாள். கதவைத் தட்ட எண்ணி ஓங்கியவள் கதவு திறக்கவும் ஆச்சரியப்பட்டாள்.

"என்ன நளினி... அதுக்குள்ள எழுந்திரிச்சிட்டே?"

"என்னம்மா பண்றது? அழகான கனவு. ஜெயம் ரவி 'நீ என் நீ நளினி, நீ என் நீ நளினி'ன்னு கொஞ்சி ரோஜா பூவை நீட்டிட்டு ஓடி வந்து என்னை அடம் கொஞ்சம் விட்டுருந்தா நானும் போனாப் போகட்டும்னு சரின்னு சொல்லியிருப்பேன். விடியறா ராஜாராமன் அதான் கட்டுல விழிச்சிட்டேன்!"

"அடிப்பாவி... அப்பாவைப் பேர் சொல்லி கூப்பிடறே?"

"கூப்பிடலியே... பேரை தானே சொன்னேன்? நீதாம்மா சொல்லக் கூடாது. நான் சொல்லலாம். ஆனா, நான் என் புருஷன் பேரை சொல்லுவேன்ப்பா. என் பேராவே சொல்றேன். புருஷன் பேரை சொல்ல மாட்டேனா?"

"எவரா? என்னடி தலையில குண்டைத் தூக்கிப் போடறே? யார்... யார் அது?" பதறினாள்.

"இப்பதான் சொன்னேனம்மா... ஜெயம் ரவின்னு..."

"அடி செருப்பால!"

"போம்மா... உன் புருஷனாலேயே நிறைய விஷயங்களை தியாகம் பண்ண வேண்டியிருக்கு!"

"கொழுப்பு ஜாஸ்தியாயிடுச்சி... வேறென்ன?"

"என்னை மாதிரி எழுந்தும் போனது போதும் யாரையாவது காட்டுப் பார்க்கலாம். உன் புருஷன் ரொம்ப கொஞ்சம் பண்றார். இந்த காலத்துப் பொண்ணுங்களை என்னை மாதிரி யாராவது வீட்டு வேலை செய்றாங்களா? பாவம் நளினி... அவளை காலை வீட்டைப் பூட்டி பாடம் வீட்டை, சீக்கிரமாவே எழுப்பி, பாத்திரம் தேய்க்க, சமையல் வேலை செய்யச் சொல்லி கஷ்டப்படுத்தக்கூடாது. கேக்கறதுக்கு யாருமே இல்லையா? இந்த அம்மா, வேலைக்காரி எல்லாம் பிரமனின் சித்தமாக தப்பு எல்லாம் மட்டும் தான் வச்சிருக்காளா? என்னை மாதிரி அப்பாவி பெண்களை காப்பாத்தவும் வேலை வைக்கும் அமைச்சிருக்கக் கூடாதா?" வேதனை பீறிட கட்டினாள் நளினி.

"என்ன சத்தம் அங்கே?" கேட்டுக் கொண்டே இடுப்பு கட்டியபடி அறையைத் திறந்து வெளியில் வந்தார் ராஜாராமன்.

"அ...அ... அதெல்லாம் ஒண்ணுமில்லேப்பா... என்ன ஏதுன்னு செய்யணும்னு அம்மாகிட்டே புலம்பிட்டு பண்ணேன்..."

"வயசு பொண்ணு இப்படி சத்தமா பேசக் கூடாது"

"ச...சரிப்பா...!"

"பவளமல்லி வேணும்..."

"பறிச்சு தொடுத்து தரேன்ப்பா...!"

"சரி!" என்றவர் பாத்ரூமுக்குள் போய் விட்டார்.

"கனகம்... ஆனாலும் உன் புருஷன் ரொம்ப மோசம்!"

"உடம்பு முழுக்க திமிரு... சீக்கிரம் வா... வேலையிருக்கு!" என்றாள் அவள் குறும்பை ரசித்தபடி.

கிச்சனுக்கு வந்தார்கள்.

சிங்கில் இருந்த பாத்திரங்களை அழுக்கு போக தேய்க்கப் போனவளை தடுத்தாள் கனகம்.

"நான் கழுவிக்கறேன். நீ போய் முதல்ல பவளமல்லியை பறிச்சிட்டு வந்துடு!"

"எதுக்கும்மா... இப்படி எல்லாப் பூச்செடிகளையும் வீட்டுலேயே வளர்த்து உயிரை வாங்கணும்? கடையில காசுக் குடுத்து வாங்கக் கூடாதா? அதுவும் கொஞ்ச நஞ்சப் பூவாப் பூக்குது... யம்மாடி...!" பெருமையாய் சலித்துக் கொண்டே... பின்னால் கூடையோடு தோட்டத்தில் இறங்கினாள்.

வெளிச்சம் ஆறாகத் தவங்கிலிருந்தது.

மழையில் குளித்திருந்த மரங்களும் பூச்செடிகளும் ரம்மியமாய் காட்சியளித்தன.

நளினி அம்மாவிடம் விருப்பமாக வாயாடுவாளே ஒழிய... அவளுக்கு உண்மையிலேயே மிகப் பிடித்தமான இடம் அந்த வீடு தான். மனம் சஞ்சலப்படும் போதும் சரி, சந்தோஷப் படும்போதும் சரி... அவள் அடைக்கலமாவது தோட்டத்தில் தான்!

வீட்டைச் சுற்றிலும் காம்பவுண்ட் சுவர் ஓரமாய் எல்லா வகை பழ மரங்களும் வரிசைக் கட்டி நின்றிருந்தது. நான்கு வகை மாமரம், சப்போட்டா, கொய்யா, பலா, வாழை, நெல்லி, ஆரஞ்சு, பேரிச்சை என்று எதையும் விட்டு வைக்கவில்லை.

நடுவில் வரிசை வரிசையாய் ரோஜா, மல்லி, கனகாம்பரம், சம்பங்கி, பவளமல்லி, சங்கு புஷ்பம், மரிக்கொழுந்து என்று வாசனை அந்த ஏரியாவையே நிரப்பும். தினமும் மாலைக் தொடுத்து போடும் அளவிற்கு பூக்கள் பூக்கும்.

பெயர் தெரியாத பூக்களையும், செடிகளையும் வளர்ப்பதில் ராஜாராமனுக்கு இஷ்டமில்லை.

ஒவ்வொன்றையும் ரசனையுடன் பதிப்பதில் அலாதி ஆர்வம் நளினிக்கு.

மழைக்காற்றில் பவளமல்லி மரத்திலிருந்து கீழே உதிர்ந்து தெறித்திருந்தன. வாசம் நாசியை நிரப்பியது. அவற்றை வேகமாய் பொறுக்கி கூடையில் போட்டுக் கொண்டவள், கைக்கு வாகான மரத்தைப் பிடித்து உலுக்க... மேலும் தெறித்து... பூக்களோடு, தண்ணீர்த் துளிகளும்!

பூக்கூடையோடு திரும்புவதற்குள் அம்மா ஏராளமான வேலைகளை முடித்து விட்டிருந்தாள்.

"இந்தா நளினி... ரெடியா வச்சிருக்கேன் பார்... சட்னிக்கு அரைச்சிக் கொடுத்திடு!"

"ஒரு கப் காபி குடுத்தா தாங்க்ஸ் சொல்லுவேன் கனகம்!"

"உதைப்பேன்... வாய் நீளுது! குளிக்காம உன்னை இத்தனை வேலையும் செய்ய விட்டது தெரிஞ்சாலே போதும் உங்கப்பாவுக்கு. வீடு ரெண்டுபட்டும். முதல்ல குளிச்சிட்டு வா!"

"மாமியாரா... அம்மாவா நீ? அநியாயம் பண்றியே... கனகம்."

"உங்கப்பா உன்னை இந்தக் கோலத்துல பார்க்கறதுக்குள்ளே... அரைச்சிட்டு கிளம்பு. காபி போட்டு வைக்கறேன்." கனகம் காட்டாத்துணியை போட்டு இட்லி மாவை எடுத்தாள்.

நளினி முணுமுணுத்துக் கொண்டே குளிக்கச் சென்ற பிறகு, பவளமல்லியை தொடுத்து, கூடவே முதல் நாளே பறித்து தொடுத்து வைத்திருந்த சம்பங்கி பூவை பிரிட்ஜிலிருந்து எடுத்து பூஜையறையில் வைத்தாள்.

சற்று நேரத்தில் பூஜையறையில் அமர்ந்தார் ராஜாராமன்.

அவர் பூஜையை முடித்து விட்டு வருவதற்குள் எல்லாமே தயாராக இருக்க வேண்டும். கனகம் சுறுசுறுப்பானாள்.

"அம்மா!"

திரும்பிப் பார்த்து புன்னகைத்தாள்!

எக்சர்சைஸ் செய்து முடித்து விட்டு, வியர்வையை துடைத்தபடி மொட்டை மாடியிலிருந்து வந்திருந்தான் அரவிந்த்.




"என்ன அரவிந்த்... மழைநாளில் கூட எக்சர்சைஸ் பண்றானா?"

"தப்பே இல்லையே... எங்கே உன் வாயுக்கு ஈட்டிஷ் தானோ?"

"காபிக்கு தெருதி தெருதி... [illegible] இப்பதான் குளிக்கப் போனா..."

"அவசியமான கட்டுப்பாடுகள் ஓக்கேதான்! அனாவசியமான கட்டுப்பாடுகள் எதுக்கம்மா?"

## கரும்புள்ளி மறைய

பெண்களுக்கு முகம், கை, கால்களில் ஏற்படும் கரும்புள்ளிகள் அவர்கள் அழகையே கெடுப்பதாக அமையும். ஆனால் இதுபற்றி கவலைப்படத் தேவை இல்லை.

ஒரு டேபிள் ஸ்பூன் பாதாம் பவுடர், ஒரு டீஸ்பூன் கடலைமாவு இவற்றுடன் அரை டீஸ்பூன் எலுமிச்சைச் சாறு, அதே அளவு வெள்ளரிச்சாறு ஆகிய எல்லாவற்றையும் கலந்து கரும்புள்ளிகள் உள்ள இடத்தில் தேய்க்க வேண்டும். 15 நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான நீரால் கழுவ வேண்டும்.

இப்படி தொடர்ந்து இரண்டு வாரங்கள் செய்து வந்தால் கரும்புள்ளி போயே போச்சு.



நளினியோட படிப்புக்கானதும், பழக்க வழக்கங்களும் இந்த காலத்துப் பொண்ணுங்களோட ஒப்பிட்டுப் பார்க்க [illegible] ஒரு விஷயங்களை [illegible] தேவையில்லை!"

"புரிஞ்சுதும்மா. அதை உங்கப்பாகிட்டே எடுத்து சொல்றது யார் குளிச்சிட்டு வா அரவிந்த்... டிபன் ரெடியாயிடுச்சு."

"இட்லி வேகற வாசனை மொட்டை மாடிக்கு வருது [illegible]"

"உனக்கெப்படித் தெரியும்?" என்றாள் வியப்பாய்.

"இவளோட்டுக்கு எத்த மாதிரி நாக்குக்கு ருசியா சமைக்கப் போற உன்னை விட்டா யாருமா இருக்கா அப்புறம்... ஒரு முக்கிய மான விஷயம் சொல்லணும்மா!"

"என்னப்பா?"

"மாடிப் தாய் யாரும் யூஸ் பண்றதில்லே. சும்மா தான் இருக்கு. வாடகைக்கு விட்டா என்ன? என் பிரெண்டோட அக்கா ஃபேமிலிக்கு வீடு வேணுமாம். வாடகை எட்டாயிரம் தர்றேன்கிறாங்க. அப்பாக்கிட்டே கேட்டு சொல்லும்மா!"

"வேற வினையே வேண்டாம்."



"அம்மா!"

"அவரைப் பத்தி எனக்கு தானே தெரியும். ரொம்ப ஆசையா, பார்த்து பார்த்து கட்டின வீடு இது. அந்நிய ஆட்கள் வந்து புழங்கறதை விரும்ப மாட்டார்!"

"அப்ப எதுக்கும்மா இவ்ளோப் பெரிசாக் கட்டணும்? பெவிலியன் மாதிரி பண்றது கஷ்டமாயில்லே?"

"இப்போ அரவிந்தா... அது பெரிய விஷயமே இல்லை. நீயும், நளினியும், உங்களோட குழந்தைகளோட பேரக் குழந்தைகளோட வழிவழியா இதே வீட்ல ஒண்ணா வாழணும்ங்கிற கனவுல பண்ணிக் கட்டினார். ஒருவேளை நீயும் கூட எங்கேயாவது கோவிச்சிட்டு தனிக்குடித்தனம் போக ஆசைப்பட்டா... இங்கேயே மாடியில தனியா இருந்துக்கலாம். எந்தக் காரணத்தை முன்னிட்டும் என் பிள்ளைங்க இந்த வீட்டைப் போய்ட்டு கூடாதுன்னு சொல்வார் உங்கப்பா!"

அரவிந்த் அதைக் கேட்டு உறைந்துப் போய் நின்றான்.

"பல இடங்கள்ல உங்கப்பா நிலங்களை வாங்கி சொத்து சேர்த்திருக்காரும்... விற்றது இருக்கறது இது ஒண்ணுதான். இது உனக்கும் நளினிக்கும்! உனக்குக்கூடத்து உங்க பிள்ளைகளுக்குன்னு எழுதி வச்சிருக்கார். கூட்டுக் குடும்பங்கள் காணாமலேயே போய்க்கிட்டிருக்கு... அதை நம்ம பிள்ளைங்க சரிப் பண்ணட்டும்ன்னார்... நளினிக்கு கூட முடிஞ்சவரை வீட்டோட மாப்பிள்ளையா இருக்கற மாதிரி தான் வரன் தேடறார். அப்படி அமையலேன்னாலும் அவளோட மாமனார், மாமியார் காலத்துக்குப் பிறகு இந்த வீட்டுக்கு வந்து தான் குடும்பம் நடத்தணும்னு கண்டிஷனோட கல்யாணம் பண்ணி வைப்பார்!"

அரவிந்தன் நெகிழ்ந்துப் போனான். ஆனாலும் இதயத்தின் இடது மூலையில் முள்ளையிட்டிருந்த பயம் இன்னும் அகிலாத்தது மிதுமா?

* * *

அடிதார் துப்பட்டாவை கவனமாய் பின் பண்ணிக் கொண்டு, அம்மா கொடுத்த லஞ்ச் பாக்ஸை பேகில் வைத்து, "வர்றேன்மா!" என்று கையசைத்து விட்டு நடந்தாள் நளினி.

தாழ்வாரத்தில் சேரில் அமர்ந்திருந்த ராஜாராமன் ஏதோ யோசனையில் இருந்தார்.

"அ... அப்பா... போயிட்டு வர்றேன்ப்பா!"

"பத்திரமா போய் வா... அம்மாடி ஒரு [illegible]"

"என்னம்மா?"

"அந்தப் பையனை வரச்சொல்லு... பேசி முடிச்சிடலாம்"

"ம... எந்தப் பையனை?" முகம் வெளிறியது [illegible].

"கனவு கண்டுகிட்டிருந்தியே... [illegible] ரவியோ, என்னவோ சொன்னியே..."

"[illegible]... அப்பா, அவர் [illegible] நான் அம்மாகிட்ட விளையாட்டுக்கு..." [illegible] விட்டாள்.

"தெரியும்... போ... மனசை [illegible] நல்லது செய்ய நாங்க இருக்கிறோம்...ம்"

"ம்"

விட்டால் போதும் என்று வேகமாய் நடந்து வெளியேறி விட்டாள்.

ராஜாராமன் வாய்விட்டு சிரித்தார்.

"[illegible]"

* * *

"[illegible]!"

"என்னங்க?"

"என் கார் சாவிய எடுத்துட்டு வா!"

"சரிங்க!"

உள்ளறைக்குச் சென்று எடுத்துக் கொண்டு வர [illegible] பிடித்தது.

"இந்தாங்க!"

"[illegible] வேலை இருக்கு. மதியம் சாப்பாட்டுக்கு வரமாட்டேன். அர்விந்தன் [illegible]?"

"[illegible] இருக்கான்!"

"நம்ம வீட்ல [illegible] பொண்ணோட பேர் என்ன?"

ஏன் கேட்கிறார் என்றும் புரியாமல் "மேரி" என்றாள்.

"வேலை முடிச்சிட்டுப் போயிட்டாளா?"

"இன்னும் இல்லைங்க... துணியக் காயப் போட்டுட்டிருக்கா"

"அவளை வரச் சொல்லு!"

சற்று நேரத்தில் அவளை அழைத்து வந்தாள் கமலம்.

"ஐயா... வணக்கமுங்க!"

"நல்லதும்மா... இந்தா... இதிலே மூணு மாச சம்பளம் இருக்கு!"

"எதுக்குங்க? ஒண்ணாந்தேதி வர இன்னும் [illegible] நாள் இருக்கே?"

"தெரியும்மா... இனிமே நீ வேலைக்கு வரவேணாம்!"

"ஐயா... என்ன இது திடீர்னு?"

"ஆ... உன்கிட்ட [illegible] சம்பளம் சேர்த்தே தர்றேன். புதிய வேலை [illegible]"

மேரி கண்கலங்க வாங்கிக் கொண்டு வெளியேற, கமலம் கணவரை [illegible] பார்த்தாள்.

"வேற ஆளை போட்டுக்கலாம். ஏற்பாடு பண்ணியிருக்கேன்."

"இவ நல்லவதானே... அத்தான்..."

"வேலை சுத்தம் தான்... ஒத்துக்கிறேன். ஆனா நடவடிக்கை சுத்தமில்லையே..."

"..........??"

"ஆமாம் கமலம். இந்த மேரியை நாலஞ்சு இடத்தில வேற வேற ஆண்களோட நெருக்கமா பார்த்திருக்கேன். [illegible] சம்பாதிக்கிறாள். இதையும் நாம விட்டுவைக்கலாம். வேலை செய்யறா. அப்புறம் [illegible] மானங்கெட்ட பொழைப்பு? அவளோட சாத்துக் கூட இந்த வீட்டில பட வேண்டாம். தோணுச்சு... வரட்டுமா?" என்று சுப்பிரமணி நடந்து வெளியில் வந்தார் ராஜாராமன்.

வழியனுப்புக் கூடவே சென்றாள் கமலம்.

அத்தனையும் பார்த்துக் கொண்டிருந்த அர்விந்தன் தன் தந்தையை நினைத்து கர்வப்பட்டான்.

ராஜாராமனுக்கு அறுபதைத் தொடும் வயது. உயரமாய், திடமாய், கம்பீரமான தோற்றம். மடிப்புக் கலையாத வெள்ளையில் வேட்டி சட்டை தான் அவருக்கு பிடித்தமானது. வேறு வண்ணங்களில் உடுத்த மாட்டார். [illegible] ரோட்டிலும் [illegible] ரோட்டிலுமாய் மூன்று மருத்துவமனைகள் உண்டு. [illegible]திலும், மாம்பலத்திலும் நான்கு பெரிய கடைகள். தேனாம்பேட்டை கடைகள் என்பதால் லட்சங்கள் புரண்டன. ராஜாராமனுக்கு மேற்பார்வை செய்து பணத்தை பட்டுவாடா செய்வதற்கே நேரம் சரியாக இருந்தது. அவரிடம் முப்பது பேர் வேலை செய்கிறார்கள். அவர் நேர்மையானவர் என்பதால்... அதையே மற்றவர்களிடமும் எதிர்பார்ப்பார்.

அர்விந்தன் பைக்கை உசுப்பி விர்ரெனப் புறப்பட்டான்.

* * *

கடார் தோட்டத்தைப் போல இருந்தது அந்த நிறுவனம். முழுக்க ஏசியால் நிரப்பப்பட்ட ஆபீசில் அல்ட்ரா மாடர்ன் ஆண்களும், பெண்களும் முகத்தில் அதிபக்தி



சாவித்தனத்தோடு நடமாடிக் கொண்டிருந்தனர்.

அந்த சைவ்மேடைக் [illegible] தேத்தி விட்டு [illegible] சென்றான் அர்விந்தன். அவன் அங்கு [illegible] அளவிட்டு பணியிருந்தான்.

உள்ளே இழுத்தவனை அத்தனை கண்களும் மொய்த்தன. அதில் என்பது சதவிகிதம் பெண்களோடது.

"ஹாய் அர்விந்த்... குட்மார்னிங்!"

"ஹாய்... குட்மார்னிங்!"

"வணக்கம் தம்பி..."

"குட்மார்னிங் [illegible]..."

இப்படி வகைவகையாய் பெண்கள் செய்த [illegible] புன்னகைகளை பதிலாகத் தந்து விட்டு தன் கேபினுக்குள் நுழைந்த அர்விந்த்... பக்கத்து கேபினில் அமர்ந்திருந்த மிதுனாவைப் பார்த்து மென்மையாய் சிரித்தான்.

அவனுக்கு அவளைப் பார்த்ததும் [illegible] சாப்பிட்ட குளிர்ச்சி.

அர்விந்தன் அந்த அலுவலகத்தில் எந்தப் பெண்ணிடமும் அநாவசியமாய் தனித்து [illegible] பேசமாட்டான்.

அங்கு ஆரம்ப சம்பளமே இருபதாயிரம் தான். இதனால் இளையவர்களின் ஆட்டமும், கொண்டாட்டமும் மிதமிஞ்சி இருந்தது. 'வீக் எண்ட் செலிப்ரேஷன்' என்ற பெயரில் அவர்கள் அடிக்கும் கொட்டம் நம் பண்பாடு, கலாசாரத்தை எல்லாம் குழி தோண்டிப் புதைத்துக் கொண்டிருந்தன.

அந்த சமாசாரத்தோடு ஒட்டாமல் இருந்த மிதுனாவை அர்விந்தனும், அர்விந்தனை மிதுனாவும் வியப்புடன் பார்த்துக் கொண்டனர்.




மிதுனா அந்த அலுவலகத்தில் ஜாய்ன் பண்ணுவதற்கு முன்பே அர்விந்தனை, அவனின் செய்கையைப் பார்த்து வியந்திருக்கிறாள்.

ஒரு நாள் அவன் ஸ்பென்சர் பிளாசாவில் ஷாப்பிங் பண்ணிக் கொண்டிருந்த போது, ஒரு கர்ப்பிணிப் பெண், ஒரு கையில் நான்கு வயது சிறுவனையும், இன்னொரு கையில் ஷாப்பிங் செய்ததில் நான்கைந்து கேரிபேக்குகளையும் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு சிரமப்பட்டு நடந்துக் கொண்டிருந்த போது தான்...

அந்த இளைஞன் அவள் முன் முளைத்தான். [illegible] கட்டிக் கொண்டு, மிக அழகாய், கம்பீரமாய் இருந்த அவன், அழகான ஆங்கிலத்தில் "நான் உங்களுக்கு உதவுகிறேன் மேடம்" என்று அவள் பைகளைப் பெற்றுக் கொண்டு கார் வரை கொண்டுச் சென்று வைத்து, அவள் நன்றியைக் கூட பெற்றுக் கொள்ளும் நேரமின்றி திரும்பியவன் தன் வண்டியில் ஏறிப் பறந்து விட்டான். இதுவே வேறு ஆளாக இருந்திருந்தால் வழிசல் புன்னகையுடன் தன் பெயரை கூறி, விசிட்டிங் கார்டையும் வழங்கிட்டிருப்பான். இனித்து எதிர்பார்க்கும் விதமாகவும் பேசிப் பிரிந்தே நகர்வான்.

மிதுனா அவன் செய்கையை கண்டு பிரமித்துப் போனாள். அவன் புற அழகை விட மன அழகு பேரழகாய் காட்டியது.

'யாரவன்?' என்ற கேள்வியும் முளைத்தது.

அடுத்து வேலை கிடைத்து அவன் இருக்கும் ஆபீஸிலேயே... அதுவும் அவனுக்கு கீழே பணிபுரியும் வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கவேயில்லை.

மிதுனாவும் ஆரம்பத்தில் மற்றப் பெண்களைப் போல ஜீன்ஸ், டாப்ஸ், விரித்துப் போட்ட கூந்தலுடன் தான் வந்தாள்.

எனினும் மற்றவர்களைப் போல அலையாது தன் வேலையை மட்டுமே செய்த மிதுனா அர்விந்தனின் கவனிப்பாளையில் விழுந்தாள். அங்குள்ள பெண்களில் பலரோ அர்விந்த [illegible] விரிப்பார்கள். அவன் யாரிடமும் சிக்கவில்லை. ஆனால், ஜீன்ஸ் போட்ட சுந்தரிகளால் மனம் கவர்ந்தாள் மிதுனா.

ஒருநாள் அவனதான் கேட்டான்.

"உங்களுக்கு சல்வார், சேலை இதெல்லாம் பிடிக்காதா மிதுனா?"

"ஏன் கேட்கறீங்க?"

"இந்த டிரஸ்ஸை விட அந்த டிரஸ் உங்களுக்கு நல்லாயிருக்கும்னு தோணுது" என்றான் தைரியத்தை வரவழைத்து.

இது போதாதா மிதுனாவுக்கு?

மறுநாளிலிருந்து ஆளே மாறிவிட்டாள். ஜீன்ஸை தொடுவதேயில்லை.

மெதுவாக அவர்கள் மனதில் பூத்திருந்த காதலை பொத்தி வைக்க முடியவில்லை.


இது நாள் வரை அவர்களின் காதல் அந்த அலுவலகத்தில் யாருக்கும் தெரியாது. அதற்கு காரணமும் இருந்தது.

அர்விந்த் கட்டுப்பாடான, பண்பான

சூழ்நிலையில் வளர்ந்தவன். அதனால் அவளுடன் ஊர் சுற்றுவதோ, தொட்டுப் பேசுவதோ கிடையாது. ஆபீஸில் சாதாரணமாகப் பேசிக் கொள்வதோடு சரி. அதில் காதல் இருக்காது.

அவனைப் பொறுத்தவரையும் பெற்றோர் பார்த்து சம்மதம் சொல்லும் பெண்ணைத்தான் மனைவியாக்கிக் கொள்ள வேண்டும் என்று உறுதியுடன் இருந்தான் மிருணாளைப் பார்க்கும் வரை!

பெற்றோரிடமும் எப்படியாவது பேசி மிருணாளை மனைவியாக் கிக் கொள்வது என்று தீர்மானித்திருந்தாலும்... 'நாளை என்ன வேண்டுமானாலும் நடக்கலாம்!



நீயோ நானோ காதலை மறக்கலாம். ஒதுக்கலாம். இன்னொரு வாழ்க்கைக்கு தயாராக வேண்டி இருக்கலாம். அப்போது உறுத்தல் இல்லாமல் அவரவர் வாழ்க்கையை வாழ வேண்டியதாம் நாம் நண்பர்கள். மிக மிக மெல்லிய இழையால் காதலால் பிணைக்கப்பட்டிருக்கிறோம். அதை அலோபாவுமேயின் நூலோ, உணர்வுகள் நூலோ இருக்க வேண்டாமே! காதலில் தெரிந்து, கணவன் மனைவியாய் ஆன பிறகு சிறு இடைவெளிக் கூட இல்லாமல் விழுந்து விழுந்து காதலிப்போம்' என்றான்.

இந்த காலத்தில் இப்படி ஒரு ஆணா? காதலே இல்லாமல் வெறும் நண்பர்களாய், அதுவும் ஒரே

அலுவலகத்தில் பணிபுரிகிறவர்கள் என்ற தகுதி இருந்தால் கூட போதும். வீக் எண்ட் என்ற பெயரில் குடித்து, கும்மாளம் போட்டு, சகலமும் பகிர்ந்து வாழும் இளைஞர்கள் மத்தியில் இப்படியும் ஓர் ஆண்!
அதுவே மிதுனாவை காதல் வயப்படியாக்கி விட்டது.

* * *

இரவு கடந்தது.
ஆழ்ந்த நாவலில் மூழ்கியிருந்த மிதுனா, அதை தூரப்பு எறிந்துவிட்டு கதவைத் திறந்தாள்.
அம்மா நின்றிருந்தாள்... பால் டம்ளரோடு!
"தாங்க்ஸ் மம்மி" அங்கேயே நின்று கை நீட்டினாள்.
"என்ன மிதுனா... டிஸ்டர்ப் பண்ணாதே போறதுக்கறியா?"
"ஐயோ... என்ன மம்மி நீங்க?"
"பேசணுமே!"
"வாங்க மம்மி!"
கட்டிலின் நுனியில் அமர்ந்த சாரங்கி... தொடை வரை மட்டுமே நீண்டிருந்த குட்டை நைட்டி அணிந்திருந்தாள். முட்டியிலிருந்து கால் வரை பளபளவென இறுட்சியாக, கவர்ச்சியாய் இருந்தது.
அம்மாவை நிமிர்ந்துப் பார்க்கவே கஷ்டமாக இருந்தது.
'வயதுக்கேத்த மாதிரி உடை அணியக் கூடாதா இந்த மம்மி... ச்சே!'
"எப்படியிருக்கு ஆபீஸ் லைஃப்?"
"ரொம்ப இன்ட்ரஸ்டிங்கா இருக்கு"
"நீ யாரையாவது லவ் பண்றியா மிதுனா?"
திக்கென்றது.
"எப்படித் தெரியும்?"
"இ-இல்லையே... யா...யார் சொன்னது?"
"அதுக்கேன் பதர்றே? யாரும் சொல்லலே. இருந்தா சொல்லு... முடிச்சிடலாம். லவ் ஒன்னும் தப்பான வார்த்தை இல்லையே!"
'முதல்ல அர்வித்தன் வீட்டில் சம்மதிக்கட்டும். அதுக்குப் பிறகு சொல்லிக்கலாம். அம்மா ஏன் இவ்ளோ போல்டா இருக்காங்க!'
"இல்லை மம்மி..."
"அப்ப... அலையன்ஸ் பார்க்கட்டுமா?"
"இப்பவா, கொஞ்ச நாள் போகட்டுமே மம்மி... ப்ளீஸ்!"
"எனக்கும் ஒரு முக்கியமான வேலையிருக்கு மிதுனா. உனக்கு கல்யாணம் முடிச்சிட்டேனா... அந்த வேலையும் முடியும்... கொஞ்ச நாள்னா... எவ்ளோ? ஒரு ஆறு மாசம்?"
"ம்...ம்...!"
"சரி... தூங்கு... குட்நைட்!"
"மம்மி..."
"என்ன?"
"இது... இந்த டிரஸ்... வேணாமே!"
"நான்சென்ஸ்! நான்தானே போட்டுருக்கேன்? உனக்கென்ன கஷ்டம்? என் வாழ்க்கைய நான் ரசிச்சு வாழ்ந்துட்டிருக்கேன். இதுலே அடுத்தவங்க மூக்கை நுழைக்கறது எனக்குப் பிடிக்காது. என் சுதந்திரத்துல நீ தலையிடாதே... மைண்ட் இட்!" கோபமாகப் பேசிவிட்டு வெளியேறினாள்.
கதவடைத்துப் போனாள்.
'அடுத்தவங்களா... நானா?!'

* * *

மற்றொரு நாள்!
உறங்க முயற்சித்துக் கொண்டிருந்த மிதுனாவை கதவைத் திறக்க வைத்தது பெற்றோரின் சப்தம்.
ஹாலில் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர் விஷ்ணுவும் சாரங்கியும்.
"முதல்ல... ஆஃப் பண்ணு!" கோபமாய் கத்தினார் விஷ்ணு.
"முடியாது மிஸ்டர் விஷ்ணு! இது என் இஷ்டம். எனக்குப் பிடிச்சதை நான் செய்வேன்."
"உனக்குப் பிடிச்சதெல்லாம் முரண்பாடான விஷயமா இருக்கே சாரங்கி? வயசுப் பொண்ணு இருக்கிற வீட்ல... நெட்ல... அதுவும் ஹால்ல உட்கார்ந்துக்கிட்டு ஆபாச க்ளிப்பிங்க்ஸ் பார்க்கிறே!"
"என்ன தப்பிருக்கு? மிதுனா என்ன சின்னக் குழந்தையா? அவ இந்த காலத்துப் பொண்ணு. இதை எல்லாம் பார்க்காமலா இருந்திருப்பா?"
"சீ... வாய மூடு... பொறுப்பான அம்மா மாதிரியா பேசறே? அலைஞ்சிபோடி... இந்த வயசுல அலையுறியே!" ஆதங்கமும், கோபமும் வெடித்தன.
"ஆமாம்... அலையுறேன் தான்! அதுக்கான தகுதி எனக்கு இருக்கு மிஸ்டர் விஷ்ணு.. ஆனா நீ?"
"வேணாம் சாரங்கி... லிமிட் தாண்டாதே. இல்லேன்னா... என்னை மிருகமாதான் பார்ப்பே!"
"இப்ப மட்டுமென்ன நீ மனுஷனாவா நடந்துக்கறே? நீ செய்யற தப்பெல்லாம் எனக்குத் தெரியாதுன்னா நினைச்சே? ஆம்பளைக்கு திமிர் இருக்கலாம். பொம்பளைக்கு



இருக்கக் கூடாதா? மிதுனாவுக்கு கல்யாணம் நடக்கட்டும். அப்ப உனக்கு மறக்க முடியாத பாடத்தை கத்துத் தர்றேன்!"
மிதுனாவுக்கு அவர்கள் பேச்சின் சாராம்சம் புரியவில்லை. மெல்ல கதவை சாத்தி விட்டு கட்டிலில் தொப்பென விழுந்தாள்.
சில மாதங்களாகவே அவர்களுக்குள் அடிக்கடி சண்டை வருகிறது. இரண்டு வருடங்களாக தனித்தனி அறைகளில் தான் படுத்துக் கொள்கிறனர்.
சில வீடுகளில் பிள்ளைகள் வளர்ந்து விட்டால் அம்மா, அப்பா தனித்தனியாக படுக்க ஆரம்பிக்கிறார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறாள். இவர்களையும் அப்படித்தான் நினைத்தாள். ஆனால் காரணம் அதுவல்ல என்று புரிந்து விட்டது.
"வேறென்ன?"
மிதுனா அவர்கள் சண்டைக்குள் நுழையவும் விரும்பவில்லை. தான் தனித்து விடப்பட்டது போல் உணர்ந்தாள்.
அழ வேண்டும் போல இருந்தது. அர்வித்தனிடம் பேச ஆவல் உண்டானது. அவன் குரல் கேட்டால் போதும் என்றிருந்தது.
அவனின் செல்போனுக்கு தொடர்பு கொண்டாள்.




"**கா**லையிலே ஆறு மணிக்கே சரக்கு வந்து சேர்ந்திடும்கறான். அதனால... நீ சீக்கிரமே கடைக்குப் போய்டு வேணு... நான் எட்டு மணிக்கு வந்திடறேன். தேவனையும், கதிரையும் கூப்பிட்டுக்க...! சரக்கு வந்து சேர்ந்ததும் எனக்கு ஒரு போன் அடிச்சிடு!"
ராஜாராமன் போனிலேயே உத்தரவுகளை பிறப்பித்து விட்டு செல்போனை அணைத்து பக்கத்தில் வைத்துக் கொண்டார்.
ஊஞ்சல் மிதமான வேகத்தில் ஆடிக் கொண்டிருந்தது. கனகம் பக்கத்தில் சுவரோரமாய் சாய்ந்தபடி நின்றிருந்தாள்.
"வழக்கத்தை விட நாளைக் காலையிலே சீக்கிரமே போகணும். நீ எந்திரிக்கறப்பவே... என்னையும் எழுப்பி விட்டு!"
"சரிங்க!"
"மணி பத்தாகுது.. தன்வி ரூம்ல இன்னும் ஏன் லைட் எரியுது?"
"படிச்சிட்டிருக்காங்க.."
"படிச்சது போதும். சீக்கிரம் படுத்து சீக்கிரம் எந்திரிக்க சொல்லு!"
"சரிங்க!"
"புதுசா வந்திருக்கிற வேலைக்காரி ஒழுங்கா இருக்காங்களா? அ... அர்வித் எங்கே போறே?"
"மொட்டை மாடிக்குப்பா!" நடந்தவன் நின்றான்.
"ஏ.. இன்னைக்கு பவுர்ணமியில்லே?" என்று சிரித்தவர், "உன்கிட்ட கொஞ்சம் பேசணுமே" என்றார்.
"சொல்லுங்கப்பா!"
"தன்விக்கு அருமையா ஒரு வரன் வந்திருக்குப்பா. பையன் சாப்ட்வேர் என்ஜினியர். நல்ல பையன். விசாரிச்சுட்டேன். நம்ம சின்னு சொன்னா... அடுத்த வாரமே பொண்ணு பார்க்க வந்திடுவாங்க. தன்விக்கும் ரெண்டு மாசத்துல படிப்பு முடிஞ்சிடுதில்லையா?"
"ஆமாம்ப்பா... கேட்கவே சந்தோஷமாயிருக்கு"
"நான் பையனைப் பத்தி விசாரிச்சுட்டேன். நீ பொண்ணு பத்தி விசாரிச்சிடு"
"அ...ப்...பா!"
"என்னப்பா... ஷாக்காகறே? தன்வி இந்த காலத்துப் பொண்ணு. புத்திசாலி. பெத்தவங்க கண்ணை மண்ணைத்தூவி போட்டுட்டு தப்பு பண்ண நிறைய வாய்ப்பிருக்கு. இப்பவே தெரிஞ்சிக்கிட்டா, கண்ணை மூடி நேரத்திலே அசிங்கப்பட வேணாம் பாரு"
"சப்போஸ்... தன்வி யாரையாவது காதலிச்சிருந்தா...?" ஆர்வம் தாங்காமல் அந்தக் கேள்வியை கேட்டுவிட்டான்.
"காதலை தப்புன்னு சொல்ல மாட்டேன். ஆனா, தப்பானவனை செலக்ட் பண்ணினா, எல்லாமேத் தப்பா போயிடுமே. அப்படி தன்வியும் யாரையாவது காதலிச்சிருந்தா... விசாரிப்போம். பையன் நல்லவனாயிருந்து, குடும்பமும் கவுரவமானதாயிருந்தா. அவ மனசுப்படியே கல்யாணம் பண்றதுல என்ன தப்பு? ஆனா, இந்த ரெண்டு விஷயத்திலேயும் குறையிருந்தா... கண்டிப்பா, சம்மதிக்க மாட்டேன். விசாரிச்சிடு... என்ன?"
"சரிப்பா..." என்றவனின் மனசு அப்பாவை நினைத்து ஆச்சர்யப்பட்டது.
கண்டிப்பும், கறாரும் நிறைந்த அப்பாவுக்குள் இப்படியொரு விசாலமான மனதா?
'அப்படியானால், கண்டிப்பாய் என் காதலும் நிறைவேறும்!'
எண்ணி முடிப்பதற்குள் செல்போன்

அழகுக்கு.

'காவிய செல்வம்!' என்று இளைஞர் பார்த்தும் வியந்தது அரவிந்துக்கு.

"மிதுனாவா? இந்த நேரத்திலா? எதற்கு அழைக்கிறாள்?"

"யாருப்பா அது இந்த நேரத்திலே போன் பண்றது?"

"அ...அது... ஆபிஸ்லேர்ந்து ஒரு ஃப்ரெண்ட்...!"

"அதுக்காக... எது பேசுற...?"

"ஹலோ..." என்றபடி நகர்ந்து மாடிப்படி வந்தவன், "என்ன விஷயம் மிதுனா... எதுக்கு போன் பண்றே?" என்றான் குரலில் வாஞ்சையில்.

"அப்பா தான்... போதும் போயிருந்துச்சு"

"ப்ச்... புரிஞ்சுக்க மிதுனா... நான் ஏற்கனவே சொல்லியிருக்கேன்... எதுக்கு நான் பண்ணணா தோணுது, என்னைப் பார்த்து தனியாயும் இந்த சுதந்திரத்தை எடுத்துக்க கூடாதுன்னு அப்பா கறாரா சொல்லிட்டார். ப்ளீஸ்... மிதுனா. இப்படி எல்லாம் பேசிதான் காதலை வளர்க்கணும்ன்னு இல்லே. நிஜமான காதல்... தானே வளரும்... புரியுதா... வச்சிடட்டுமா?"

"ம்!"

"நம்ம நினைக்கிறியா? எந்தவித மாதிரியில்லாம நான் உன்கிட்ட ரொம்ப ஸ்ட்ரிக்டா நடந்துக்கறேனா?"

"ம்... உண்மையை சொல்லப்போனா... உங்களோட நானிய வசர கந்த முடியலை வேணும் எக்கமாயிருக்கு. அட்லீஸ்ட் ஒரே ஒரு நாளாவது சைக்கிள் உங்களை இறுகப் பிடிக்க விட்டு வெளிடா போகணும். ரெஸ்டாரெண்ட்ல சாப்பிடணும். சினிமாவுக்குப் போய் படம் பாக்காம... படம் முடியுறவரைக்கும்... அந்த மெல்லிய வெளிச்சத்துல உங்க முகத்தையே பார்த்துக்கிட்டிருக்கணும். பீச்சுக்குப் போகணும். நீங்க சாப்பிட்டுக்கிட்டிருக்கப்ப... அந்த குல்பியை பாதியில பிடுங்கி நான் சாப்பிடணும். இப்படி... நிறைய இருக்கு. ஆனா, இப்படி நீங்க ஸ்ட்ரிக்டா இருக்கறப்ப தனிப்பும், காதலும் அதிகமாகுது அரவிந்த்."

அந்த இரவு வேளையில் மனசுக்குள் இருப்பவளின் குரல் காதுக்கு நெருக்கமாக கேட்கையில் ஒரு வித வேட்கை எழுந்தது. அவளின் விருப்பமாக சொன்னதெல்லாம் கண்களுக்குள் காட்சிகளாய் விரிந்தன. மிதுனாவை ஆரத் தழுவி முத்தமிட வேண்டும் போல் உணர்வுகள் தோன்றின.

"மிதுனா..."

"ம்..."

"மனசை அலைய விடாதே! கல்யாணத்துக்குப் பிறகு நீ நினைச்சது நினைக்காதது அத்தனையும் நடக்கும்... சரியா?"

"நம்ம... நம்ம கல்யாணம் நடக்குமா அரவிந்த்?"

"கண்டிப்பா! நம்பிக்கையோட இரு. ஒண்ணு சொல்லட்டுமா?"

"சொல்லுங்க!"

"உன்னைப் பிரிஞ்சு என்னாலேயும் இருக்க முடியாது மிதுனா... இதுதான் நிஜம்... சத்தியம். வச்சிடட்டுமா?"

"ம்!"

மிதுனாவிற்கு ஜெயமக்கிறதும் அந்த வார்த்தைப் போதும் என்று பட்டது.

'அரவிந்தனின் காதல் மட்டும் இல்லை என்றிருந்தால்... இந்நேரம் என் வாழ்வே என்னவோ மாறி இருக்கும் அல்லவா! நானும் மற்றவர்களைப் போல் வீக் என்ட் பார்ட்டி பார்ட்டியில் கலந்து கொண்டு காவியாக இருப்பேன். வீட்டில் எனக்கு அளித்திருக்கிற சுதந்திரத்தை மிஸ்யூஸ் பண்ணி வீணாகி இருப்பேன். தாங்க்ஸ் டூ காதலுக்கு தான் நன்றி சொல்ல வேண்டும். மற்றவரின் விருப்பத்துக்காக தன்னை உருமாற்றிக் கொள்வது தானே காதல்? என்னை அரவிந்துக்காக மாற்றிக் கொண்டது எவ்வளவு ஆனந்தமாய் இருக்கிறது!'

வெளியில் இன்னமும் அப்பா, அம்மாவின் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. ஆனால், இப்போது அந்த சத்தம் அவளை பாதிக்க வில்லை.

* * *



# முத்தான முத்தல்லவோ

நவரத்தினங்களில் ஒன்றான முத்துக்கள் மன அமைதியைத் தரவல்லது முத்துக்களை தேர்வு செய்யும் போது கூடுமானவரை உருண்டையாகவும், பளபளப்பாக இருக்கும் வகையிலும் தேர்வு செய்ய வேண்டும். முத்துக்களை கழுத்தில் அணியும் போது தங்கத்தில் பதித்து அணிவதை விட தங்க கம்பி அல்லது கயிற்றில் கோர்த்து அணிவதே நல்லது. அப்போதுதான் முத்துக்கள் சோபிக்கும்.

முத்து பதித்த ஆபரணங்களை மற்ற நகைகளுடன் சேர்த்து வைக்கக்கூடாது. அவை மிருதுவாக இருப்பதால் கீறல் விழுந்து விடும்.

- அபர்ணா, சென்னை.

நளினியைப் பொறுத்தவரை கவின் ஒலேட்டாக இருந்தாள். விசாரித்தில் அவளைப் பற்றி யாரும் தப்பாக ஒரு வார்த்தை சொல்லவில்லை. அதிகபட்சம்... தோழிகளுடன் பிச்சிற்கு சென்றிருக்கிறாள். அவ்வளவு தான்!

அரவிந்திற்கு தங்கையை நினைத்து பெருமைதான் என்றாலும், அவளிடமே கேட்டு தெரிந்துக் கொண்டால் என்ன என்று தோன்றியது. பெண்களின் மனம் கடலை விட ஆழமானதல்லவா?

சரியாக சுந்தரி வீடும் நேரத்தில் கேட்டிருந்து வெளியே காத்திருந்தான் அரவிந்தன்.

தோழிகளோடு சிரித்தபடி வெளியில் வந்த நளினி அவனைப் பார்த்து பெரிதாய் வியந்தாள்.

"அண்ணா... நீயா... இங்கேயா? மாறிட்டியா...? போச்சு... போச்சு... நம்ம குடும்ப மானமே போச்சு!"

"ஏய்... துடுக்கு... மொதல்ல வண்டியில ஏறு!" கார் கதவை திறந்து விட்டான்.

அமர்ந்தவள், "என்னண்ணா... என்ன?"

"அப்படித்தான் வச்சுக்கோயேன்... நீ யாரை லவ் பண்றேன்னு தெரிஞ்சுக்கலாம்னு வந்தேன்."

"ஏன்... உனக்குத் தெரியாதா என்ன? அப்பாவுக்கேத் தெரியுமே!"

"என்னது! அப்பாவுக்குத் தெரியுமா?"

"ஆமாம்... ஊர்ச்சொல்லு... பேசி முடிச்சிடலாம்னு சொன்னாரே!"

"ஏய்... நிஜமாவா சொல்றே? இதையெல்லாம் அப்பா என்கிட்டே சொல்லவே இல்லையே! ஆமாம்... யாரந்த அனா இருக்கு?"

"பரிவாரத்தைப் பேச... தெரிஞ்சதோ... பண்டவேத் இரண்டு வரும் உன்னை அடிக்க!"

"அடச்சீ... சொல்லு!" நளினி இவ்வளவு சுதரியமாய் பேசுவது ஒரு பக்கம் ஆச்சரியமும், பயமும் உண்டானாலும், யார் என்று தெரிந்துக் கொள்ள அந்த ஆர்வமும் எழுந்தது.

"ஜெயம் ரவி!"

"என்னது!" சடாரென பிரேக் போட்டான்.

"ஜெயம் ரவி... சம்திங் திங்ஸ்னு படத்துல சுட்...!"

"நானே அது திருடிச்சிட்டேப் பார்த்தியா? வினாயகா திஸா!"

"பின்னே என்ன ராஜாராமன் மாதிரியான இரும்பு மனிதருக்கு பொண்ணாப் பொறந்துட்டு என் கூட வந்து முடியுமா என்ன? அதுக்கெல்லாம் கொடுப்பு இல்லே!"

"அப்பு... வீட்ல பார்க்கற பையனை தான் கல்யாணம் பண்ணிப்பே...!"

"வேற வழி? அந்த சாய்ப்ட்வேர் என்ஜினியர் பையனையே முடிச்சிடச் சொல்லு!" அண்ணனை பார்க்காமல் சாலையைப் பார்த்தபடி, நாக்கை உள்ளுக்குள் வெறுப்புடன் சொன்னாள்.

"ஏய்... உனக்கெப்படி?" என்றான் வியப்பாய்.

"அம்மாவும், அப்பாவும் பேசிக்கிட்டிருந்ததைக் கேட்டுட்டேன். அதுமட்டுமில்லே... அப்பா அந்த அண்ணனோட போட்டோவை டேபிள் மேல வச்சிருந்தார். யாருக்கும் தெரியாமப் பார்த்துட்டேன். ஜெயம் ரவி அளவுக்கு இல்லேன்னாலும் நாட்டேட்!"

"நாட்டி... இவ்ளோ காரியம் பண்றியா நீ?" செல்லமாய் அவள் தலையில் குட்ட... நளினி வாய்விட்டு அழகாய் சிரித்தாள்.

"ஒண்ணு கவனிச்சியாண்ணா?"

"என்ன?"

"இந்த மாதிரி ஜாலியா நாம இதுக்கு முன்னாடிப் பேசிக்கிட்டதே இல்லே..."

"நிஜம் தான்!" என்றான் பெருமூச்சுடன்.

# 7

"ஏ... என்ன... என்ன சொன்னீங்க?" துள்ளாத குறையாய் அதிர்ச்சியுடன் கேட்டாள் மிதுனா.

பதில் உடனே தோம் என்பதால்... அவர்கள் இருந்த கேபின் காலியாக இருந்தது.

"வர்ற வெள்ளிக்கிழமை... நீ எங்க வீட்டுக்கு வரணும்."

"நானா... எப்படி?"

"கல்லிட்டு தான் நீ வீசர் இருக்கே... அதிலே வா!"

"ப்ச்... கிண்டல் வேணாம். இப்போ கூப்பிட்டீங்க நம்ம விஷயம் தெரியுமா?"

"உன்னையச் சொல்லட்டுமா? எங்கம்மா, அப்பாதான் வரச் சொன்னாங்க!"

"அப்பா... அப்பா... நீங்க எல்லா விஷயத்தையும் சொல்லிட்டீங்களா? அவங்க சம்மதிச்சிட்டாங்களா? உங்க வீட்ல ரொம்ப கட்டுப்பாடுன்னு சொன்னீங்களே! கல்யாணத்துக்கு முன்னாடியே என்னை எப்படி வரச் சொன்னாங்க?" சந்தோஷமும் ஆச்சரியமும், கண்கள் கலங்க, குரல் உடைய கேட்டாள்.

அர்வித்தன் சிரித்து போனான்.

"ஸாரி... மிதுனா" என்று தோளில் மிருதுவாய் தட்டிக் கொடுத்தான்.

மிதுனாவின் முகம் மாறியது.

"ஸாரி?"

"நான் சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன். நம்ம விஷயம் இன்னும் தெரியாது."

"விளையாட்டுக்கு கூட என்னை ஏமாத்திடாதீங்க ப்ளீஸ்!" கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"ஸாரி... ஸாரி... வெரி ஸாரி ஆனா, நான் சொன்னதுல ஒண்ணு மட்டும் உண்மை!"

"..........?!" நிமிர்ந்துப் பார்த்தாள்.

"வர்ற வெள்ளிக்கிழமை... நீ எங்க வீட்டுக்கு வரணும்."

"ப்ளீஸ்..."

"விளையாடலே மிதுனா... சீரியஸ்!"

"..........?!"

"சரி... சஸ்பென்ஸ் போதும். என் தங்கை நளினிக்கு மாப்பிள்ளை பார்த்து முடிவாயிடுச்சு. வெள்ளிக்கிழமை நிச்சயதார்த்தம். வீட்லேயே வச்சிருக்காங்க. ரிலேஷன்ஸ், ஃப்ரெண்ட்ஸை மட்டும் தான் இன்வைட் பண்றோம். எனக்கோட முக்கியமான ஃப்ரெண்ட்ஸை மட்டுமே இன்வைட் பண்ணியிருக்கேன். அந்த நாலு பேர்ல நீயும் ஒருத்தி."

"நிஜமாகவா?"

"சத்தியமா! கல்யாணத்துக்கு முன்னாடியே மாமியார் வீட்ல காலடி எடுத்து வைக்கப் போறே மகளே... நீ!"

"அப்ப... உங்க பேரண்ட்ஸ் சம்மதிச்சிடுவாங்களா?"

அர்வித்தன் அவளையே கூர்ந்து நோக்கினான்.

'என்ன இல்லை இவளிடம்? படிப்பு அழகு சம்பளம்? மிதுனாவோ அழகி! எல்லாம் இருந்தும் சாதாரணப் பெண்ணைப் போல் நாலுக்கொரு முறையாவது, நம்ம கல்யாணத்துக்கு சம்மதிப்பாங்களான்னு கேட்கிறாள். இந்த வெகுளித்தனமான அன்பு எனக்கு வேண்டும்.'

"என்ன அர்வித்... அப்படி பார்க்கறீங்க?"

"நளினியோட கல்யாணம் முடியட்டும் மிதுனா விஷயம் பேசிடறேன். உன்னை மறுக்க எந்த காரணமும் இல்லே... அதனால கவலைப்படாதே!"

ஆனால், அவளால் கவலைப்படாமல் இருக்க முடியவில்லை.

* * *

பஸ் ஸ்டாப்பிலிருந்து இறங்கிய மிதுனா அசந்துப் போய் விட்டாள். அந்த வீட்டைப் பார்த்து!

ஒரு வீடு என்றால் இப்படி... இப்படி எல்லாம் இருக்க வேண்டும் என்று எப்படி யெல்லாம் கற்பனை வடிவம் கொடுத்திருந்தாளோ... அப்படியெல்லாம் இருந்தது.

மரங்கள், பூச்செடிகள்... அத்தனையும் சீரியல் பல்புகளால் உடை உடுத்தியிருந்தன.

விசாலமான வீடு... விளக்குகளால் சம்பிரமாய் இருந்தது.

பட்டுத் தாவணியாய், பெண்கள் வளைய வர, மிதுனா தயக்கத்துடன் உள்ளே நுழைந்தாள்.

"காமாட்சி... நளினிக்கு அலங்காரம் முடிச்சாச்சா? எல்லாரும் வர ஆரம்பிச்சிட்டாங்க. இந்த அர்வித்தன் எங்கே... வர்றவங்களை கவனிக்காம..." ஆரத்தி பரக்க பிசியாய் இருந்த கனகம் வாசலுக்கு வந்தவள்... சில கணங்கள் இமைக்க மறந்துப் போனாள்.

'யார் இந்தப் பெண்... அஷ்டலஷ்மியும் சேர்ந்து வந்தாற்போல... இவ்வளவு அழகாய்...'

வந்துக் கொண்டிருந்த மிதுனாவை விழி அகலாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.



வெண்பட்டில் ஆரஞ்சு நிற பார்டர் வைத்த சேலையில் முத்தாலானவை ஒரு கையில் பிடித்த முந்தி, ஆரஞ்சு நிற பவளமும் சேர்ந்த நெக்லஸ், அதே மாதிரி சின்ன கம்மலும், இரண்டு வளையலுமாய் பொட்டாய் அவளிடம் அந்த அழகு தேர்ந்தெடுத்தாய் இருந்தது.

இருபக்கமும் கொஞ்சமாய் முடியெடுத்து க்ளிப் போட்டு, முதுகில் கூந்தலைப் படர விட்டிருந்தாள். மிதமாய் பவுடரோடும் பொட்டு, கறுத்தாக நிறத்தில் வைத்துப் போட்டிருந்தாள்.

'யாராய் இருக்கும்? காந்திமதியோட பொண்ணாய் இருக்குமோ? அவசர வேலையிருக்கு, நான் வர முடியாது... பொண்ணை அனுப்பி வைக்கிறேன்னு சொன்னாளே... அவள் தானோ?'

மிதுனாவை ஆர்வமாய் பார்த்தாள். பேச்சுவாக்கில் காந்திமதி, கனகத்திடம் தன் பெண்ணை அர்வித்தனுக்கு திருமணம் செய்வது பற்றி சொன்னதுண்டு. நளினியின் திருமண விஷயமாய் அதைப் பற்றி மேற்கொண்டு பேச முடியவில்லை.

'இவள் அர்வித்தனுக்கு ஏற்ற பொருத்தமாய் இருப்பாள்.'

"வாம்மா!" என்று முகம் நிறைந்த சிரிப்புடன் வரவேற்ற கனகத்தைப் பார்த்து முறுவலித்தபடி உள்ளே வந்தாள்.

கனகத்தைப் பார்த்ததுமே அந்த சாயலை வைத்து புரிந்துப் போயிற்று.

'என் வருங்கால மாமியார்!'

அப்பாவின் நண்பரை அழைத்து மாடிக்கு அனுப்பி வைத்த அர்வித்தன் இவர்களைப் பார்த்துவிட்டு வேகமாய் வந்தான்.

கனகமும் மகனைப் பார்த்து விட்டாள்.

"அர்வித்தா... இங்கே வா! இது யார் தெரியுதா?"

விழித்தான் அர்வித்தன்.

"உனக்கு தெரிஞ்ச பொண்ணா? அதுக்குள்ளே அறிமுகமாயாச்சா?"

"என்ன உளர்றே? இந்தப் பொண்ணை உனக்கு முன்னமேத் தெரியுமா?"

"தெரியுமாவா? என் கூட ஒர்க் பண்றாங்க. பேரு மிதுனா!"

"ஓ... அப்ப... நீ காந்திமதியோட பொண்ணு இல்லையா?"

"இல்லீங்க ஆன்ட்டி... எங்கம்மா பேரு சாரதா..."

"அப்படியா... நீயென்ன எங்க வாயைப் பார்த்துட்டிருக்கே... நீ மாடிக்குப் போய் விருந்தாளிங்களை கவனி..." என்று மகனை அனுப்பிய கனகம், "பேரென்ன சொன்னே... அ... மிதுனா... உங்க அப்பா என்ன பண்றார்?" என்று பேச்சுக் கொடுத்தாள்.

* * *

மிதுனாவால் இன்னும் கூட நம்ப முடியவில்லை.

அர்வித்தனின் வீடு புகுந்து சென்றது. அவனின் அம்மா, அன்புடன் உபசரித்தது, ராஜாராமனின் கம்பீரம், பாரம்பரியம் மிக்க தேவசீகமான வீடு, கட்டுக்கோப்பான உறவுக்கார பெண்கள், சம்பிரதாயம், சடங்கு, அர்வித்தன் பட்டு வேட்டி சட்டையில் ஓடியாடி வேலை செய்தது. நடுநடுவே வந்து அவளை விழுங்குவது போல் பார்த்தது... எல்லாமே கனவுப் போலிருந்தது.

'கடவுளே... அந்த குடும்பத்தில் என்னையும் ஒரு அங்கமாய் சேர்த்து விடு. எந்தப் பிரச்சினையும் இன்றி அர்வித்தனை மணக்க அருள்பண்ணு!' மனதார வேண்டினாள்.

* * *

நிச்சயதார்த்தம் நல்லபடியாய் நடந்து முடிந்ததில் ராஜாராமனுக்கும், கனகத்திற்கும் ஏக மகிழ்ச்சி. அதுவும் மாப்பிள்ளை வீட்டார் நல்ல மனிதர்களாய் இருந்தது திருப்தியாய் இருந்தது.

விழாவில் எடுக்கப்பட்ட ஆல்பத்தை பார்த்துக் கொண்டிருந்தனர். ஓரிடத்தில் ராஜாராமனின் பார்வை நிலைக்குத்தி நின்றது.

"அன்னைக்கே கேட்கணும்னு நினைச்சேன். யார் இந்தப் பொண்ணு நம்ம உறவா?"

"இல்லைங்க... அர்வித்தன் கூட வேலை செய்யறப் பொண்ணு. பேரு கூட மோகனாவோ, என்னவோ சொன்னான்!"

"ஓ... சாருக்கு லேடி ஃப்ரெண்ட் கூட உண்டா?"

"ஐயோ... அர்வித்தன் அப்படிப்பட்ட ஆள் இல்லைங்க. முக்கியமான ஃப்ரெண்ட்ஸ்ன்னு நாலஞ்சு பேரைத்தான் அழைச்சிட்டு வந்தான். தாராளம் பார்த்து பழகறவன்."

"அதானே யோசிக்க வைக்குது. நாலஞ்சு பேருல ஒரு பொண்ணும் இருக்கே! ம்! எதுக்கும் சும்மா விசாரி... நம்ம பக்கம் தானா? வேறயான்னு? ஏன்னா... நம்ம பரம்பரைக்குன்னு ஒரு கவுரவம் இருக்கே..."

"சரிங்க!"

"லட்சணமா... நல்லாதான் இருக்கு!" ராஜாராமன் மீண்டும் போட்டோவையே பார்த்தார்.

* * *

வேதவின் பக்கலில் கொண்டிருந்த அர்வித்த வின் முன் போய் நின்றான் தவின்.

"ப்ச்... மறைக்காதே... தவிர்!" என்றான் கண்ணைமூடியவ பார்த்து.

"எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகணும்!"

"இனா - தவிர்ப்போ...!"

"பிறகும்... பதில் சொல்லு... போகட தேன்!"

"என்ன?"

"யார் அந்த எருசல்?"

"யார்சலா? யாரைக் கேட்கறே?"

"சத்தியா சாகதுல... ஒரு பொண்ணை அழைச்சிட்டு வந்து, அவ்வளவு பேசினிதும் வீட்ல... சுத்தி காண்பிச்சியே... அந்த மகிளைக் கேட்கறேன்."

"ஏய்... தப்பா பேசாதே! அவ யார்னோ... சொல்றேன்!"


"இருக்கட்டும்... அதுக்காக அவளை இந்த முன்னாடி பார்க்காத மாதிரி அவளையே விழுங்கிடற மாதிரி பார்த்துக் கிட்டிருந்தியே... அது தப்பில்லையா?"

"பைத்தியமா பிடிச்சிருக்கு?"

"நம்ம ப்ராஜெக்ட்டுக்கு வாலண்டீனா, வவ்வா?"

"அடி செருப்பால...!"

சைகை முக்கும்... ஒரே ஓட்டமாய் ஓடிப் போனான் தவின்.




என்னவோத் தெரியவில்லை... தலைவலி போனோ... போனோ என்று மண்டையைப் பிசைந்து, கம்ப்யூட்டர் ஸ்கிரீனை பார்க்கவே முடியவில்லை. கண்களும் வலித்தது. கொஞ்சம்... கொஞ்சமாய் உடம்பு சூடேறிக் கொண்டிருந்தது. மிதுனா துவண்டுப் போனாள்.

அரவிந்திடம் சொன்னாள்.

"டெம்ப்ரேச்சர் அதிகமாகிட்டிருக்கு. லீவ்... நான் லீவு சொல்லிக்கறேன்" என்றாள்.

"தாங்க்ஸ்.... ஸ்ர்" வெளியில் வந்தாள்.

நடக்கவே சிரமமாய் இருந்தது. கண்டிப்பாய் வண்டி ஓட்ட முடியாது.

டூவீலரை பூட்டி சரி பார்த்து, ஆட்டோவில் சென்றாள்.

பழக்கமான ஒரு டாக்டரிடம் சென்று இன்ஜெக்ஷன் போட்டுக் கொண்டு வீட்டிற்குச் சென்றாள்.

"எப்போதும் போல் பறப்போம்" என்றிருந்தது.

ஆட்டோவிற்கு பணத்தைக் கொடுத்து விட்டு பேகிலிருந்த சாவியை எடுத்தாள்.

பூட்டைத் திறக்க முயன்றவள்... பூட்டு இல்லாததைக் கண்டு திகைத்தாள். கதவு உட்புறமாய் தாழிடப்பட்டிருப்பது தெரிந்தது.

"யார் வந்திருப்பது? அம்மாவா, அப்பாவா? இருவரின் காரும் இங்கு இல்லையே!"

காலிங் பெல் பொத்தானை அழுத்தினாள்.

மூன்றாவது முறையாக அழுத்திய பிறகே கதவுத் திறந்தது.

சாரங்கி கலைப்பு மேலிட்டவளாய் நின்றிருந்தாள். மகளைப் பார்த்து அதிர்ந்தாலும், வலிய சிரிப்பை கொண்டு வந்தாள்.

"என்ன டார்லிங் வந்துட்டே?"

"பீவர் மம்மி... ஆமா... நீ ஏன் வந்துட்ட..." உள்ளே நுழைந்த மிதுனா.... அங்கே புதிதாய் ஒரு நபரைப் பார்த்ததும் புருவம் சுருக்கினாள்.

"ஹாய்... ஷிவா... கமான்! மிதுனா... இது ஷிவா... என் ஃப்ரெண்ட்... இவனுக்கு இன்னைக்கு பர்த்டே! அதான் என் கையாலேயே சமைச்சுப் போட்டு அசத்தணும்னு வரச் சொன்னேன். ஷிவா... மீட் மின் மிதுனா... மை டாட்டர்..."

"ஹாய்" என்றபடி கையை நீட்டிய ஷிவா நடுத்தர வயதைத் தாண்டியிருந்தான். சாரங்கியை விட ஏழெட்டு வயது இளையவன். வெளுப்பாய் வசீகரமாய் இருந்தான். நெற்றி முடி பேஸ்ஸாகத் துவங்கி இருந்தது. கண்ணாடி

## உடல் வளர்ச்சிக்கு ஏற்ற பழங்கள்

**9** வயது முதல் 18 வயது வரையிலான குழந்தைகளுக்கு உடலின் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்திற்கும் ஏராளமான கால்சியம் தேவைப்படுகிறது. இதனால் தினமும் 1300 மில்லி கிராம் கால்சியம் உடலில் சேரும் அளவுக்கு பழங்கள், காய்கறிகளை உணவில் சேர்ப்பது அவசியம்.

- ராஜேஸ்வரி, பெங்களூர்.



அணிந்திருந்த கண்கள் மிதுனாவை அளவு அளவாய் ஆராய்ந்தன.

மிதுனா கைகளைக் கூப்பி, "வணக்கம்" என்றாள்.

மற்ற இருவரின் முகமும் மாறிப்போனது. ஒன்றிலிருந்து இக்கணும், மட்டும் இறுகிய அதையும் சாப்பாடு வந்தது.

"மம்மிக்கு... இவ்வளவு வாசனையாய் கூட சமைக்கத் தெரியுமா?"

"மிதுனாவுக்கு பீவர்... அதான் புண்பட்டிருக்கா... நீ தப்பா எடுத்துக்காதே ஷிவா" மிதுனா போய் ரெஸ்ட் எடு!"

மிதுனா ஆழமாய் அனைத்தும் சென்று கதவை சாத்திக் கொண்டாள்.

கட்டிலில் விழுந்தவளுக்கு மேலும் தலைவலி அதிகரித்தது.

"யாரிவன்? பார்த்தால் நல்லவன் போல தெரியவில்லையே! இவனுக்காக அம்மா தன் வேலையை விட்டு வந்து சமைப்பதா? என்னைக்காவது எனக்காக நீ இப்படி செய்ததுண்டா? இப்போது இதை தெரிஞ்சா நீ கோபப்பட்டு உடம்பு வேலை போய் நீதான் காரணம் என்பார்... வீட்டுக்கு வர வேண்டும்!"

"உன் டாட்டர் உன் அளவுக்கு இல்லே சாரங்கி. அப்பா மாதிரியா இருக்கே நீ அக்கா



மாதிரி... மாதிரி என்ன மாதிரி... அக்காவே தான்!"

ஷிவா சொல்ல சாரங்கி கலகலவென சிரித்தாள்.

மூடிய கதவைத் தாண்டி அவர்களின் பேச்சுக் குரல் கேட்டது. அவனின் கமெண்ட்டும், அதற்கு பதிலாய் அம்மாவின் சிரிப்பும், அம்மாவை அவன் ஒருமையில் அழைத்ததும், தொடர்ந்து இருந்தது மிதுனாவுக்கு.

தலைவலி மேலும் அதிகரித்தது.

"என் இதயமாய் நடக்கிறது?" பயம் கவ்விக் கொண்டது.

* * *

மிதுனாவின் முகத்தில் பூத்திருந்த உற்சாகத்தை கண்கொட்டாமல் ரசித்தான் அர்வித்.

"என்ன அர்வித் அப்படி பார்க்கிறீங்க?"

"இந்த ஒரு வாரமாய் நம்ம வெளியே இப்படி ரெஸ்டாரெண்ட் வந்திருக்கறது... இதுக்கே இவ்வளவு சந்தோஷமாயிருக்கு."

"நான் நிறைய கற்பனை பண்ணி வச்சிருக்கேன் அர்வித். கட்டுப்பாடு... அது இருந்து சொல்லி போல போருக்கு கூட்டிக்கிட்டு போடறேன்... இப்ப இருந்து இந்த ரெஸ்டாரெண்டுக்கு வரணும்னு சொன்னப்போ ஆசையாய் பறக்க ஆரம்பிச்சேன். உன் கூட இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் சொர்க்கம் அர்வித்."

"எனக்கும் பலசமயம் எல்லாமே இருக்கு. சொல்ல... எதுவோ தடுக்குது நான் ரொம்ப ஹாப்பியா இருக்கேன் மிதுனா. அந்த உன்னோட ஷேர் பண்ணிக்கணும்னு தான் இங்கே வரச் சொன்னேன்."

"என்ன விஷயம் அர்வித்?"

"எங்க வீடு உனக்கு பிடிச்சிருக்கா?"

"ரொம்ப்ப்ப....! கல்யாணம் பண்ணிக்கிட்டு, அந்த வீட்ல எப்படியெல்லாம் வாழ வேணும்னு நிறைய கற்பனை பண்ணி வச்சிருக்கேன் தெரியுமா?"

"சொல்லேன்... தெரிஞ்சுக்க றேன்!" பனீர் கட்லெட்டை சாப்பிட்டு தாருக்காய் உதட

தடைத்துக் கொண்டவன் இரண்டு கைகளையும் தாடைக்கு முட்டுக் கொடுத்து மிதுனாவையே ஆழ்ந்துபோய்ப் பார்த்தான்.

"இப்படியே சொல்லிட்டேன்... கல்யாணத்துக்குப் பிறகு வேலைக்குப் போக மாட்டேன்!"

"வேறென்ன... எக்கவுண்டா, அப்பாவோட கம்பெனியிலும் அதுதான் தெரிவா?"

"காலையிலே எழுந்திச்சு குளிச்சு பூஜை பண்ணி, முக்கியமா தோட்டத்துல பூப்பறிச்சிட்டு வேலை எல்லாம் தான்!"

"ம்.. அப்புறம்?"

"வைகைப் பயிறு... உங்களை ஆபிஸுக்கு அனுப்பி வச்சிட்டு, நிறுத்தி போய் டைம்பாஸ் பண்ணி, சாயந்திரம் நீங்க வந்ததும் காபி குடிச்சு, தோட்டத்து புல்வெளியில உட்கார்ந்து பேசணும்."

"ம்.. அப்புறம்?"

"ராத்திரி எதுவுமே குடும்பம் மொத்தமா உட்கார்ந்து சாப்பிட்டுட்டு தூங்கிட வேண்டியது தான்!"

"அவ்வளவுதானா?"

"அவ்வளவுதான்!"

"நம்ம குழைப்பத்தி எதுவுமே சொல்லலையே!"

"என்ன சொல்லணும்" குறும்புத்தனமாய் கேட்டாள்... அவன் சொன்னது புரிந்து.

"புள்ளை முடிஞ்சப் பிறகு நம்ம குழந்தை வந்துவிட்டுதே! அதுக்கப்புறம்?"

"அதான் சொன்னேனே... தூங்கி எழுந்து!"

"சரி நான் எங்கப்பா அம்மா தாத்தா, பாட்டி ஆக வேணாமா? தூங்கி.... தூங்கி எந்திரிச்சா எப்படி சாத்தியமாம்?"

"பேசுவது அவன்தானா?" என்று ஆச்சர்யமாய் இருந்தது முகம் சிவந்து... வெட்கத்தால் தலை கவிழ்ந்து சிரித்தாள்.

"என்னடா... இவள் இப்படியெல்லாம் பேசுறாளேன்னு பார்க்கறியா? அதான் சொன்னேனே... எனக்கும் நிறைய கற்பனைகள், ஆசைகள் இருக்கு. வெளிப்படுத்த முடியாத சூழ்நிலை... அவ்வளவு தான்!"

"இதுவே போதும் அர்விந்த்... ஒரு வருஷத்துக்குத் தாங்கும்."

"இன்னொரு விஷயம் சொன்னா, பறப்பே...!"

"அப்படியா?"

"உன்னை எங்கம்மாவுக்கு ரொம்பவே பிடிச்சிருக்கு மிதுனா!"

"நிஜம்... நிஜமாகவா சொல்றீங்க?" கேட்டபடியே கேட்டாள்.

"ஆமாம்... தேவகி அத்தை உன்னைப் பத்தியே கேட்டுட்டிருக்காங்க. சொல்லிட்டேன்னுதான் எங்க வீட்டுக்கு வந்த முதல் பெண் நீ அதனால ஏற்பட்ட ஆச்சர்யமும் ஒரு காரணம்."

"நீங்க என்ன சொன்னீங்க?"

"ஜஸ்ட் ஃப்ரெண்ட் தானம்மா... கல்யாணமெல்லாம் வேணாமுன்னு சொல்லிட்டேன்!"

"ஏன் அர்விந்த்... உண்மைய சொல்லியிருக்கலாமே!"

"இப்ப வேண்டாம் மிதுனா. தனியே போய் கல்யாணம் முடியட்டும். தவிர, உங்க பேமிலியைப் பத்தி நானும் தெரிஞ்சுக்கணுமில்லையா? அப்பாவைப் பொறுத்தவரை பணம், அந்தஸ்து எல்லாம் ஏன்... ஜாதி கூட பெரிய விஷயமில்லை. எங்க வீடு மாதிரி சட்டுச்சோர்வா... கலாசாரத்தை மதிக்கிற, தெய்வ பக்தி மிகுந்த குடும்பமா இருக்கணும்னு எதிர்பார்க்கிறார். அப்பாவுக்கும் உன்னைப் பிடிச்சிருக்குன்னு நினைக்கிறேன். உங்க பேமிலியும் பிடிச்சுப் போச்சுன்னா... நம்ம கல்யாணத்துக்கு எந்தப் பிரச்னையும் இருக்காது. இதனை கேட்டுதேயே... இப்பக் கேட்கிறேன் சொல்லு... உங்க பேரன்ட்ஸ் எப்படி?"

என்னன்னு சொல்லுவாள்? அவர்கள் தானே பிரச்னையே! தினமும் சண்டையும் சச்சரவுமாய், ஒரே வீட்டுல தனித்தனியே வாழ்ந்துக் கொண்டிருப்பதை எப்படி சொல்லுவாள்?

"சொல்லு மிதுனா...."

"என் பேரன்ட்ஸ் ரெண்டு பேருமே ஒர்க் பண்றாங்க" என்றபடி அவர்களைப் பற்றி மேலோட்டமாய் சொன்னாள்.

"வெல்!"

"அம்மா.... அப்பா கொஞ்சம் மாடர்ன் டைப்!"

"மாடர்ன் டைப்பா?" நெற்றியை சுருக்கினான்.

"சேலையைத் தவிர எல்லாத்தையும் உடுத்துவாங்க. கடவுள் நம்பிக்கைக் கிடையாது."

"வாட்?"

"ஆ.. ஆமாம் அர்விந்த்!"

"இதென்ன கலாட்டா? நம்ம கல்யாணத்தப்ப உங்கம்மா ஜீன்ஸ்ல வந்து நின்னா நல்லாயிருக்காதே!" என்று சிரித்தான்.

மிதுனா சங்கடப்பட்டாள்.

"விடு... சொன்னா... உனக்காக மாறிட மாட்டாங்களா?"

"மாறுவேனா?"

அர்விந்தன் அவளை நேராகப் பார்த்தான்.

"கஷ்டம்தான் மிதுனா!"

## 9

"அர்விந்த்..." என்றாள் கலக்கமாய். "எங்க வீட்டுல சம்மதிக்கலேன்னா... என்னை ஏத்துக்க மாட்டீங்களா?"

"என்னை பெத்தவங்க சம்மதமில்லாம கண்டிப்பா நம்ம கல்யாணம் நடக்காது மிதுனா!"

"...?!"

"வரதட்சணை வேணும், கார், பங்களா வேணும்னா கேட்கிறாங்க? நல்ல பேமிலி, கௌரவமான பேமிலி, இதைக் கூட எதிர்பார்க்கக் கூடாதா மிதுனா?"

"...?!"

"பெத்தவங்க மாறாதே பிள்ளைங்களுக்காக தான். ஏன் உனக்காக உங்கம்மா தன்னை மாற்றிக்கக் கூடாதா?"

"..........?"

"இதோ பார் மிதுனா, எங்க வீட்டைப் பத்தி நான் ஆரம்பத்திலேயே சொல்லிட்டேன். அம்மாகிட்ட எதையும் தாராளமாய் பேசுவேன். ஆனா, அப்பா எதிரே நிக்க கூட பயப்படுவேன். அப்பா கண்டிப்பானவர் தான், நேர்மையானவர் தான். ஆனா, அன்பானவர் மனிதர். குடும்பங்கறது அன்பினால் கட்டப்படுற மாளிகை.

எங்க வீடு விசாலமானது. ஆனா, அதைவிட விசாலமானது எங்கப்பாவோட மனசு. எங்க நாலுபேருக்கு அத்தனை பெரிய வீடு அவசியமில்லே. ஆனா, அந்த வீட்டின் ஒவ்வொரு செங்கல்லிலேயும் அவரோட நேசம் இருக்கு.

ஒரு மரத்திலுள்ள பழங்களை எண்ணி விடலாம். ஆனா, ஒரு பழத்தால் உருவாகப் போகும் மரங்களை எண்ண முடியாதுன்னு அப்பா அடிக்கடி சொல்வார்.

நானும், தம்பியும் அவங்கவங்க குடும்பத்தோட, பேரக்குழந்தைகளோட வழிவழியா அதே வீட்ல வாழணும்னு தான் அப்பா பிரம்மாண்டமா அந்த வீட்டைக் கட்டினாரே!

ஒரு வேளை நாளைக் கூட தனிக்குடித்தனம் போக ஆசைப்பட்டா இங்கேயே மாடியில தனியா இருக்கட்டும். எந்தக் காரணத்தை முன்னிட்டும் என் பிள்ளைங்க இந்த வீட்டை விட்டுப் போகக் கூடாதுன்னு சொல்வார் அப்பா! அப்பக் கூட தனிக்குடித்தனம் வைக்கும் தான் அவரால யோசிக்க முடிஞ்சது. அவங்களை எதிர்த்து கல்யாணம் பண்ணிகிட்டுப் போகவேண்டிய மாதிரி என்னால யோசிக்க முடியலே. என்ன... பிள்ளைங்க மேலே வச்சிருக்கிற நம்பிக்கை. அந்த நம்பிக்கையை நான் எப்படி சிதைப்பேன் சொல்லு?"

உறைந்து போய் விட்டாள் மிதுனா.

"சம்பிரதாயப்படி பெத்தவங்க ஆசியோட உன்னைக் கல்யாணம் பண்ணிக்க நினைக்கறது தப்பா மிதுனா?"

"இ.. இல்லே..." என்றாள் தெளிவாக.

"நாம ஒன்னு சேருதுக்கு தடையா இருக்கிற விஷயங்களை மாத்தறது உன்னோட பொறுப்பு... சரியா?"

"ம்!"

* * *

அர்விந்த் சொன்ன விஷயங்கள் உள்ளுக்குள்ளேயே சுழன்றடித்துக் கொண்டிருந்தது.

'அவன் சொல்வதில் எந்த தவறும் இல்லையே! எனக்கே இந்த நடப்புகளை உறுத்தலாய் இருக்கும் போது தன் வீட்டுக்கு மருமகளைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பில் இருக்கும் பெரியவர்கள் எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்தான் செய்வார்கள். நாலு பேரிடம் விசாரிப்பார்கள்.

அம்மா பாதிக்கும் அதிகமாய் முகத்திற்கு நேரே பேசுபவள். கைக்கத் தெரிந்து இங்கு குடியிருப்பவர்கள் அவளிடம் நட்பு வைத்ததில்லை. அப்படியானால் அம்மாவை கண்டு விலகிப் போகிறார்கள் என்று தானே அர்த்தம்? அவர்களிடம் விசாரித்தால் நல்லவிதமாய் சொல்ல மாட்டார்களே!'

'என்ன செய்வாளாம்? அப்பா பிரச்னையில்லை. அம்மா கொஞ்சம் தன் வைப்பில் உடைகளை மாற்றிக் கொண்டால் நல்லாயிருக்கும். எப்படி ஆரம்பிப்பது? எப்படி எடுத்துச் சொல்வாள்?'

அவள் தன்னை தயார்படுத்திக் கொண்டிருக்கும் போதே ஹாலில் சத்தம் கேட்டது.

வழக்கம் போல் சண்டைதான்!

ஆரம்பமாய் இருந்தது.

'என்ன இல்லை இங்கே? மூவருமே நன்கு படித்தவர்கள். மூவரின் மாத வருமானம் மொத்தமாக ஒன்றேகால் லட்சம் ஆனாலும்.

பற்றி வீட்டுக்குள்ள நிம்மதியும், சந்தோஷமும் இங்க இல்லையே! என் தகுதிக்கு வரன்கள் போட்டி போட வேண்டும். ஆனால், அம்மாவிடம் உன்னை சிறு குறையால் என் வாழ்க்கையே கேள்விக்குறியாக அல்லவா உள்ளது?"

"உன் மனசிலே நீ என்னதான் நினைச்சிட்டிருக்கே சாரங்கி?" அப்பா கத்தினார்.

"ஆபிஸுக்கு கிளம்பிட்டிருக்கிறப்ப எதுக்கு டிஸ்டர்ப் பண்றீங்க? உங்க வேலையைப் பாருங்க!"

"ஆபிஸுக்கு தான் போறியா... இல்லே..."

"ஸ்டாப்பிட் மேன்... என்னத் தெரியணும் உனக்கு?"

"இப்ப வீட்டுக்கே வரவழைக்க ஆரம்பிச்சிட்டியா?"

"எல்லாத்தையும் தப்பான கண்ணோட்டத்துல பார்த்தா தப்பாதான் தெரியும்."

"நான் கேட்டதுக்கு பதிலே வரலே!"

"எதுக்கு சொல்லணும்? முதல்ல உன் முதுகை திரும்பிப் பார்த்துட்டு... அப்புறமா என்னை குறை சொல்லு!"

"இதோ பார்... இந்தத் தெரு உன்னைப் பத்தி அசிங்கமா பேசுது. உன்னை மாத்திக்க முயற்சி பண்ணு. நமக்கு ஒரு பொண்ணு இருக்கா... அவ எதிர்காலத்தை நினைச்சிப் பார்!"

"எல்லாம் எனக்குத் தெரியும். உன்னை விட அதிகமா சம்பளம் வாங்கறவ நான். அவளுக்காக எத்தனை லட்சம் பேங்க்ல போட்டு வச்சிருக்கேன் தெரியுமா?"

"சம்பாதிக்கிற திமிர்ல தானே இப்படியெல்லாம் ஆடறே? இந்தப் படிப்பு நான் போட்ட பிச்சை!"

"அந்தப் பிச்சைக்கு ஆன செலவை கட்டிடறேன்... திருப்பித் தர்றேன்... வாங்கிக்க!"

"சீ... நீ ஒரு நாய்னு தெரிஞ்சிருந்தா... என் சொந்த பந்தங்களை பகைச்சுக்கிட்டு உன் பின்னாடி வந்து இருக்க மாட்டேன்!"

"அது சரி... வருத்தப்பட வேண்டியது நான்! நீ ஒரு ஆம்பளைன்னு நினைச்சி தான் உன்னை நம்பி வந்தேன். ஆனா, நீ...!"

"சாரங்கி..." ஆவேசத்தோடு மனைவியை பளார் என அறைந்து விட்டார்.

"டேய்... பேடி... என்னையா அடிச்சே?" என்றவள் பதிலுக்கு அவரை அறைந்து விட்டாள்.

எதிர்பார்க்காத விஷ்ணு அவமானத்தில் சுருங்கிப் போனார். பதிலுக்கு எதிர்க்கவோ, பேசவோ முடியாமல் நிலைகுலைந்து விட்டார்.

## சுவையான டீ

தேநீர் என்றாலே அனைவரும் விரும்பி சாப்பிடுவது என்பதுடன் உற்சாகமும் சுவையும் அளிக்கவல்லது.

டீயை சாதாரணமாகவே எல்லோரும் தயாரிக்கலாம் என்றாலும் ஒரு கப் டீ தயாரிக்க வேண்டும் என்றால் 1½ கப் தண்ணீரை அடுப்பில் வைத்து 2 டீஸ்பூன் சீனி, 1 ஸ்பூன் டீத்தூள் போட்டு கொதிக்க வைக்க வேண்டும். நன்றாக கொதி வந்ததும் ½ கப் பால் சேர்த்து மீண்டும் கொதிக்க வைத்து இறக்கி வடிகட்டினால் சுவையான டீ தயார்.

ஆபிஸ் செல்ல... அறையை விட்டு வெளியே வந்த மிதுனா... நடந்தவைகளை பார்த்து சற்று நேரம் உலகையே மறந்தாள்.

என்ன நடக்கிறது இங்கே? அசிங்கமாய் ஒருவரை ஒருவர் திட்டி சண்டை போடுவதும், அம்மாவை அப்பா அடிப்பதும், பதிலுக்கு அம்மா திருப்பி அடிப்பதும்?

சினிமாவில் இப்படியொரு காட்சியை வைக்க டைரக்டரே யோசிப்பாரே. 'அதெப்படி சார்... பொண்டாட்டி போய் புருஷனை அடிக்கிறதாவது. அடியவள எத்தப்பாங்களா? அப்புறம் தியேட்டர் தாங்குதான் வாங்கும்' என்பாரே!

ஆனால், அம்மா ஒரு கணமும் யோசிக்காமல் கணவனையே கைநீட்டி அடிப்பதாவது?

விரைந்து சென்றாள்.

"மம்மி... என்ன மம்மி இது? அப்பாவைப் போய்..."

"இந்தாளு என்னை அடிக்கறப்ப... என்னை கைகட்டி சும்மா இருக்கச் சொல்றியா?"

"என்ன மம்மி அப்பாவைப் போய் மரியாதையில்லாம அந்தாளு இந்தாளுன்னு..."

"புருஷனா நடந்தா மதிக்கலாம். மனுஷனாவே நடக்காத ஒரு ஆளை தலைமேல தூக்கி வச்சிட்டு ஆடச் சொல்றியா?"

"ஸ்டாப்பிட்... சாரங்கி... இதுதான் உனக்கு லிமிட். இதுக்கு மேல ஒரு வார்த்தைப் பேசினாலும் அவ்வளவுதான்... கொலை விழும்."

"நீ... தின்னு பேசிட்டிருக்கிற இந்த இடம் யாரோடதுத் தெரியுமா? என் உழைப்பில சம்பாதிச்ச... அத்தால வாங்கினது. இது என் வீடு. என் வீட்டிலேயே இருந்துகிட்டு என்னையே மிரட்டறியா?"

"சீ... ஸீட்டா இது? காட்டுக் கூடாரமும் வாராங்க போறாங்க. நல்லவங்க இருக்க முடியுமா இங்கே? எனக்கும் தனியே போய் வாழத் தெரியும்!"

"அப்பா... ப்ளீஸ் கொஞ்சம் அமைதியா இருங்க."

"போயா... நீ எங்கே போவேன்னு எனக்கு தானேத் தெரியும். கழுதைக் கெட்டா குட்டிச் சுவரு..."

"மம்மி... கொஞ்ச நேரம் பேசாம தான் இரேன். என்ன நடக்குது இந்த வீட்ல...?"

"மிதுனா... உனக்கு வேணாம்மா இது! போய்டு... நீயும் எங்கேயாவது போய்டு. இந்த வீட்ல இருந்தா உன் எதிர்காலமே நாசமாப் போய்டும். உன் சம்பாத்தியத்துல ராணி மாதிரி இருந்துக்க. நல்லப் பையனாப் பார்த்து சொல்லு... அப்பா வந்து கல்யாணம் பண்ணி வைக்கிறேன். போ... போய்டு!"

சாரங்கி... சில கணங்கள் கண்களை மூடி... பின் திறந்தாள்.

"மிதுனா... நீ ஆபிஸுக்கு கிளம்பு!"

"மம்மி!"

"சொன்னதை செய்... நீ கிளம்பு. சில விஷயங்களை பேசி முடிக்க வேண்டியிருக்கு. கிளம்பு!" இறுக்கமாய் இருந்தது அவள் முகம்.

மனதில் பெரும்பாரத்துடன் வெளியே வந்தாள் மிதுனா.

'எனக்குத் தெரியாமல் என்னவோ நடக்கிறது. இருவருமே அதை மறைக்கப் பார்க்கிறார்கள். ஆனால், இருவருமே சுயநலமாய் இருக்கிறார்கள். என்னைப் பற்றிய அக்கறை இந்த வாழ்க்கையில் இல்லை. என்னைக் காப்பாற்ற வேண்டிய அப்பா, 'வெளியே போய் தனியா வாழ்ந்துக்க... உனக்குன்னு பிடிச்ச வாழ்க்கையை தேர்ந்தெடுத்துக்க...' என்றல்லவா அட்வைஸ் பண்ணுகிறார்?

இதெல்லாம் அர்த்தத்துக்குத் தெரிந்தால்?'






அலுவலக நேரம் முடிந்து... எல்லோரும் போனப் பிறகும் மிதுனா ஏதோ யோசனையுடனே அமர்ந்திருந்ததை அர்விந்த் கவனித்தான்.

அவள் கேபினுள் வந்தான்.

"நேரம்... நீ கிளம்பலே?"

"ஆ... ம்... ம்... போகணும்."

"என்னாச்சு உனக்கு... என்னவோ போல இருக்கிறே? காலையிலிருந்தே உன் முகமே சரியில்லையே!"

"இப்படி அக்கறையாய் விசாரிக்க எனக்காக நீயாவது இருக்கிறியே..."

"என்ன சொல்லு?"

"நோட் ஒக்... வேற ஒண்ணுமில்லே..."

"எனக்குத் தெரியும்... அடிக்கடி தலைவலி ஏன் வருதுன்னு..."

"ஏன்?"

"இது காதல் ஏக்கத்தால வர்ற தலைவலி... இதுக்கு ஒரே ஒரு மருந்துதான் இருக்கு!" சுற்றிலும் கவனமாய் பார்வையை ஓட விட்டவன், சட்டென அவள் நெற்றியில் இதழ் பதித்தான்.

"இப்ப தலைவலி போயிடுச்சா?" என்றான் கனிவும், காதலுமாய்.

திகைப்புடன் நிமிர்ந்தவளின் கண்கள் கலங்கி இருந்தன. பெண்மையாய் சிரித்து "தாங்க்ஸ்" என்றாள்.

அந்த கண்ணீரும், புன்னகையும் அவனை என்னவோ செய்தன.

"என்னம்மா?" பரிவுடன் கேட்டான்.

"ஐ'ம் லோ ஹாப்பி!"

"சரி... நேரமாச்சு பார்! மழை வர்ற மாதிரி

இருக்க நினைத்திட்டப் போது தலைவலியோட காய்ச்சலும் வந்துட்ட போதும் ப்... எந்திரி"

அந்த நேரம் அவளால் தாங்க முடியாததாய் இருந்தது.

'இந்த அன்பும் கனிவும் நிலைக்குமா? வாழ்வின் கடைசி வரை கிடைக்குமா? இப்போதுதான் அர்வித்தன் என்னை நெருங்கி வருகிறார். ஒன்று சேருவோம் என்ற நம்பிக்கை ஆனால், என் குடும்பத்தில் விரிசல் விழுந்திருக்கிறது அர்வித். நான் அனாதை ஆகிவிடுவேனோ என்று பயமாய் இருக்கிறது!'

வீட்டுக்கு வந்த போது பூட்டுத் தொங்கிக் கொண்டிருந்தது. எப்போதும் வீட்டுக்கு வரும்போது அப்பா, அம்மா இருவரில் யாராவது ஒருவர் வீட்டுக்கு வந்திருப்பார்கள்.

கதவைத் திறந்து உள்ளே வந்த போது அவள் மனதைப் போலவே இருண்டிருந்தது.

சுவிட்சைப் போட்டாள். வெளிச்சம் நிரம்பியது.

அழகான இண்டீரியர் டெகரேஷன். காஸ்ட்லியான ஃபர்னிச்சர், ஃபேன்சி லாம்ப், புரியாத ஓவியங்கள்.... எதிலுமே உயிர் இல்லாதது போல் தெரிந்தது.

சொந்த விளக்குகளுக்கு கொடுத்த மரியாதையை சாரங்கி அட்லீஸ்ட் ஒரு குத்து விளக்கிற்காவது கொடுத்திருக்கலாம்.

புரட்சிகரமான சிந்தனைகளை வரவேற்கலாம். ஆனால், அது கலாசார சீரழிவுகளுக்கு வித்திட அனுமதிக்கக் கூடாது. ஒருவரின் சுதந்திரம், அடுத்தவரின் வாழ்க்கையை அழிக்கும் வேட்டாக மாறி விடக் கூடாது.

கிச்சனுக்கு சென்று காபி போட்டுக் குடித்தாள். அவ்வளவு பெரிய வீட்டில் தனித்து விடப்பட்டதுபோல் உணர்ந்தாள்.

அந்த வீட்டையே சுற்றி சுற்றி வந்தாள்.

அம்மாவின் அறை திறந்திருந்தது.

அநாவசியமாய் மிதுனா அதற்குள் சென்றதில்லை. இப்போது சென்றாள்.

பெரிய அறை. பெரிய கட்டில்! நீளமாக இருந்தது. வார்ட்ரோப் நிறைய... மடிப்பு கலையாமல் ஹாங்கரில் மாட்டப்பட்டிருந்த விதவிதமான உடைகள். மூடப்பட்டிருந்த கப்போர்டின் கதவு லேசாய் திறந்திருக்க... மூடப் போனவள், கையை பின்னுக்கு இழுத்துக் கொண்டாள்.

டயரி, செண்ட், லோஷன் வகையறாக்களுக்கு நடுவே... இதென்ன பாட்டில்?

எடுத்துப் பார்த்தவள் நடுங்கிப் போனாள்.

விஸ்கி!

'மைகாட்! அம்மாவிற்கு குடிப்பழக்கமும் இருக்கிறதா? சீ...!'

இடித்துப் போய் விட்டாள் மிதுனா!

* * *

சாரங்கி பற்றிய பயத்துடனே, சாப்பிடாமலே உறங்கிப் போனாள். அம்மா எப்போது வந்தாள் என்றேத் தெரியாது.

காலையில் தான் பார்த்தாள். வீட்டில் எதுவும் நடக்காதது போல் ப்ரெட் டோஸ்டில் சான்ட்விச் பண்ணிக் கொண்டிருந்தாள்.

அவளைப் பார்க்கையில் வெறுப்பாக இருந்தது.

மிதுனாவைப் பார்த்து புன்னகைத்தாள்.

"குட்மார்னிங் டார்லிங்!"

"நைட்டு எப்பம்மா வந்தே?"

"அதை விடு... சான்ட்விச் பண்ணட்டுமா?"

"பிடிக்கலேம்மா!"

"உடம்பை ஆரோக்கியமா வச்சிருக்கணும் மிதுனா!"

"அப்பா எங்கேம்மா?" என்றாள் அவள் பேச்சை திசை திருப்ப.

"ரூம்ல போய் பார்!"

போய்ப் பார்த்த வேகத்தில் திரும்பி வந்தாள்.

"இல்லையேம்மா....!"

சாரங்கியின் முகம் மாறிப் போனது.

"ஒரு வேளை காலையிலே சீக்கிரமா வெளியில் போயிருக்கலாம். உங்கப்பா என்ன சின்னக் குழந்தையா? வருவார்... போய் உன் வேலையை கவனி!"

அன்று முழுக்க விஷ்ணு வரவேயில்லை. மறுநாள், அதற்கு அடுத்த நாள் வராமல் போகவே, பயம் பற்றிக் கொண்டது மிதுனாவிற்கு.

அவரின் நண்பர்களை தொடர்பு கொண்டு விசாரித்தபோது யாருக்குமே எதுவும் தெரியவில்லை.

அவள் தான் பதறினாளே ஒழிய, சாரங்கியிடம் எந்த டென்ஷனும் இல்லை.

"மம்மி... டாடிய எங்கு தேடியும் காணலே. நீ சும்மாவே இருக்கே..."

"என்னப் பண்ணச் சொல்றே?"

"என்ன மம்மி இப்படிப் பேசறே?"

"மிதுனா... இப்ப என்ன வேணும் உனக்கு?"

"அப்பா!"

"நான் சொல்ற அட்ரஸ்ல போய் பார்... சுகபோகமா இருப்பார்." சாரங்கி இளக்காரமாய் பேசினாள்.

"எந்த அட்ரஸ்?"

சொன்னாள்.

அம்மா சொன்ன அட்ரஸ் ராயப்பேட்டையில் இருந்தது.

மீரான் சாகிப் தெருவில் இரண்டாவது மாடிப் போர்ஷனில் இருந்தது வீடு.

'யார் வீடு இது? அப்பா எதற்காக இங்கே இருக்க வேண்டும்? அம்மாவுக்கு எப்படித் தெரியும்?'

காலிங்பெல் அழுத்தலுக்கு கதவைத் திறந்தாள் நாற்பது வயது மதிக்கத்தக்க பெண்மணி.

நீட்சண்யமான பார்வையும், புன்னகை உறைந்திருந்த முகமுமாய்... லட்சணமாக இருந்தாள்.

"யாரும்மா நீ? யாரு வேணும்?"

"மிஸ்டர் விஷ்ணு இருக்காரா?"

"நீ... நீங்க?" முகம் இருண்டது.

"அவரோட டாட்டர்!"

சற்று நேரம் தயங்கி... "ஒரு நிமிஷம்!" என்று கூறி விட்டு உள்ளே சென்றாள்.

'யாரோட வீடு இது? அப்பா இங்கே எதற்காக...?' அவள் யோசித்து முடிப்பதற்குள், வெற்று பார்வையுடன், தயக்கத்துடன் சங்கடம் அப்பிய முகத்துடன் வாசலுக்கு வந்தார் விஷ்ணு.

அவர் இருந்த கோலம் உதைப்பதைத் தர... மிதுனா உடைந்துப் போனாள்.

"அப்பா... என்னப்பா இதெல்லாம்? வீட்டுலே சொல்லிட்டு வர வேணாமா இது?"

"நான் கோவிச்சிட்டு வரலேம்மா... நிரந்தரமா வந்திருக்கேன்."

"நிரந்தரமாவா? யார் வீடுப்பா இது? நீங்க ஏன் இங்கே வந்து..."

"ஒரு நிமிஷம் மிதுனா.... ஏன் வாசல்லேயே நின்னு பேசறே? உள்ளே வா... இதுவும் நம்ம வீடுதாம்மா.. பவானி... மிதுனாவுக்கு சாப்பாடு ரெடி பண்ணு!"

"இல்லேப்பா.... நான் வரலே.. உங்ககிட்டே பேசணும்... டிரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வாங்க வெயிட் பண்றேன்!" கோபத்தை அடக்கிக் கொண்டு சொன்னாள்.

* * *

அடுத்த பத்தாவது நிமிடம் வீட்டின் அருகிலிருந்த பார்க்கில் அமர்ந்திருந்தனர் இருவரும்.

"இப்ப சொல்லுங்க... யார் வீடு அது?"

"என் வீடுதாம்மா!"

"யார்..?"

"பவானி... உனக்கு சித்தி!"

"டா...டி!"


"ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கப் போறோம்."

"ஏ... என்னது?" நெருப்பைத் தொட்டதுப் போல் துள்ளி எழுந்தாள்.

"பவானி... உங்கம்மா மாதிரி இல்லே... ரொம்ப நல்ல பொண்ணு. இவ அழகுக்குப் பொருத்தமில்லாத ஒரு ஆளுக்கு கல்யாணம் பண்ணி வச்சிருக்காங்க. அவன் குடிகாரன், சந்தேகப் புத்திக்காரன். பவானி குளிக்கறப்பக் கூட வெளியில தாழ் போட்டுட்டு உட்கார்ந்திருப்பானாம். ரொம்ப கொடுமைகளை அனுபவிச்சிருக்கா. புருஷன்காரன் ஒரு ஆக்ஸிடென்ட்ல செத்துட்டான்..."

"ஸ்டாப்இட் டாடி... எனக்கு மத்தவங்க கதை தேவையில்லே. அம்மாவுக்கு எதுக்கு துரோகம் பண்றீங்க?"

"அவ எனக்கு துரோகம் பண்ணலை? பதிலுக்கு நானும் பண்ணினேன். தட்ஸால்!" என்றார் நிதானமாக.




"நீங்க செய்த தப்பை மறைக்க மம்மி மேலப் பழியப் போடறீங்களா?"

"நான் எந்த தப்பும் பண்ணலே மிதுனா. நான் சொன்னா உன் வயசுக்கு புரியவும் செய்யாது. உங்கம்மாவுக்கு சம்பாதிக்கிற திமிர் அதிகம். ஆரம்பத்திலே இருந்தே என்னை மட்டந்தட்டிப் பேசுவா. அடுத்தவங்களோட கம்பேர் பண்ணி நக்கலடிப்பா... படுக்கை அறையிலே கூட! அவளுக்கு ஆண் நண்பர்கள் அதிகம். தப்புன்னு சொல்லலே. அவ பார்க்கிற வேலையில... கண்டிப்பா ஆண்களோட பேசிதான் ஆகணும். பட் ஒரு பெண்ணோட கூட உங்கம்மா பழகலே இல்லையே! மேல்நாட்டு கலாசாரம் அவளுக்கு ரொம்பப் பிடிக்கும். ஃபிரெண்ட்ஸோட வீக் எண்ட் பார்ட்டிக்கெல்லாம் போய் தூங்கியா..."

சற்று நேரம் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு மறுபடித் தொடர்ந்தார்.

"நான் கண்டுபிடிச்சேன், கேட்கலே. நிறைய விஷயங்கள் காதுக்கு வந்தது. உடம்பை கட்டுக்கோப்பா ஜொலிப்பா வச்சுக்கணும்னு நினைச்சவ... ஒழுக்கத்துல கட்டுப்பாடா இல்லே. பல நாட்கள் குடிச்சிட்டு தான் வீட்டுக்கு வர்றா. எனக்கும் உங்கம்மாவுக்கும் நிரந்தரமா விரிசல் விழுந்து ஆறேழு

வருஷமாவாச்சு. உன் காதுக்கு எதுவும் வந்துடக் கூடாதுன்னு தான் வீட்லே எதையும் காட்டிக்காம இருந்தேன். இப்ப... இப்ப அவளோட ஆட்டம் எல்லை மீறிப் போயாச்சு மீனா. விவாகரத்து ஆனோட... கத்திட்டிருந்தவ இப்ப நேரடியா வீட்டுக்கே வரவழைச்சு..."

"........!!"

"எந்த ஆம்பளையால சகிக்கக முடியும் சொல்லு? காதலிச்சி கல்யாணம் பண்ணி, குடும்பம் நடத்தி ஒரு குழந்தையையும் பெத்து வளர்த்தப் பிறகு, நீ ஆம்பளையே இல்லைன்னு அசிங்கப்படுத்தறா. 'என் வீடு, வெளியே போ'ங்கறா. இதையெல்லாம் கேட்டுக்கிட்டு அவளோட எப்படிம்மா குடும்பம் நடத்த முடியும் சொல்லு?"

"சரி... அதுக்காக, நீங்களும் அதே தப்பை செய்யணுமா?"

"மனசு அவளோட காயப்பட்டிருந்த மீனா. நியாயமான அன்புக்காகவும், ஆறுதலுக்காகவும் அலைஞ்சப்ப தான பவானிய சந்திச்சேன். அற்புதமான பொண்ணு அவ. நீயும் கல்யாணமாகிப் போயிட்டா எனக்குன்னு யாரும்மா இருக்கா? கடைசி காலத்துலதானே... துணையேத் தேவைப்படுது. உனக்கு இதெல்லாம் தப்பாத் தெரியலாம். ஆனா, என் மனசுக்கு நியாயமாப் பட்டதை செய்தேன். உன் கல்யாணம் முடிஞ்ச பிறகு பவானியோட...



சேர்ந்து வாழுணும்னு நினைச்சேன். உங்களுக்கு பொறுமை இல்லையே! உனக்கும் அவமானம்தே... ஆரம்பிச்சிட்டேன் மிதுனா நானே உனக்கு..."

"போதும் டாடி... நான் கிளம்பறேன்!" என்றாள் நெகிழ்ந்த கண்ணீருடன்.

"மி...து...னா!"

"உங்களோட புது வாழ்க்கைக்கு வாழ்த்துக்கள்... பை டாடி!" விறுவிறுவென திரும்பி நடந்தாள்.

மிகுந்த வேதனையுடன் மகளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

* * *

**தொ**ங்கிப் போய் வந்த மகளைப் பார்த்து சிரித்தாள் சாரங்கி.

"என்ன மிதுனா... நான் சொன்ன அட்ரஸ்க்கு போய் பார்த்தியா? இருந்தாரா உங்கப்பன்?"

"........?!"

"எப்படியிருக்கா உன் சித்தி?"

"மம்மி... ப்ளீஸ்"

"உனக்கே இப்படி இருக்குன்னா... எனக்கு எப்படி இருக்கும்?"

"........?!"

"எல்லாத் தப்புக்கும் காரணம் நான்தான்னு பழியை என் மேலப் போட்டிருப்பானே அந்தாளு?"

"........?!"

"பொறாமை, சந்தேகப் புத்தி. யார் கூட பேசினாலும் பழகினாலும், அவன் கூட தூங்கியா இருந்துட்டு வர்றியான்னு நாக்கூசாம கேப்பான். இதுவே படிக்காதப் பொண்ணா டாட்டியா இருந்திருந்தா... இவே என்னைப் பார்த்தா இப்படியொரு கேள்வியக் கேட்டதுக்கு பக்கெட் பக்கெட்டா கண்ணீர் விட்டு தன்னை எப்படியாவது திருப்பிடா, ஆனா, என்னை மாதிரி புரட்சிகரமா சிந்திக்கிற பெண்கள் சரியான பதிலடி கொடுப்பாங்க. கொடுத்துத்தான் போயிறேன்."

மிதுனாவுக்கு அழுகை குமுறிக் கொண்டு வந்தது.

'ஏம்மா இப்படியெல்லாம் பேசறே, நடந்துக்கறே?' என்று அவளிடம் கேட்கக் கூட முடியாது.

என் சுதந்திரத்தில் தலையிட யாருக்கும் உரிமை இல்லை என்பாள்.

அடுத்தவரின் உரிமையை, நிம்மதியை பறிக்கிற விஷயத்திற்கு சுதந்திரம் என்று பெயரிட்டது யார்?

புரட்சிக் கவிஞன் எழுதி வைத்து விட்டுப் போனது இப்படியாவிட்ட புரட்சிப் பெண்ணைப் பற்றியா? பதிலடிக் கொடுப்பதற்கு வரைமுறையே இல்லையா?

எல்லார் வீட்டிலும் குடும்பம் நடத்தவில்லையா? வீட்டுக்கு வீடு சண்டை சச்சரவு இருக்கத்தான் செய்கிறது. ஆனால், இப்படியொரு மானக்கேடான விஷயம் யார் வீட்டிலும் நடக்கவில்லையே! பெற்ற குழந்தைகளுக்காகவே எத்தனையோ வீட்டில் பல கசப்புகளை மறந்து, மறைத்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த இருவரும் அவரவர் புதுவாழ்க்கையை பற்றி கவலைப்படுகிறார்களேயொழிய... கல்யாண வயதில் நிற்கும் பெண்ணைப் பற்றி நினைத்தேப் பார்க்கவில்லையே! தங்கள் நடத்தையும், செயல்பாடுகளும், அந்தப் பெண்ணின் வாழ்க்கைக்கு பெரும் தடையாக இருக்கப் போகிறது என்பதை ஏன் நினைத்துப் பார்க்கவில்லை?

காலை விட்டு அழ வேண்டும் போலிருக்க... எழுந்து அறைக்குப் போனாள்.

"எங்கே போறே மிதுனா? பேசிக்கிட்டே இருக்கும் போது இப்படி நடுவில எந்திரிச்சுப் போறது என்ன நாகரீகம்?" சுருக்கென கோபம் வந்தது சாரங்கிக்கு.

அம்மாவைத் திரும்பிப் பார்த்த மிதுனாவின் மூக்கு விடைத்தது.

"எனக்கும் நாகரீகம் தெரியும் மம்மி. ஆனா உன்னோட நாகரீகம் வேற... என்னோட நாகரீகம் வேற. நடுவில பெரிய இடைவெளி இருக்கு மம்மி" என்றவள் அறைக்குள் நுழைந்து கதவை சாத்திக் கொண்டாள்.

நெஞ்சில் பொங்கிய வேதனை குமுறல்கள் அழுகையாய் பீறிட்டன. நடந்த அசிங்கங்கள், வரப்போகும் அவமானங்கள், ஏற்படப் போகும் இழப்புகள் எல்லாமே கண்ணீராய் வெளிப்பட... அப்படியே கதவோடு சரிந்து அமர்ந்தாள்.

'இந்தப் பிரச்சினையை எப்படி அர்வித்திடம் சொல்வது? இன்னொரு பெண்ணுடன் வாழ்க்கை நடத்தும் அப்பாவைப் பற்றி எப்படி சொல்வது? அம்மாவின் புரட்சிகரமான நடத்தையைப் பற்றி என்னவென்று சொல்வது? அவன் வீட்டில் இதை எப்படி அங்கீகரிப்பார்கள்?

வாழ்க்கையில் ஒன்று சேருவோம் என்ற நம்பிக்கையுடன் இப்போதுதான் நெருங்கி



வருகிறோம். எல்லாமே ஒரு முடிவுக்கு வந்து விடுமோ?'

பயமும், கவலையுமாய் சாப்பிடக் கூட போய் நிற்கவில்லை. அர்வித்தின் முகத்தை நேருக்கு நேர் பார்க்கும் தைரியம் இப்போது அறவே இல்லை.

மிதுனா எதுவுமே பேசவில்லை. அம்மா மனம் கலங்கி ஆபீஸ் போனாள்.

[illegible] ஒத்துழைக்கும் என்றாலும் செல்லவில்லை. அர்வித்தின் முகத்தைப் பார்க்கும் தெம்பு இல்லை.

அன்று சாரங்கியும் வீட்டிலிருந்தாள்.

"ஆபீஸ்க்கு போகலையா?" என்று மகளிடம் கேட்டாள்.

"இல்லை"

"ஏன்?"

"ஃபீவர்!"

"டேக் கேர்!"

அவ்வளவு தான்! 'ஏன் ஹாஸ்பிட்டலுக்குப் போகலை?' என்ற வார்த்தை வரவில்லை. சிறு வயதிலிருந்தே அவள் உடம்பிற்கு சரியில்லை என்றால் அப்பாதான் ஹாஸ்பிட்டலுக்கு அழைத்துச் செல்வதெல்லாம்.

"ஃபீவரா? நோவா. அதைப் பத்தி நினைச்சுப் பார்க்க முடியாது. ஆபீஸ்ல ஏகப்பட்ட வேலையிருக்கு. இன்ஜெக்ஷன் போட்டா சரியாப் போயிடும். கூட்டிட்டுப் போங்க..." என்பாள் கணவரிடம்.

ஆபீஸ் வேலைகளிலேயே அதீத கவனம் செலுத்தி வந்ததால் குடும்ப பொறுப்புகளில் நாட்டமில்லாமல் போனதோ... என்னவோ?

மிதுனா ஆபீஸ்க்கு வரவில்லை என்றதும், முதன் முறையாகப் பதறிப் போய் போன் பண்ணினான் அர்வித்.

"மிதுனா... ஏன் இன்னைக்கு வரலே?"

"ஃபீவர் அர்வித்! ரெண்டு நாளைக்கு வரமாட்டேன்!"

"ஃபீவரா? ரெண்டு நாளா? பார்த்துக்க அடிக்கடி உடம்புக்கு முடியாமப் போகுது."

"பார்த்துக்கறேன்"

"ரெண்டு நாளா உன்னைப் பார்க்காம எனக்கு கஷ்டமாயிருக்கும் மிதுனா. நான் ஈவ்னிங் உங்க வீட்டுக்கு வரட்டுமா?"

"எங்க வீட்டுக்கா?"

"ஏன் ஷாக்காகறே? உன்னையும் பார்த்த மாதிரி இருக்கும், என் வருங்கால மாமனார், மாமியாரையும் பார்த்த மாதிரி இருக்கும்."

கண்கள் [illegible]

"எல்லாவ் ஆசை நம்பிக்கை [illegible] அத்தனையும் காணாமல் போகப் போகுது."

"என்ன மிதுனா அமைதியாயிட்டே?"

"ரெண்டு பேருமே ஈவ்னிங் ஒரு ரிசப்ஷனுக்குப் போறாங்க. வர லேட்டாகும்."

"சரி... அவங்க இல்லாதப்ப வீட்டுக்கு வர்றது நல்லாயிருக்காது... இன்னொரு நாள் வர்றேன். உடம்பைப் பார்த்துக்க!"

அவன் கட் பண்ணப் பிறகும், அவன் வார்த்தைகள் செவிகளுக்குள் ஒலித்துக் கொண்டிருந்தன.

**12**

**சா**ரங்கியும் லீவ் போட்டு விட்டு வீட்டிலே இருந்தாள். சதா ஏதோ யோசனையிலேயே இருந்தாள். மிதுனாவிடம் கூட சரியாய் பேசவில்லை.

மூன்றாவது நாள்... காலை!

இரண்டு நாட்களாக எங்கும் போகாமல்... போயிருந்தால் அவளே தான் காபி கலந்து குடிக்க வேண்டியிருந்தது.

வெளியில்... சாரல் மழை... ஜன்னல் கோலம் வரைந்து கொண்டிருந்தது.

எதையும் ரசிக்கும் மனநிலையில் இல்லை.

பிரஷ் பண்ணிவிட்டு கிச்சனுக்குள் நுழைந்த மிதுனா, ஃபிரிட்ஜிலிருந்து பால் கவரை எடுத்து பாத்திரத்தில் ஊற்றி கேஸை பற்ற வைத்தாள்.

"ஹாய்... மிதுனா குட்மார்னிங்!"

புதிதாய் வந்த ஆண்குரல் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பிய மிதுனா... இன்னும் அதிர்ந்தாள்.

சிவா!

கலைந்த தலையும், பனியன், லுங்கியில் அப்போதுதான் படுக்கையை விட்டு எழுந்து வந்த முகமுமாய் நின்றிருந்தான்.

'இவனா? இவன் எப்போது வந்தான் இங்கே?'

"காபி போடறியா மிதுனா? எனக்கு காபி பிடிக்காது. டீ கிடைக்குமா ப்ளீஸ்?"

திரண்டு வந்த ஆத்திரத்தை கட்டுப்படுத்திக் கொண்டவள், கேஸை அணைத்து விட்டு வெளியில் வந்தாள்.

சாரங்கியும், அறையை விட்டு வெளியில் வந்தாள்.

"குட்மார்னிங் டார்லிங்!"

"மம்மி... உன்கிட்டே கொஞ்சம் பேசணும்."

என் அருமைக் கார்லோ?"

"என்ன... இங்கேயே சொல்லு!"

"பூஜ்யி பள்ளிகள் மம்மி... பிளீஸ்!"

வந்தான்.

"என்ன மம்மி இதெல்லாம்? என்னை அதையும் இங்கே!"

"எதைப் பத்தி கேக்கறே?"

"அவர் யார்... அவர் எதுக்கு நம்ம வீட்ல வந்து இருக்காரு?"

"ஷிவாவைப் பத்திச் சொல்றீயா?" அலட்டிக்காமல் கேட்டாள்.

"..........?!"

"சத்தி வயைச பேச விருப்பமில்லே. தொழிலாலயே விஷயத்துக்கு வர்றேன். ஷிவா இனிமே இங்கேதான் இருப்பார்." என்றாள் நிதானமாக.

"ம...ம்...மி!"

"ஏன் மிதுனா.... உனக்கப்பாவுக்கு புதுசா வேறொரு துணை வேணும். எனக்கு வேணாமா?"

"இந்த சொணைட்டி உன்னை தப்பாப் பேசாதா?"

"அதைப்பத்தி எனக்குக் கவலையில்லே. சொணைட்டிக்காக நான் வாழலே. மத்தவங்களோ லைஃப் ஸ்டைல் எனக்குப் பிடிக்கலே. சொன்னா மாத்திப்பாங்களா? இல்லைதானே? அவங்கவங்க வாழ்க்கையை அவங்கவங்கதான் வாழ்ந்தாகணும். வாழ்க்கைன்னா சந்தோஷமா வாழறதுக்காக தான். சம்பாதிக்கறது எதுக்காக? அனுபவிக்கத் தானே? என்னிடம் இன்னும் இளமை மிச்சமிருக்கு.

எத்தனை நாள் உங்கப்பா, 'ஷிவா உன்னை இங்கெல்லாம் தொட்டதுண்டா'ன்னு சந்தேகப்பட்டு கேட்டார் தெரியுமா? அந்த சந்தேகம் தான் ஷிவா மேல காதலை வலிய உருவாக்குச்சு. ஷிவாவுக்கும் என் மேல பயங்கர லவ்.

டைவர்ஸுக்கு அப்ளை பண்ணப் போறேன். கிடைச்சதும்.... ஷிவாவை கல்யாணம் பண்ணிக்கப் போறேன். அதுக்குள்ளே உன்னோட கல்யாணத்தை முடிச்சிடணும். ரெண்டு மூணு அலையன்ஸ் ரெடியா இருக்கு. ஷிவாதான் உனக்காக கிட்டேருந்து பண்ணிக்கறார். சப்போஸ், உனக்கு யார மேலயாவது அஃபேர் இருந்தாச் சொல்லு... முடிச்சிடலாம். என் கடமை முடிஞ்சதுன்னா... நான் ஃப்ரீயாகிடுவேன்." எதைப்பத்தியும் கவலைப்படாமல் பேசிக் கொண்டே போனாள்.

மிதுனா அவளை வெறுப்புடன் பார்த்தாள். அவள் கனவெல்லாம் பொடிப் பொடியாக உதிர... ஒரு முடிவுக்கு வந்தாள். தன்னை திடப்படுத்திக் கொண்டாள்.

* * *

**ஸ்**நேகமுடன் வெளிறிய முகமுமாய் ஆபீஸில் அமர்ந்திருந்தவளைப் பார்த்து கண்களைச் சுருக்கினான் அரவிந்தன்.

"என்னாச்சு... இவளுக்கு? உடம்பு ரொம்ப பலே முடியாமல் போயிட்டதா? சாதாரண காய்ச்சல் என்று தானே நினைத்தேன்!"

கேட்டும் விட்டான்.

"அத்தனைக்கு மோசமாயிடலை... நல் ரும் ஒக்கே அப்புறம்..."

"சொல்லு!"

"எனக்கே எனக்காக டைம் ஒதுக்க முடியுமா?"

"ஃபேட்டி, ரொம்ப நாளி ஆட்டல இருக்காயே போலிருக்கு." என்றான் சந்தோஷமாய் சிரித்து.

"..........?!"

"கல்யாணத்துக்கு முன்னாடியே வெளியே இப்படி எல்லாம் மீட் பண்ணணுமா மிதுனா? எங்கப்பாவுக்கு பிடிக்காது அதிகம். யாராவது பார்த்துட்டு அவர் காதிலே போட்டுட்டாங்கன்னா உன் மேல உள்ள நல்ல அபிப்ராயம் குறைஞ்சுடும். அதான் யோசிக்கிறேன்."

## பளீச்... பளீச் நகங்கள்

உங்கள் கைவிரல்களில் நகங்கள் பளபளப்பின்றி சொரசொரப்பாக இருக்கிறதா? கவலையே வேண்டாம். கொஞ்சம் துளசி இலையை நசுக்கி அதை தேங்காய் எண்ணெயில் முக்கி நகங்களில் தேய்க்க வேண்டும். ஒரு வாரம் தேய்த்து வந்தாலே பலன் தெரியும். நகங்கள் பளிச் என்று மின்னும்.

கேரட்டை தோல் நீக்கி சிறு சிறு துண்டுகளாக நறுக்கி பின்னர் அதை பசும் பாலில் போட்டு அவித்து அதனோடு காய்ந்த திராட்சை, தேன் கலந்து சாப்பிட்டால் உடல் வலுவடையும். - மைதிலி, சென்னை.



"நல்ல அபிப்ராயமா? அது என்னைக்கு வரணும்?" பொறுப்பாக விட்டாள்.

"ப்ளீஸ் அரவிந்த்... போதும்! இனிமே கப்பிட் பாட்டே வா!"

"அதுக்கேன் கெஞ்சறே? வர்றேன்... ஓகே!" பாணியில்

அவள் சொன்ன ரெஸ்டாரெண்டுக்கு முன்னதாகவே வந்து காத்திருந்தான்.

ஸைட் ஆஃப் கலர் சல்வாரில் வந்தவளை கண்கொட்ட அத்தனாமல் பார்த்தான்.

"இந்த டிரஸ் உனக்கு ரொம்ப நல்லாயிருக்கு மிதுனா."

"தாங்க்ஸ்!"

"ஆனா, முகம் தான் டல்லாயிருக்கு."

"தாங்க்ஸ்!"

"இதுக்கும் தாங்க்ஸா?"

"உண்மையச் சொன்னீங்களே... அதுக்காக!"



"மிதுனா... இப்பல்லாம் உன் கூட மணிக்கணக்கா உட்கார்ந்து பேசணும்னு ரொம்ப ஆசையாயிருக்கு... தெரியுமா?"

"..........?!"

"சீக்கிரமே வீட்டுல சொல்லி, கல்யாணத்துக்கு பர்மிஷன் வாங்கிட்டு, உங்கூட அதிகமா வெளியில சுத்தணும்!"

"..........?!"

"என்ன மிதுனா... என்னையே பார்த்துட்டிருக்கே? என் மாமனாரும், மாமியாரும் எப்படியிருக்காங்க?"

"அவங்களைப் பத்தி பேசத்தான் உங்களை இங்கே வரச் சொன்னேன்!"

"என்ன... உங்கப்பா... கல்யாணத்துக்கு கூட திகில்லை தான் வருவேன்னு அடம்பிடிக்கிறாங்களா?" தூண்டினாப் போல் கேட்டான்.

'மதுரை... பூ வைக்கவோ... வருவேன்னு தான் அடம்பிடிக்கிறாங்க!' நினைத்துக் கொண்டவளின் கண்கள் பனித்தன. நிலைத்தாள்.

"நேரம்... மிதுனா... மிதுனா இங்கேப்பார். நான் சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன். அதுக்கு போய்..."

"நான் சீரியஸாப் பேசப் போறேன் அரவிந்த்!" குரல் தழுதழுத்து.

"மி...து...னா!"

"நான் உங்கக்கிட்டே சில விஷயங்களை மறைச்சிட்டேன்."

"..........?!"

"நீங்க என்கிட்டே எதிர்பார்த்தது ஒரே ஒரு தகுதியை தான். ஆனா, நான்... நான் அதை இழந்துட்டேன் அரவிந்த்!"

"சத்தியமாப் புரியலே... விவரமாச் சொல்லு!"

சொல்லவே நாக்கூசிய விஷயங்களை ஒவ்வொன்றாய் சொல்லி முடித்தாள்.

அரவிந்தனின் முகம் இருண்டுப் போனது. தலைக் கவிழ்ந்து மௌனமாய் இருந்தான்.

அந்த மௌனமே அவளை சம்மட்டியாய் தாக்கியது. அதை கலைப்பதற்கு கூட தனக்கு தகுதியில்லாததுப் போல் கலவரக்கம் ஏற்பட்டது.

அந்த கணங்கள் பல்லாயிரக்கணக்கான கணிகள் மீது அமர்ந்திருப்பதைப் போன்ற உணர்வு.

பாவம் அரவிந்தன்!

அவனும் இப்படியோர் அதிர்ச்சியை எதிர்பார்க்கவில்லை. எந்த வகையிலும் அவன் தன்னால் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்கிற

ஜாக்கிரதை உணர்வுடன், இயல்பான ஆசைகளை அடக்கி, பேச்சுக்கு தடா போட்டு காதலை வளர்த்தான்.

தன் வீட்டில் காதலுக்கு சம்மதம் வாங்கி விட முடியும் என்ற சூழ்நிலை அறிந்த பிறகே ஆசையாய் பேச ஆரம்பித்தான்.

அவனின் பெற்றோர் நல்ல மனிதர்கள். நல்ல நடத்தைக் கொண்டவர்கள். தன் மருமகளாய் வரப்போகிறவளின் குடும்பம் ஒழுக்கமாய், கவுரவமாய் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மிக மிக நியாயமானது தானே? வேறெதையும் எதிர்பார்க்கவில்லையே!

ஆனால், அவன் மனதைக் கொள்ளை கொண்டவளின் குடும்பம் முற்றிலும் அவர்கள் எதிர்பார்ப்பிற்கு மாறாக அல்லவா இருக்கிறது! எந்த வகையிலும் அவர்களை சமாதானப்படுத்த முடியாதே! அதே சமயம், மிதுனாவிற்காக எந்த வகையிலும் அர்விந்தால் பெற்றோரை எதிர்க்கவும் முடியாதே!

கனத்த இதயத்துடன் அவளை ஏறிட்டான்.

அந்த முகத்தில் தெரிந்த வேதனையைக் கண்டு துடித்துப் போய் விட்டாள் மிதுனா. அதுதானே காதல் நெஞ்சத்தின் அடையாளம்.

அவனை பெரும் இக்கட்டில் மாட்டி விட்டிருக்கிறோம் என்பதே சங்கடமாக இருக்க, அவளே அந்த சங்கடத்திலிருந்து விட்டாள்.




"அர்விந்த்!"

"..........?!"

"எ... எனக்கு உங்க சிச்சுவேஷனை புரிஞ்சுக்க முடியுது அர்விந்த்!"

"மிதுனா!"

"பெத்தவங்க ஆசீர்வாதத்தோட நம்ம கல்யாணம் நடக்கணும்னு ஆசைப்பட்டேன். ஆனா, மாப்பிள்ளைக் கேட்டு உங்க வீட்டு படிய மிதிக்கிற தகுதியை என்னைப் பெத்தவங்க இழந்துட்டாங்க."

"..........?!"

"நீங்க இதையெல்லாம் முன்னாடியே சொன்னது தானே? நான் உங்களை எந்த சூழ்நிலையிலேயும் தப்பா நினைக்க மாட்டேன் அர்விந்த்!"

"............!!"

"கண்ணியம் மிகுந்த குடும்பத்துல வெறும் காதலோட காலடி எடுத்து வைக்க முடியுமா? பிறந்த வீட்டு சீதனமா கவுரவத்தையும் கொண்டு வரணும் இல்லையா?"

"ஏன்... ஏன் மிதுனா உன் பேரன்ட்ஸ் இப்படி நடந்துகிட்டாங்க. ரொம்ப ஆசையா காத்திருந்தேன். என் வீட்ல உன்னைப் பத்தி பேசணும்னு நினைச்சிருந்தேன். எல்லாத்துலேயும் மண் விழுந்து விட்டது. உன்னை ரொம்ப ரொம்ப நேசிக்கிறேன் மிதுனா. நீ ரொம்ப நல்ல பெண். எனக்கு ஏற்ற பெண். இந்த தோல்வியை எப்படி தாங்கிக்கப் போறேன்னு எனக்கே புரியல."

"அ..ர்..வி..ந்..த்!"

"அதே சமயம்... எனக்கு உயிர் கொடுத்து, இன்னார் மகன்னு பெருமையா நடமாட விட்ட பெத்தவங்களை எதிர்த்து என்னால உன்னை ஏத்துக்க முடியாது மிதுனா. ஸாரி டியர்! அவங்க மனசை கொல்ற சக்தி எனக்கில்லே மிதுனா... புரிஞ்சுக்க ப்ளீஸ்!"

அவன் குரலில் தெரிந்த உருக்கமும், நடுக்கமும் மிதுனாவை கலங்க வைத்தது.

"எனக்குப் புரியுது அர்விந்த். நான் பேராசைக்காரியல்ல. இப்பவும் கூட நீங்க என்னை ஏமாத்தி நினைக்க இந்த முடிவெடுக்கலே. உங்க குடும்பத்து பண்பாடும், கட்டுப்பாடும் தானே உங்களை காதலிக்க வச்சது? அதை நானே கெடுப்பேனா? நமக்குள்ள எப்பவும் பிரண்ட்ஷிப் தான் இருந்தது. ஒரு நாசூக்கான காதல்தான் அதை வரிசை கட்டி இருந்துச்சு. அதை... அதை மட்டும் தானே இப்ப நாம அறுத்தெறியப் போறோம்? நாம அதிகமா மத்த காதலர்கள் மாதிரி மணிக்கணக்கா போனில பேசிகிட்டதில்லை. வெளியே சுத்தினதில்லை. ஒரே ஒரு முறை ரெண்டு பேரும் போனோம். அடுத்து இதோ, இப்ப வந்திருக்கிறோம். அவ்வளவுதானே அர்விந்த்? நாம ஜாக்கிரதையாப் பழகினதால இந்தப் பிரிவு நம்மளை அ... அதிகமா காயப்படுத்தாது இல்லையா?"

"..........?!"

மனம் ஏமாற்றத்தில் தவித்தது. வலித்தது.

"நாம... எப்பவும் நண்பர்கள் தான்!" என்று மிதுனா சிரித்தபடி கை நீட்ட... முதன் முறையாய் அவள் கரம் பற்றி குலுக்கினான் அர்விந்தன்.

கதகதப்பும், மெல்லிய நடுக்கமுமாய் பிரிய மனமின்றித் துடிக்கிறதோ அவன் கரத்தின் நரம்புகள்?

சுற்றித் திரிய வேண்டாம். மணிக்கணக்கில் பேச வேண்டாம். தேவையற்ற உரிமைகளும் எடுக்க வேண்டாம். ஆனால் எவ்வளவு ஜாக்கிரதையாய் இருந்தென்ன. இதயங்கள் உறவு கொள்வதை யாரால் தடுக்க முடியும்? தானே காதலை யாரு வைக்கிறது. உதடுகள் பேசிப் பிரிந்து விட்டாலும்... இதயத்தின் வலி தீர்ந்து விடுமா?

இந்த உலகத்தை வாழவைத்துக் கொண்டிருப்பதே... இப்படிப்பட்ட தீவிரமான காதல்களால் தானே?

இருவரும் வெட்டி எறிந்தது... காதலை அல்ல... அவர்களை தான்!

* * *

மிதுனாவிற்கு தன் வீட்டில் இருக்கப் பிடிக்கவில்லை. ஏதோ நிர்பந்தமாய் அங்கேயே தங்கிவிட்டாள். அம்மாவும் அவளும் சேர்ந்தே அதுவரை வெளியே சென்றார்கள். சாப்பிட்டு வேலை முடிந்து வந்ததும்... அவளுடன் ஜாலியாய் அரட்டை அடித்தாள். அக்கம் பக்கத்தில் சாதாரணமாய் எல்லாம் நடைபெற்றது.

அவசியமற்ற அம்மாவின் இரண்டாம் வாழ்க்கையை மிதுனாவால் ஜீரணிக்க முடியவில்லை. தனக்கென்று ஒரு இடம் தேடினாள்.

கடைசியில், கல்லூரித் தோழி வந்தனா மூலமாக ஒரு அருமையான இருப்பிடம் கிடைத்தது.

ஆர்.ஏ.புரத்தில் பேயிங் கெஸ்ட் ஹாஸ்டல் நடத்தி வரும் காந்திமதி என்ற பெண்மணியை அறிமுகப்படுத்தினாள் வந்தனா.

நாற்பதைத் தாண்டிய பெண்மணி காந்திமதி... எப்போதும் முகத்தில் புன்னகையை உற்பத்தி செய்துக் கொண்டிருந்தார். களையான முகம். வசதிக்கும் குறைச்சல் இல்லை. அவர் கணவர் அப்போலோவில் பெரிய சர்ஜன். பாரம்பரைச் சொத்து. பெரிய வீடு.

மேல்தளத்தில் காந்திமதி குடும்பத்துடன் வசித்து வந்தார். கீழ்தளத்தில் பத்து அறைகளாகப் பிரித்து, அட்டாச்டு பாத்ரூம், கிச்சன், ஹால், பால்கனி, பாத்திர பண்டங்கள், டி.வி., ஃப்ரிட்ஜ் என்று குடும்பம் நடத்தத் தேவையான அத்தனை வசதிகளுடன் பத்து போர்ஷனைக் கட்டி, பணிபுரியும் பெண்கள், படிக்கும் பெண்களுக்கு வாடகை விட்டிருந்தார். ஒவ்வொரு போர்ஷனிலும் மூன்று கட்டில்கள். ஒரு போர்ஷனில் மூன்று பெண்கள் தங்கலாம். அவர்களாக சமைத்து சாப்பிட்டாலும் சரி, அல்லது சமையல்காரி தேவை என்றாலும் காந்திமதி ஏற்பாடு பண்ணித் தருவார். நிறைய துணிகளை துவைத்து அயர்ன் பண்ணித் தருவதற்கென்று ஒரு பெண்மணியை அமர்த்தியிருந்தார். அதற்கு ஒவ்வொரு பெண்ணும் மாதம் ஒரு சம்பளத்தை அந்தப் பெண்மணிக்கு கொடுத்து விட வேண்டும்.

பேயிங் கெஸ்ட் ஹாஸ்டலில் தங்க மாத வாடகை நான்காயிரம். அட்வான்ஸ் நாற்பதாயிரம்.

மிதுனாவிற்கு ரொம்பவே பிடித்துப் போக... உடனடியாக அட்வான்ஸ் கொடுத்து விட்டாள்.

மிதுனா தன் துணிமணிகளுடன் வெளியேற... சாருமதி பதறி விட்டாள்.

"மிதுனா... எங்கேப் போறே?"

"ஹாஸ்டல்ல தங்கப் போறேன்!"

"வாட்? ஹாஸ்டலா? ஏன், உனக்கென்ன தலை எழுத்து? கூடவ் மாதிரி நம்ம வீடு இருக்கிறப்ப..."

"ப்ளீஸ் மம்மி!" கையமர்த்தினாள்.

"அப்பட்டமா காரணங்கள் இருக்கு என்னைப் பேச வச்சிடாதீங்க. எனக்கு இங்கே இருக்கப் பிடிக்கலே..."

"ஓ!" புரிந்தவளாய் தலையாட்டினாள்.

"லேசா... எனக்குன்னு ஒரு வாழ்க்கை அமையறது உனக்குப் பிடிக்கலே... அப்படித் தானே?"

"உன் விஷயத்தில... உன் சுதந்திரத்தில தலையிட நான் யார்? எனக்கும் சுதந்திரம் இருக்குதானே மம்மி ப்ளீஸ்... தலையிடாதீங்க. நான் நிம்மதியா இருக்கணும்னு நினைக்கிறேன்... விடுங்க. நான் போறேன்!"

"நீ வீட்டை விட்டுப் போனா மத்தவங்க என்ன நினைப்பாங்க?"

"அவர் யார் எனக்கு? அவர் என்ன நினைச்சா எனக்கு என்ன வந்தது? அவரோட வருத்தமோ, சந்தோஷமோ என்னை பாதிக்காது. பை மம்மி!"

சொன்னவள், முன்னமே போன் பண்ணி வர வைத்திருந்த கால் டாக்ஸியில் பெட்டிகளை வைத்து புறப்பட்டாள்.

"மிதுனா... மிதுனா!"

அவளோ திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

* * *

# தோல் வியாதிகளுக்கு வேப்பிலை

வேப்பிலையின் சிறப்பு அனைவரும் அறிந்ததுதான். வாரம் ஒருநாள் வேப்பிலை கொழுந்தை வெறும் வயிற்றில் மென்று தின்றால் உடலில் உள்ள பூச்சிகள் அழியும் என்பதுடன் தோல் நோய் எட்டிப் பார்க்காது உடலும் [illegible] அடையும்.






உங்களுக்கு!" இறைஞ்சி போனாள்.

"நானும் எல்லாமே நீ இதுக்கு முன்னாடி ஒரு பண்ணின ஆபீஸ், அங்கே உனக்கொரு காதல், உன் பேரண்ட்ஸ் விசு புது காதல்கள், அது பிடிக்காம அவங்களை விட்டு வந்தது... உன் காதலை விட்டுக் கொடுத்தது... எட்டெட்டா... எட்டெட்டா...!"

"எவனோ...!"

"பயப்படாதே மிதுனா... உன்னைப் பற்றிய விவரங்கள் வெளியில் போகாது. உன் நம்பிக்கை இங்கே எந்த பங்கமும் வராது. உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. பூர்ணாப் போல நீயும் எனக்கு பொண்ணு தான்... சரியா?" அவள் தலையை கோதி விட்டாள்.

அந்த ஸ்பரிசத்தில் மனம் லேசானதை உணர்ந்தாள்.

"தாங்க்ஸ் மேடம்!"

"நோ அட்வைஸ் பண்ணாதே மம்மி... மிதுனா... இவா அம்மா நம்ம டிராமா ஸீரோஸ்... ஓகே! போய் அடிச்சா போலே வந்துடு... நான் கம்பேனி தர்றேன்."

"ஓகே பூர்ணா!" புன்னகைத்தாள் சந்தோஷமும் முகமும்.

"நான் எம்.பி.ஏ. முடிச்சிட்டு டைடல் பார்க்ல ஒர்க் பண்றேன்."

"நான்..."

"தெரியும்... தெரியும் முதல்ல சாப்பிடு... மம்மி உன்னையெல்லாம் நல்லா சமைப்பாங்க. எனக்கும் டாடிக்கும் தான்வேற தான் பிடிக்கும் மம்மி அதுல எக்ஸ்பர்ட்!"

நிஜம் தான்! அவள் பரிமாறிய உணவு வகைகளில் அறுசுவையுடன், அன்பும் கலந்திருந்ததால் ருசி அபாரமாய் இருந்தது.

"சூப்பர் மேடம்!"

"தாங்க்ஸ் மிதுனா... நல்லா சாப்பிடு!"

"சார் இல்லீங்களா?"

"டாக்டர் கான்பரன்சுக்காக டெல்லி போயிருக்கார்!"

"ஓ!"

"மிதுனா... உனக்கொரு விஷயம் தெரியுமா? மம்மியும் பாதி டாக்டர் தான்."

"பாதி டாக்டரா? வாட் டு யூ மீன்?"

"மம்மியும் டாக்டருக்கு படிச்சிட்டிருந்தாங்க. படிச்சிட்டு இருக்கும் போதே கல்யாணம் பண்ணி வச்சிட்டாங்க. அதனால படிப்பை பாதியிலே நிறுத்திட்டாங்க."

"ஏன் மேடம்... சாரும்..."

"நீ என்ன சொல்ல வர்றேன்னு புரியுது. என் ஹஸ்பண்ட் புகழ்பெற்ற பண்ணதால நான் டிஸ்கன்டினியூ பண்ணிட்டேன்னு நினைக்க றே. அப்படித்தானே?"

"..........?!"

"நோ ஆர் ராங் மிதுனா நான் இந்த முடிவு எடுத்திலே. ரொம்ப அர்ஜெண்ட் ஆனதுலே என் ஹஸ்பண்ட் தான் பூர்ணா என் வயித்துல வளர ஆரம்பிச்சதும் படிப்பை விட்டேன். அவளை நல்லா வளர்த்து ஆளாக்கணும்... அதுக்கு நான் ஹோம் மேக்கரா இருந்தாதான் சாத்தியம் தான் இல்லேன்னாலும்... என் இடத்துல எத்தனையோ டாக்டர்ஸ் இருக்காங்க முழு அன்பும் நேரத்தை அர்ப்பணிக்கிற அற்புதமான தொழில் தான். ஆனா, என் குழந்தையைப் பார்த்துக்கற அற்புதமான தாயா என்னால மட்டும் தானே இருக்க முடியும்? பெண் குழந்தை! மிஞ்சிப் போனா, இருபது, இருபத்திரண்டு வருஷத்துலே எங்கேயோ இருக்க முடியும்? அதுக்கப்புறம் புகுந்த வீடுதான் நிரந்தரம். அதனால அவளோட இருக்கப் போற இருபத்திரண்டு வருஷங்களை நான் மிஸ் பண்ண விரும்பலே அதனால தான் டிஸ்கன்டினியூ பண்ணிட்டேன்!"

"மே...டா...ம்!" பிரமிப்புடன் பார்த்தாள் மிதுனா.

நடமாடும் தெய்வமாகவே தெரிந்த அந்த தாயை வணங்க வேண்டும் போல் இருந்தது.

* * *

காலதியினிக்கும், பூர்ணாவிற்கும் மிதுனாவை மிகவும் பிடித்துப்போனது. மிதுனாவும் அவர்களை விரும்பினாள். அர்விந்தனை மறக்க முடியவில்லை என்றாலும் கொஞ்சம் ஆறுதலாய் உணர்ந்தாள். அலுவலகம் முடிந்து வந்த பின் கெஸ்ட் ஹவுஸிலேயே இருந்தாள். வெளியில் செல்ல பூர்ணாவே அழைத்தால் கூட மறுத்தாள். யார் கண்ணிலும் பட்டுவிடக் கூடாது என்று தீர்க்கமாக இருந்தாள்.

அவள் இங்கு வந்து ஆறுமாதமாகி விட்டது. அவள் பெற்றோர் நிச்சயம் அவளைத் தேடி இருப்பார்கள் என்றாலும் அவர்களை தொடர்பு கொள்ள விரும்பவில்லை. அதே போல் அர்விந்தையும் தொடர்பு கொள்ள வில்லை.

இந்நேரம் அவள் தங்கைக்கும் திருமணம் முடிந்திருக்கும். அவனுக்கும் கூட?

நினைக்கும் போதே... இதய நரம்புகளை கூர் வாளால் வெட்டியெறிவதுப் போல் வலித்தது.



'அர்விந்த்! இது வெறும் கற்பனை அப்படிதான் காதல் நினைவும் போல் இருப்போமுக் கொண்டிருக்கிறது மறப்பது என்று என்றேன். ஆனால், இது நினைவு அல்ல. இருப்புக் கப்பலாய் நெஞ்சைக் கப்பட்டது. உங்களை மறப்பதென்பது நான் சாகும் வரை நடக்காது. இன்னொரு வாழ்க்கை என்பது என்னால் இயலவே இயலாத காரியம். உங்கள் நினைவுகள் தரும் வேதனைகள் கூட சுகமாக தான் இருக்கிறது. இது போதும் எனக்கு.'

## 15

நிஷாவின் திருமணம் முடிந்து கணவன் வீட்டிற்குப் போய் விட்டாள். கலகலப்பாய் வளைய வந்த மகள் இல்லாமல் வீடு வெறிச்சோடிப் போயிருந்தது.

பகல் நேரமிந்தி... தோட்டத்துப் பூக்கள் வாடிப் போயிருந்தன.

ஊஞ்சலில் அமர்ந்து அப்படி யோசனையில் இருந்தாள் ராஜாமணி.

காபியை கொண்டு வந்த தந்த போரை வாங்கிக் குடித்தவர், "ப்ச்... நிஷாவிக்கு கல்யாணமாகி மாமியார் வீட்டுக்கு போய் மூணு மாசமாயாச்சு. ஆனா, நம்ம வீடு இன்னமும் களை திரும்பாத மாதிரியே பார்த்தியா கலகலப்புடிபாடி இருந்திருக்கு... இப்ப வீடே காலியான மாதிரி இருக்கு!"

"ஆமாங்க. அவளைப் பார்க்கணும் போலிருக்கு. கண்ணிலேயே நிக்கறா. ஒரு நடை போய் பார்த்துட்டு வரலாமா?"

"சேச்சே... அதெல்லாம் நல்லாயிருக்காது. போன வாரம்தானே பார்த்துட்டு வந்தோம்! பொண்ணைக் குடுத்த வீட்ல அடிக்கடிப் போய் கை நனைச்சிட்டு வாறது அழகில்ல என்பாங்க... நம்மை நாமே சமாதானம் பண்ணிக்கணும்!"

"..........?!"

"எங்கே அர்விந்தன்? ஆபீஸ்க்கு நேரமாகலே?"

"ரெடியாகிட்டிருக்கான்!"

"டிபன் சாப்பிட்டானா?"

"வேண்டாங்கறான். நைட்டுக் கூட ஒரு டம்ளர் பால் குடிச்சிட்டு படுத்துட்டான். சாப்பாடு சாப்பிடலே!"

"நானும் கவனிச்சிட்டு தான் வர்றேன். இந்தப் பய சரியில்லையே. டல்லாயிட்டான்.

முகத்துல களையே இல்லே. என்னாச்சு அவனுக்கு?"

"எனக்கும் ஒண்ணும் புரியலைங்க!"

"கவலையே நமக்கு ஓரிவகம் பண்ணிக் கிட்டு போயிருக்கார் தானே, அந்தவையும் கட்டு மாதிரி நல்ல சம்பந்தம். சீக்கிரம் பார்த்து முடிச்சு பண்ணிட்டா... நிம்மதியா உக்காந்துடுவேன். கேட்டுச் சொல்லு!"

"ஏங்க... நான் சொன்னேனே... காந்தி மதியோட பொண்ணு... பேரு பூர்ணா... அவளை நம்ம அர்விந்துக்கு..."

"இதோ பார் கமலு! எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லே. அர்விந்துக்கு யாரைப் பிடிக்குதோ அதுதான் இந்த வீட்டு மருமகள். பாரம்பரியமான குடும்பத்து பொண்ணா இருக்கணும். அதுமட்டும் தான் கண்டிஷன். அவன் சரின்னு சொன்னா பூர்ணாவையே முடிச்சிடு..."

"வர்றான்... வர்றான்!"

அவசர மாய், விரிந்த தோள்களும் தோற்றம் மாறி, அவன் கம்பீரத்தை குறைத்திருந்தது. மூன்று நாட்களாய் ஷேவ் செய்யப்படாத முகம், பார்வை ஓட்டத்தில் நிலைத்திருக்க... கவனம் எங்கோ சிதறியிருந்தது.

"அர்விந்தா... அர்விந்தா..."

"..........?!"

"உன்னைத்தான் அர்விந்து!"

"அர்விந்த்...அப்பா கூப்பிடறார் பார்!" கமலா அவன் கையைப் பற்றி அசைத்தாள்.

"என்னம்மா... என்னாங்க?"

"அதை நாங்க கேக்கணும் உன்னை... என்னாச்சு உனக்கு?"

"ஒண்ணா... எனக்கு ஒண்ணும் ஆகலையேப்பா...!"

அவன் பேசுவது கூட முனகுவதுப் போலிருந்தது.

"இப்படி உட்கார்!"

"ஆபீஸ்க்கு... டைமாகுதேப்பா!"

"சாப்பிட்டியா?"

"பசிக்கலேப்பா... ஆபீஸ்ல சாப்பிட்டுக் கறேன்."

"உடம்புக்கு முடியலையா அர்விந்தா...!"

"எனக்கென்னப்பா... நல்லாதானே இருக்கேன்?"

"கண்ணாடியில் போய் பார் தேவதாஸ் மாதிரி தளர்ந்து போய்... சக்கரையை பண்றதெல்லாம் விட்டாங்க கண்ணுக்கு கீழே கருப்படிச்சுப் போய்... சரியா தூங்கறதில

வேண்டாத் தெரியுது. கவலையா இருக்கு அர்விந்தா... சாயந்திரம் டாக்டர்கிட்டப் போவமா?"

"நீங்க நினைக்கற மாதிரி எனக்கொண்ணும் இல்லேப்பா. ஆபீஸ் டென்ஷன் கொஞ்சம் சேரல்... எடுத்தா சரியாயிடும். நான் வரேன்பா... அம்மா வரேன்!"

"எதிலேப் போறே வாசா, பைக்கா?"

"கார் தான்!"

"கையிலே பைக் சாவியிலே இருக்கு?"

"ஓ... ஸாரி!"

அதை வைத்து விட்டு கார் சாவியை எடுத்துக் கொண்டு விரைந்து வெளியேறினான்.

"சரியில்லையே... ஏதுமோ பறிகொடுத்தவன் மாதிரியில்லே இருக்கிறான்?" கவலையாய் மோவாயைத் தேய்த்தார் ராஜாராமன்.

"அந்தாறு மாசமா அவன் யாரிட்டேயும் சரியாப் பேசறதுக் கூட இல்லீங்க!"

"பய யாரையாவது லவ் பண்றானா?"

"சேச்சே... நம்ம அர்விந்தைப் போய்..."

"ஏன் நம்ம அர்விந்து லவ் பண்ணக்கூடாதுன்னு... காதலே வராதுன்னு முடிவு பண்ணிட்டியா? எப்பேர்ப்பட்ட பயலும் அடக்கமாதான் இருப்பாங்க... தன் மனசுக்கு பிடிச்ச பொண்ணை பார்த்திருந்தா, என்ன ஏதுன்னு விசாரி. எல்லாம் சரியாயிருந்தா... அவன் விருப்பப்படியே நடத்திடலாம்."

"சரிங்க!" என்றவளுக்கு மிதுனா தான் கண்களுக்குள் வந்துப் போனாள்.

'தனியே போய் நிச்சயதார்த்தத்துக்கு புரிப்போடு அழைச்சிட்டு வந்து அதிர்ச்சிப்படுத்தினானே. என் கல்யாணத்துக்கும் அழைச்சிட்டு வாரேனா ஒரு வேளை... அந்தப் பொண்ணைதான்....!' சந்தேகம் ஓடத்து.

* * *

வீசரை வெகுவாகவே ஓட்டிச் சென்று அர்விந்தன் செல்போனை எடுத்து அலுவலகத்திற்கு நம்பர் போட்டான்.

"ஹலோ..."

"........!"

"இன்னைக்கு நான் வரமாட்டேன்"

"........!"

"பர்சனல்"

"........!"

"இல்லே சார் வரமுடியாது. லீவு தரலேன்னா ரெசிக்னேஷன் லெட்டர் தந்திடறேன்."

"........!"

"ஓகே... தாங்க்ஸ்"

அர்விந்தன் செல்போனை அணைத்துவிட்டு... சிக்னலில் பேரிடி காத்திருந்த பெண்களை அவசரமாய் நோட்டமிட்டான்.

'மிதுனா... எங்கிருக்கே மிதுனா? எல்லா இடத்திலேயும் விசாரிச்சுப் பார்த்துட்டேன். நீ எங்கிருக்கேன்னே தெரியலை. பெத்தவங்களை தேடி செய்து நாம பிறக்க முடியாது. ஆனா, மனசுக்கு பிடிச்ச காதலனை, கணவனை தேடி செய்து வாழலாம். என்னை நம்பி காதலிச்சே. உன் நம்பிக்கையை காப்பாத்த முடியாமப் போயிட்டதுக்காக வெட்கப்படறேன் மிதுனா. உன்னை மறந்துட்டு இன்னொரு பொண்ணோடு என் வாழ்க்கை என்பதை நினைக்கவே அதிர்ச்சியாயிருக்குடா! எல்லோரும் நமக்குள் இடை வெளியை ஏற்படுத்திகிட்டாலும் உன்னை நான் ரொம்ப ரொம்ப நேசிக்கிறேன் மிதுனா. இப்ப எங்கிருக்கே? என் முகத்தில் விழிக்க சங்கடப்பட்டு தானே எங்கேயோ போயிட்டே. நான் உன்னைப் பார்க்கணும் மிதுனா. உன்கிட்டே மன்னிப்புக் கேட்கணும். என்னை பெத்தவங்க பேச்சை மீறவும் முடியாது. உன்னைத் தவிர வேறொரு பொண்ணை ஏத்துக்கவும் முடியாது. உன் மீதான காதல் அப்படியே இருக்கிறது மிதுனா. அதை பொத்தி பாதுகாக்கிறது என்னோட கடமை! நீ எங்கேயிருக்கே? அட்லீஸ்ட் இந்த போனிலாவது உன் குரல் கேட்காதான்னு தவிச்சு போயிருக்கேன் மிதுனா!'

தாறுமாறாய் யோசித்தபடியே அந்த சாலைக்கு நிறுவனத்தின் முன் காரை நிறுத்தினான்.

மிதுனா இதுமாதிரியான ஏதாவதொரு நிறுவனத்தில் தான் பணிபுரிய வேண்டும். அதனாலேயே அடிக்கடி விசிட் போட்டு விட்டு

## இளநரை மறைய

இளநரையா? செம்பருத்தி இலைகளை பசும்பால் விட்டு நைசாக அரைத்து தலையில் மயிர்க்கால்களில் நன்கு படும்படி தேய்த்துக் கொண்டு குளித்தால் இளநரை மறையும். முடி உதிர்வது நிற்கும் என்பதுடன் முடி மிருதுவாகவும் இருக்கும். கண்களுக்கும் குளிர்ச்சி தரும்.



ஒவ்வொரு ஆபீஸாய் ஏறிஇறங்கித் தேடினான். எப்போதுமே காத்திருக்கும் ஏமாற்றம் அன்றும் அவனுக்காக காத்திருந்தது.

மிதுனா முதலில் பணிபுரிந்த ஸ்ரீபெரும்புதூரில் பணிபுரிவது... பாவம் அவனுக்குத் தெரியாதே!

* * *

அர்விந்தனின் எதிரே அமர்ந்திருந்தாள் கவிதா. அவள் காபியை குடித்து... டம்ளரை டீபாய் மீது வைத்தாள்.

"சொல்லுங்கம்மா... என்னவோ பேசணும்னு சொன்னீங்களே!"

"என் ப்ரெண்ட் காந்திமதியைத் தெரியுமில்லையா?"

"தெரியாதே!"

"என்னப்பா தெரியாதுன்னு சொல்றே? அர்ப்புறத்தில இருக்காளே..."

"சரி... இருந்துட்டுப் போகட்டும்... நேரடியா விஷயத்துக்கு வாம்மா!"

"அவளோட பொண்ணு பூர்ணா... எம்பிஏ படிச்சிருக்கா. வேலைக்குப் போறா. அழகான பொண்ணு! இதோ அவளோட போட்டோ!"

"ஏம்மா... அவளுக்கு அலையன்ஸ் பார்த்துட்டிருக்கியா? என் ஆபிஸ் ஆட்டயில பர்சன் யாராவது இருந்தா சொல்லணுமா?"



"சீச்சீ... ஏன் அவசரப்படறே? அவளை உனக்கு பேசலாம்னு தான்..."

போட்டோவை பார்த்துவிட்டு அவனிடமே திருப்பிக் கொடுத்தான்.

"வேணாம்மா... பிடிக்கலே!"

மகனை ஆழமாய் நோக்கினாள். கவலை கொடுத்ததுப்போல நான்கைந்து போட்டோக்களை நீட்டினாள்.

"சரி... இதைப் பாரு. உனக்காக பார்த்து செலக்ட் பண்ணி வச்சிருக்காரு. இதிலே ஒரு பொண்ணை செலக்ட் பண்ணு!"

எரிச்சலை மறைத்து, அவற்றை வாங்கி பொறுமையாய் பார்த்துவிட்டு கொடுத்தான்.

"யாரையும் பிடிக்கலேம்மா!"

"அப்ப யாரைத்தான் பிடிக்கும் உனக்கு?"

"இதென்னம்மா கேள்வி?"

"மனசை அரிக்கப்படுத்திற கேள்வி அர்விந்த் யாரைதான் பிடிக்கும் உனக்கு? அந்த மிதுனாவையா?"

"அ...ம்...மா!" அலறாத குறையாய் அதிர்ந்தான்.




தீபாவளிக்கு இன்னும் பத்து நாட்களே இருந்தன. ஆனாலும் சென்னை இப்போதே களைகட்டத் துவங்கி விட்டது. ஆங்காங்கே வெடிச்சத்தங்கள் கேட்க ஆரம்பித்து விட்டன.

மிதுனா, காந்திமதி வீட்டின் மொட்டை மாடியில் இரவு நேர சென்னையை பார்த்துக் கொண்டிருந்தாள். சேலம் கொண்டையைப் போல சிவப்பு நிற விளக்குகளை சுமந்து சென்ற வாகனங்கள் நிமிடத்திற்கு நூறாவது அலைகளைக் கடந்தன.

இப்போதெல்லாம் கார் வைத்திருப்பவரின் எண்ணிக்கையும் அதிகமாகி விட்டது. வேலை வாய்ப்புகளும் வருமானமும் கூட அதிகமாகி விட்டன. ஆனால், அன்புதான் குறைந்து விட்டன. மேக்கப் போட்டுக் கொண்டு பாச வேஷங்களை பேசும் ரத்தபந்தங்களும் அதிகமாகி விட்டனர். தோழி மிகுந்து குற்றம் புடமாகிறது.'

'என் அம்மாவைப் போல... அப்பாவைப் போல அவர்களால் தானே என் அர்விந்தன் எனக்கு கிடைக்காமல் போனார்!'

'சென்ற வருட தீபாவளியின் போது... அவர்களுடன் பட்டாசுகளை வெடித்து

மகிழ்ந்தேன். ஆனால், இன்று என் மனதை கட்டுப் போடச் சொல்லி விட்டார்கள். என்னை நினைத்துப் பார்க்காமல் சுயநலமாய் முடிவெடுத்தவர்களைப் பற்றி இனி நானும் நினைத்துப் பார்க்க கூடாது. என்னைப் பெற்றவர்கள் இறந்து விட்டார்கள். அவ்வளவுதான்!" கன்னத்தில் வழிந்த கண்ணீரை சுண்டி எறிந்தாள்.

அவள் தோளில் மென்மையான கரம் ஒன்று மெதுவே அழுத்த...

திடுக்கிட்டு திரும்பினாள்.

கார்த்திகா!

"மேடம்... ஸாரி மேடம், உங்க பர்மிஷன் இல்லாம இங்கே வந்துட்டேன்... போன் அடிச்சது... அதனால... இங்கே!"

"நான் உன்னை ஒண்ணும் கேக்கலியே மிதுனா. நான் தான் எந்தவே சொல்லிட்டேனே... நீயும் எனக்கு பொண்ணுதான்.. சரியா?"

"தாங்க்ஸ் மேடம்!"

"ஏம்மா கண்கலங்கியிருக்கு? உங்க [illegible] நினைச்சிட்டியா?"

"......?!"

"அவங்களை பார்க்கணும் போலிருக்கா? போய் பார்த்துட்டு வாயேன்!"

"இல்லை... வேண்டாம் மேடம். சாகற வரைக்கும் அவங்களை பார்க்கவே கூடாதுன்னு முடிவுப் பண்ணியிருக்கேன்."

"ஏதோ கோபத்தில பேசறே... காலம் உன்னை மாத்திடும்."

"......?!"

"அப்புறம்... மிதுனா..."

"சொல்லுங்க மேடம்!"

"போனவாரம் எங்க வீட்டுக்கு வந்திருந்தானே ஆர்யா... என் அண்ணன் பையன்!"

"பூர்ணா சொன்னா... நான் பார்க்கலே!"

"ஆனா ஆர்யா உன்னை பார்த்திருக்கான்."

"அப்படியா?"

"நேரடியாகவே கேட்டுடறேன். ஆர்யாவுக்கு உன்னை ரொம்ப பிடிச்சிருக்காம். கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசைப்படறான். உன்னைப் பத்தி சொன்னேன். இந்த காலத்துல இதெல்லாம் சாதாரண விஷயம். எனக்கு அவனைப் பிடிச்சிருக்கு. கல்யாணத்துக்கு அந்த தகுதி போதும். அவனை கேட்டுச் சொல்லுங்க ஆன்ட்டின்னு பொறுப்பை என்கிட்ட ஒப்படைச்சிட்டான். அவனோட பேரண்ட்ஸ் முற்போக்குவாதிகள். என்னம்மா சொல்றே?"

அவள் இப்படியொரு ஆர்ட்டிகலோடன் மாடிக்கு வருவாள் என்று எதிர்பார்க்கவே இல்லை.

"மேடம்... ஸாரி மேடம். எனக்கு மேரேஜ்லேயே இன்ட்ரஸ்ட் இல்லை."

"இதுக்கு மேலே [illegible] ஆர்யா வேண்டாம் ஓகே.. பட், மேரேஜ் வேண்டாம்னு சொல்றது சரியில்லையே!"

"......?!"

"நீ அந்தப் பையனையே நினைச்சிட்டு இருந்தா... உனக்குன்னு ஒரு வாழ்க்கை வேணாமா?"

"இல்லைங்க மேடம். ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு குணம் கொண்டவங்கதான் நாம். குழந்தைய வளர்த்து ஆளாக்கணும்னு படிப்பை பாதியில விட்ட நல்ல தாய் நீங்க. என்னைப் பத்தி கவலைப்படாம [illegible] தேடிக்கிட்டாங்க என்னைப் பெத்தவங்க. ஜாதகமோ, சீர் எதுவும் வேணாம். கண்ணியமான குடும்பத்துப் பொண்ணுதான் மருமகளா வரணும்னு நினைக்கிற இன்னொரு பேரண்ட்ஸ். அந்த மாதிரி எனக்கும் ஒரு விருப்பம் இருக்கு. என் வாழ்க்கையில் காதலும் சரி, கல்யாணமும் சரி, ஒரு முறைதான் வரணும். அதுவும் ஒருவரோடுதான் வரணும்ங்கறதுல தான் உறுதியா இருக்கிறேன். ப்ளீஸ்..." என்றாள் இரு கைகளையும் கூப்பி.

கார்த்திகா அவள் கைகளை அப்படியே பற்றிக் கொண்டு அவளையே பார்த்தாள்.

நிலவொளியுடன், விளக்கொளியும் சேர்ந்து அவள் முகத்தை பளபளக்க வைத்தது.

"எப்படி சொல்றதுன்னு தெரியலேம்மா. முட்டாள்தனமா முடிவெடுக்கறியேன்னு வருத்தப்படறதா? இல்லே... இந்த சின்ன வயசில் இவ்வளவு தீர்க்கமா யோசிக்கறியேன்னு பிரமிக்கறதா? கடவுள் உனக்கு ஏன் இத்தனை பிரச்சினைகளைத் தரணும்? உன்னை மாதிரி ஒரு பொண்ணு மருமகளா கிடைக்க அவங்களுக்கெல்லாம் கொடுத்து வச்சிருக்கணும். நீ நேசிச்ச அந்த பையனோட விவரங்களைக் குடு! நான் பேசறேன்."

"வேணாம் மேடம். அவர் மேலே எந்த தப்பும் இல்லே. எல்லாம் தெரிஞ்சு நானாகத் தான் விலகி வந்துட்டேன். அவரால அவங்க அம்மா, அப்பா ஏன் வேதனைப்படணும்."

"ச்சே... என்னை வேதனைப்பட வச்சிட்டியே! இந்த கொஞ்ச நாள்லயே உன்மேல எனக்கு பாசம் அதிகமாய்ப்போச்சு. அதனாலதான் உன் விஷயத்துல தலையிடறேன். தப்பா



எடுத்துக்காதே மிதுனா!"

"நீங்கதான் தப்பாய் பேசறீங்க. என் மேல அன்புகாட்ட அக்கறைப்பட நீங்களாவது இருக்கீங்களே... அதுவே போதும் மேடம்!"

இருவரின் [illegible] சில கணங்கள் [illegible] பற்றிக் கொண்டன.

* * *

"எங்கே கூப்பிட்டாலும் வரமாட்டேன்னு இதோ... ஆபீஸ் முடிஞ்சு வந்தா... ரூமே கதின்னு இருக்கிறே. ஒருநாள் என் கூட வா... இல்லேன்னா பேசமாட்டேன்" என்று பூர்ணா அதிரடி பண்ண, அசந்துக் கொடுத்தாள் மிதுனா.

கார்த்திகா இருவரையும் தீபாவளி பர்சேஸ் பண்ண அனுப்பிச் சென்றாள்.

மிதுனாவிற்கு விருப்பமில்லை. யார் கண்ணிலும், முக்கியமாய் அசோக் கண்ணில் பட்டுவிடக் கூடாது என்று பயந்தாள்.

கார்த்திகா [illegible] அந்த ஜவுளிக்கடையில் [illegible] அழைத்தாள் பூர்ணா.

"இதோ பாரு... பட்டுப்புடவை செக்ஷனை போனா... [illegible] நீ போய் செலக்ட் பண்ணிட்டு போன் பண்ணு. நானும், மிதுனாவும் ரெடிமேட் செக்ஷன்ல இருக்கோம்..." என்று அனுப்பிச் சென்றாள்.

மிதுனாவுக்கு எதிலுமே மனம் லயிக்க வில்லை. உறவுகளை எல்லாம் மனது வெறுத்துப் போயிருந்தது. பூர்ணா டிரஸ்களை பார்த்துக் கொண்டிருக்க... மிதுனா... கடைக்கு வந்திருந்த மனிதர்களை பார்த்துக் கொண்டு இருந்த போதுதான்... வெகு அருகில்... பின்னாலிருந்து அந்தக் குரல் கேட்டது.

"ம்... நாட்டி... அந்த வேடிக்கையே முறைச்சுப் பார்த்துட்டிருக்கே... என்னை விடவா அது அழகு?"

மெல்லத் திரும்பிப் பார்த்தவள் தீயை மிதித்தவள் போல் பதறினாள்.

சாரங்கியும், சிவாவும்!

'மைகாட்!'

மிதுனா அருகிலிருந்த தூணின் பின்னே தன்னை மறைத்து நிறுத்திக் கொண்டாள்.

[illegible] கவர்ச்சி மேலோங்க, சிறுப்பெண்ணைப் போல் சிணுங்கிக் கொண்டிருந்தாள் சாரங்கி.

"என் சாரங்கியை விடவும் அழகி வேறு யார் இருக்க முடியும்?" என்றவனின் கண்கள் பெண்கள் மீது அலைபாய்ந்தது.

"ம்... ராஸ்கல்... பேசிக்கிட்டே சைட் அடிக்கிறியா? என் வயித்துல வளர்ற பிள்ளை வெளியே வந்ததும் உன்னை உதைக்கப் போறான்."

"ஏ... என்னது? குழந்தையா, அம்மாவுக்கா இந்த வயதிலா? அதுவும் சிவாவோடா.....?" உடம்பை பற்றி எரிவது போலிருந்தது மிதுனாவுக்கு.

"ப்ளீஸ்... சாரங்கி.. நீ ஏன் பிடிவாதம் பிடிக்கிறே! இப்ப நமக்கு குழந்தை அவசியமா? இந்த வயதில் உனக்கு சிரமம் இல்லையா?" [illegible] அவன் பேச்சு.

"நோ... நோ... மறுபடி மறுபடி இதையே ஏன் [illegible] சொல்றே? எனக்கு உன் குழந்தை வேணும் தட்ஸால்!"

"இல்லை... [illegible] நாம் முறைப்படி கல்யாணம் பண்ணலே."

"என் [illegible] கல்யாணம் பண்ணாமே [illegible] இன்னும் ரெண்டு வருஷத்துல [illegible] கிடைச்சிடும். அப்புறமென்ன? மறுபடி இதைப்பத்தி பேசாதே சிவா, ப்ளீஸ்!" என்றபடி [illegible] நகர... மிதுனா அவன் கண்களில் படாமல் அடுத்த செக்ஷனுக்குள் நுழைந்துக் கொண்டாள்.

மகளை பிரிந்திருக்கும் கவலை துளியும் இல்லை. பருவப்பெண்ணைப் போல் [illegible] சிரித்து...

'அம்மா... உன்னைத் தவிர, வேறு யாரைப் பற்றித் தான் கவலைப்படுவாய்! சிவா கண்டிப்பாய் உன்னை ஏமாற்றுவான். உன் வயிற்றில் பிறந்து நான் அவமானப் படுவது போதாதா? இன்னொரு குழந்தையுமா? உன்னைப்பற்றி நினைப்பதுக் கூட பாவம்!'

## 17

"அத்திப்பூத்தா மாதிரி எப்பவோ ஒரு நாளைக்கு தான் வீட்டுக்கு வர்றே... சாப்பிடாமலே கிளம்பினா என்ன அர்த்தம்?" கார்த்திகா செல்லமாய் கோபித்துக் கொண்டாள்.

"நேரமில்லே கார்த்தி! இப்பக்கூட தலை தீபாவளிக்காக மாப்பிள்ளைக்கு நகை வாங்க கடைக்கு வந்தேன். பக்கத்திலேயே வீடாச்சேன்னு உன்னை பார்க்க வந்தேன். வீட்டு வேலையே சரியா இருக்கு!" என்றாள் கனகம்.

"தனிஷ் நல்லாருக்காளா?"

"ரொம்பவே நல்லாருக்கு."

"அவங்கதான்?"

"அவனை நினைச்சாதான் கவலையாயிருக்கு. பிடி குடுத்து பேச மாட்டேங்கறான். பூர்ணா கொடுக்க அவனுக்கு அதிர்ஷ்டமில்லே"

"விருப்பமில்லா பிள்ளைகளை சேர்த்து வச்சு என்னப் பண்ணப்போறோம்? என்னு நடக்கணுமோ, அதுதான் நடக்கும்... விடு"

"செப்டம்பர்லோ உங்க வீட்டுக்காரர் வந்தா நான் ரொம்ப விசாரிச்சேன்னு சொல்லு. பூர்ணா இன்னும் வரலியா?"

"இன்னும் நேரமாகும்!"

"சரி... வரேன்"

மாடிப்படி இறங்கி வந்தாள் கலை.

அப்போது...

அலுவலகம் முடிந்து வந்திருந்த மீதுனா, தனது தேவியரை வீட்டு இறங்கி செல்ல... வாயிலிருந்தன் நுழைவதை... கலை பார்த்து விட்டாள்.

* * *



அது தீபாவளி!

வேலை தாளும், துளிர்க்கிற சிநேகத்தையும், பட்டாசுக்களையும் வாசமும் பட்டாசு சத்தமும், அதன் புகை சூழ்ந்த வெண்மையும், பண்டிகைக்கே உரிய தனித்துவத்தை அழகாக கொடுத்திருந்தது.

ஒட்டுத்தட்ட ஒரிருவர் தவிர, பேயிங் கெஸ்ட் அறையில் தங்கியிருந்த அனைவரும் குடும்பத்துடன் பண்டிகையைக் கொண்டாட ஊருக்குப் போய்விட்டிருந்தனர். அந்த ஒரிருவர் கூட வேறு மதம் என்பதால் தங்கியிருந்தனர்.

மிதுனாவின் நெஞ்சில் பாரம் ஏறியிருந்தது.

குடும்பம் குடும்பமாக இல்லாமல் போனதால் நான் இன்று தனியாளாகி விட்டேன். எந்த வீட்டுக்குச் சென்று கொண்டாடுவது? இந்தியாவில் குழந்தைகளுக்காகவே சேர்ந்து வாழும் தம்பதிகள்தானே அதிகம்? அப்படி ஏன் அம்மாவும், அப்பாவும் சகித்துக் கொண்டு வாழ்ந்திருக்கக் கூடாது. அன்பிருந்த இல்லாத வலியையா? யாராவது ஒருவர் விட்டுக் கொடுத்தால் கூட போதுமே... எல்லா பிளவுகளும் மறைந்துப் போகாதா?

இந்த தீபாவளி அம்மாவுக்கும், அப்பாவுக்கும் இரண்டாவது தலை தீபாவளி! என்ன ஒரு வித்தியாசம்... வேறு வேறு ஜோடிகளுடன்!

விரக்தியுடன் சிரித்தவள், குளிப்பதற்காக பாத்ரூம் நோக்கி நடந்தாள்.

அவள் குளித்து விட்டு வருவதற்கும், அறைக் கதவு தட்டும் சரியாய் இருந்தது.

திறந்தவள்... சிரித்தாள்.

காந்திமதி ஒரு கவரோடு நின்றிருந்தாள்.

"விஷ் யூ ஹாப்பி தீபாவளி மேடம்!"

"தாங்க்யூ... சேம் டு யூ இந்தா...!"

"என்னது மேடம்?"

"புடவை... கட்டிட்டு வா!"

"புடவையா? எ...எனக்கெதுக்கு... நீங்க... வந்து... ஸாரி.. வேணாமே!"

"லேசில் மிதுனா. நீயும் எனக்கு பொண்ணு மாதிரின்னு சொன்னேனே... சும்மா வாங்கிக்கக்கூடாதா? கட்டிட்டு வேலை வா! செலிப்ரேட் பண்ணலாம்..."

"மேடம்...!" தயங்கினாள்.

"ப்ளீஸ்மா... என்னை இவ்வளவு கெஞ்ச வைக்கணுமா?"

"ஸாரி... ஸாரி மேடம்!"

காந்திமதி சிரித்தபடி போய் விட்டாள்.

புடவையை வெளியே எடுத்தவள் அசந்து போய் விட்டாள்.

பட்டுப்புடவை... தங்க சரிகை பதிக்கப்பட்டு அழகான வேலைப்பாடுடன் அற்புதமாய் இருந்தது.

பல ஆயிரங்கள் மதிப்புடைய புடவை!

'எதற்காக இவ்வளவு காஸ்ட்லியாக?'

அதற்கு மேட்சாக ஜாக்கெட்டும்!

* * *

**தேவதை** போல் வந்து நின்றவளை அணைத்து கன்னத்தில் முத்தமிட்டாள் காந்திமதி.

"வெரி நைஸ் மிதுனா!"

"பாரு மிதுனா... எனக்கும் புடவை கட்டிக்க சொல்லி மம்மி டார்ச்சர் பண்றாங்க!" என்றபடி பூர்ணாவும் பட்டுப்புடவை கட்டிக் கொண்டு வந்து நின்றாள்.

"வாவ்... மிதுனா... ரொம்ப அழகா இருக்கிறே?"

வெட்கத்துடன் சிரித்தாள் மிதுனா.

"பூர்ணா கார் சாவிய எடுடா!"

கொண்டு வந்து தந்தாள்.

"என்னங்க... கரெக்டா அஞ்சரை மணி நேரத்திலே வந்திடறேன்!" என்றாள் காந்திமதி கணவரிடம்.

ஆங்கில தினசரியில் மூழ்கியிருந்த டாக்டர் சொக்கலிங்கம் புன்னகைத்தார்.

"புரியுது... புரியுது... போய்ட்டு வா!"

"வர்றேன் பூர்ணா!"

"சரி மம்மி!"

"வா...மிதுனா!"

"நானா... எங்கே?"

"ஒரு சின்ன பர்சேஸ்! உதவிக்கு கூட வாயேன்!"

"சரிங்க மேடம்!"

காந்திமதி பேச்சுக் கொடுத்துக் கொண்டே... லாவகமாய்... அதே சமயம் சரியான வேகத்தில் காரை செலுத்தினாள்.

சரியாய் இருபது நிமிடத்தில் அந்த வீட்டின் முன் கார் நின்றது.

இறங்கிய மிதுனா மின்சாரம் தொட்டதுபோல் அதிர்ந்தாள். அர்விந்தன் வீடு!

"மே... மேடம் கடைக்கு போகணும்னு..."

"ஆமாம்... போகணும். இது என் பிரெண்ட் வீடு. சும்மா ஒரு விஷ் பண்ணிட்டுப் போகலாம்னு... வா..."

"நீ.. நீங்க போங்க... நான் இங்கேயே வெயிட் பண்றேன்."

"நோ...நோ! வெயிட் பண்றதாவது... ரெண்டே நிமிஷம்தான்... வந்துடலாம்... வா!"



அவள் கையைப் பற்றி... ஒட்டத்தட்ட இழுத்துக் கொண்டு சென்றாள் காந்திமதி.

மிதுனாவுக்கு தலைசுற்றுவது போலிருந்தது.

'ஏய் காட்! என்னப் பண்ணப் போகிறேன்? மேடத்திற்கு இவரை ஏற்கனவே தெரியும் என்று எனக்குத் தெரியாமல் போய் விட்டதே! அர்விந்தன் வீட்டில் இருப்பாரோ? என்னைப் பார்த்து விட்டால் என்ன செய்வேன்? எப்படிப்பட்ட சங்கடத்தில் தள்ளி விட்டாள் மேடம்!' முதன்முறையாய் காந்திமதி மீது எரிச்சல் ஏற்பட்டது.

நிலைக்கதவு பெரிய தோரணங்கள் கட்டியிருக்க, மாவிலையும், தோரணமுமாய் வீடு அமர்க்களத்தை பூசியிருந்தது.

கார் சப்தம் கேட்டு கனகம் வாசலுக்கு விரைந்து வந்தாள்.

இருவரையும் பார்த்து சிரித்தபடி வரவேற்றாள்.

"வா... காந்தி... எவ்வளவு நாளாச்சு எங்க வீட்டுக்கு வந்து! மிதுனா... நீ எப்படியிருக்கே? வா... உள்ளே வாம்மா!"

இவ்வளவாய் வரவேற்ற விதம் குழப்பத்தைத் தந்தது.

'மேடத்துடன் என்னை பார்ப்பது கண்டு வியக்கவே இல்லையே! ஆச்சரியம் கூட இல்லையே! அட்லீஸ்ட்... மிதுனாவை உனக்கு எப்படித் தெரியும் என்று கேட்டிருக்க கூட கேட்கவில்லையே!'

"தனியா எங்கே கனகம்?"

"மாப்பிள்ளைக் கூட கோவிலுக்குப் போயிருக்கா. இதோ பாரு... எங்க வீட்ல இந்த வருஷம் விசேஷமான தீபாவளி! தலை தீபாவளி... மாதிரி இருந்து சாப்பிட்டுட்டுதான் போகணும்!"

"அது சரி... நான் என் தலைப்பிள்ளை பொண்ணுக்கு தீபாவளியை கொண்டாட வேண்டாமா? எனக்காக காத்துக்கிட்டிருக்காங்க."

"ரொம்பதான் பிகு பண்ணிக்கிறே! என்னங்க... யார் வந்திருக்காங்க பாருங்க!"

கனகம் உரத்த குரல் கொடுக்க, நெற்றியில் விபூதி பட்டையுடன், வெள்ளை உடையில் கம்பீரமாய் வந்தார் ராஜாராமன்.

"வாங்க மேடம். டாக்டர் சார் நல்லாயிருக்காரா?"

"ரொம்பவே!"

"வாம்மா!" என்றார் மிதுனாவை சின்ன சிரிப்புடன்.

'அர்விந்தன் கல்யாணம் பண்ணிக் கொண்டு விட்டாரோ? ஒரு வேளை வெளியில் சென்றிருப்பாரோ?'

அவள் பதைப்பை இன்னும் அதிகப்படுத்தியது ராஜாராமனின் பேச்சு.

"அர்விந்த்... யார் வந்திருக்காங்க பாரு!" குரல் கொடுக்கவும், எங்கிருந்தோ அங்கு வந்து நின்ற அர்விந்தன்... மின்சாரம் தாக்கியவனைப் போல் நிலைகுலைந்துப் போனான்.

"மி..து..னா!"

"ஆமாம்பா... உன் மிதுனாவேதான்!"

மிதுனா இன்னும் இன்னும் அதிர்ச்சிக்குள்ளானாள்.

'என்ன நடக்கிறது இங்கே!'

காந்திமதியும், கனகமும் புன்னகையுடன் சிரித்துக் கொண்டனர்.

"அப்பா!"

"........!!"

"மி..மிதுனா... இ.. இங்கே எப்படி? மிதுனா... மி..து..னா!"

அர்விந்தனின் தவிப்பு... மிதுனாவின் காதல் நெஞ்சை தாறுமாய் உடைத்தது.

'அவன் கல்யாணம்தான் எத்தனை எத்தனை வேதனை? தவித்திருப்பேன்... துடித்திருப்பேன்... கண்ணீர் சொரிந்திருப்பேன்... அத்தனையும் என்னால்... எனக்காகவா?'

"பாவம் கனகம்... இந்த சஸ்பென்ஸ் பெண்ணுக்கு வேணுமா? சொல்லிடேன்" என்றாள் காந்திமதி.

கனகம் மிதுனாவின் அருகில் வந்தாள்.

"என்ன மிதுனா குழப்பமாயிருக்கா?"

'ஆம்' என்று தலையாட்டினாள்.

"சொல்றேன்... அர்விந்தன் நாங்க பார்த்த எந்தப் பொண்ணையும் வேண்டாம்னு மறுத்துகிட்டே இருந்தான். ஒரு நாள் வற்புறுத்திக் கேட்டப்பதான் உன்னைப்பத்தி எல்லாமே சொன்னான். 'மிதுனா என்னை நம்பலை. அந்த நம்பிக்கையை காப்பாத்த முடியல. நீங்க என்மேல வச்சிருக்கிற நம்பிக்கையை குலைக்க விரும்பல. ஆனா, என்னால அந்தப் பொண்ணு அனாதையாயிட்டா, அதை தாங்கிக்கவே முடியலே. அவளோட நினைவைக் கொண்டுட்டு என்னால வேற பொண்ணோட சந்தோஷமா வாழமுடியுமான்னு தெரியலை... அவளைப் பிரிஞ்சப் பிறகுதான்... அவ இல்லாம இருக்கவே முடியாதுன்னு உணர்ந்தேன்'னு அழுதான். அதுக்கப்புறம் உன்னை காந்திமதி வீட்ல பார்த்தேன். அவகிட்ட கேட்டப்ப உன்னைப்பத்தி

"சிறையச் சொன்னா, எப்பேன்னா இருக்கட்டுமேன்னு... உனக்கேத் தெரியாம இங்கே வரவச்சது நீ வர்றது அர்வித்துக்கும் தெரியாம மறைச்சோம்."

அவள் சொல்லச் சொல்ல வார்த்தைகள் வராமல் கண்ணீர் வடித்தாள் மிருனா.

அர்வித்தன் இன்னமும் பிரமிப்பிலிருந்து விடுபடவில்லை.

"என்ன மிருனா!" என்றபடி அருகில் வந்தார் ராஜாராமன். "நீ ஜெயிச்சிட்டே...ம்மா! சேத்துல முளைச்ச செந்தாமரைம்மா நீ! எங்க ஆசைக்கு நீ வைக்கக் கூடாதுன்னு உன் மனசைப் போகக்கிட்டே...ப் பார்... உன் காதல் அதனால ஜெயிச்சிப் பறவை மாதிரி போனதுக்க வந்துடுச்சு!"

"டாடி!"

"என்ன என்ன சார்? மாமான்னுக் கூப்பிடு!"

"மா...மா?"

"அதேதான்!"

அர்வித்தன் மனம்விட்டு சிரித்தான்.

"காதலனாப் போறா... வேண்டாமா? என் பிள்ளைதான் கோழையா, அட்லீஸ்ட் தீபாவது நான்கிறோனியா இருக்க வேணாமா?"

"மா...மா!"

"உன்னைப் பெத்தவங்களை விடு! அவங்க நமக்குத் தேவையே இல்லை. நம்மொரு குழந்தைக்கும் அப்பாதான் ஹீரோ, அம்மா தான் ஹீரோயின்! ரோல்மாடலா இருக்க வேண்டியவங்க... விலைக்கு விக்கிற மாதிரி ஒதுக்கி வச்சிட வேண்டியதுதான் சரி! ஆனா, எங்க மனசை காயப்படுத்து பிரிஞ்சுப் போனச் சேம்மா... இதைவிட நல்ல குணம் வேறென்ன

சீனாவில் ஆயிரம் வகையான பட்டாசுகள் தயாரிக்கப்படுகின்றன. இந்தியாவில் நூறு வகையான பட்டாசுகளே தயாரிக்கப்படுகின்றன.

பிஜித் தீவில் சீனர்கள், ஐரோப்பிய சமூகத்தினர், கலப்பு ஐரோப்பிய ஆசியர்களும் வசிக்கின்றனர். இந்தியர்களோடு மற்ற இனத்தவரும் அங்கு தீபாவளியை தேசிய பண்டிகையாக கொண்டாடி வருகின்றனர். தீப அலங்காரம், பட்டாசு வெடித்தல், புத்தாடை உடுத்துதல் மட்டுமல்லாது அன்று பல விசேஷ வகை மீன் உணவுகள் உண்டு பிரமாதமாக கொண்டாடுகின்றனர்.

- ஆர். வசந்தன், நெல்லை.

இட மாறினாலும் தீபாவளியன்று லட்சுமி வீட்டில் நாமதவதாக ஐதீகம். அமாவாசையன்று பூஜையறையில் 24 மணி நேரமும் ஒரு விளக்கு எரியும். இந்த விளக்கிலிருந்து எடுக்கப்படும் மையைத் தான் ஆண்டு முழுவதும் உபயோகிக்கிறார்கள். இதை மௌன தீபாவளி என்கிறார்கள்.

- ஆர். ராமன், சென்னை.

இருக்க முடியும்?"

மிருனாவின் பிருதுவான கன்னத்தில் ஆனந்தக் கண்ணீர் கோடு போட்டது.

"இனி... நீ எங்கேயும் போக வேண்டாம். ஆறுதலுக்கும் நீ இருக்க வேண்டிய இடம் இதுதான். அதுக்கு யாரு தங்க முகவரிக்குதுவும் உனக்கும் அர்வித்துக்கும் கல்யாணம்!"

"டாடி!" தாங்கமாட்டாமல் அவர் காலில் விழுந்து வணங்கினாள்.

"நல்லாயிரும்மா..." என்று அவளை தூக்கி நிறுத்தியவர், "நல்ல நாளும் அதுவுமா கண்ணீர் விடக் கூடாது டே...ய் அர்வித்... என் மருமக வீட்டுக்கு வந்துட்டா... கொண்டாட வேணாமா? அந்த தடியன் சாமானை நம்ம வீட்டு வாசல்லேயே வச்சு வெடிடா!! அதுலே போகச் சத்தமா ஒலிக்கட்டும்!" என்றார் குதூகலமாய்.

அப்பாவிந்த இப்படியெல்லாம் கூட பேச வருமா? என்ற ஆச்சரியத்துடன், பிரமிப்புடன் தடியனவிட சாமானை கொண்டு சென்று வெடித்தான்.

இடைவிடாமல் படபடவென வெடித்த சத்தத்திலும், புகையிலும் பொய்யான பயத்துடன் காதைப் பொத்தி கண்களையும் மூடிக் கொண்டாள் மிருனா.

திட்டத்திட்ட அதிர்ந்த அத்தனை பேரும் அப்படிதான் பொத்திக் கொண்டிருந்தனர்.

அர்வித்தன் மெல்ல நழுவி மிருனா அருகில் சென்று காதில் "ஐ லவ் யூ டார்லிங்" என்றான்.

பொத்தியிருந்த கையை மீறி வெடிச்சத்தத்தை மீறி அவன் வார்த்தைகள் தெளிவாய் கேட்டது.

காதலுடன் அவனைப் பார்த்தாள்.

சொத்துடன் அவன் கைகளைப் பற்றினாள்.

'பேசித்தான் காதலை வளர்க்கணும்ன்னு இல்லே!

நிஜமான காதல் தானே வளரும்!'

( முற்றும் )





கார்த்திகை தீபத்திற்கு வேண்டிய நெய் முதலியவைகளை திருக்கோவில் கண்காணிப்பின் பேரில் வைப்பர். பிரார்த்தனையாளர்களும் பக்த கோடிகளும் உரிய தொகை செலுத்தினால் அவர்கள் பாகமாக கலையில் சேர்ப்பர்.

கார்த்திகை மாதத்திலே கார்த்திகை நட்சத்திரத்தில் சிவபெருமானை பூசித்து விளக்கு ஏற்றிய போது அது சுவாலை காற்றுக்க போதும் சாயாது மேலோங்கி எரிந்தால் மிகவும் நல்லது என்றும், இடப்பக்கத் தாவினும், வலப்பக்கத்தாவினும், கீழ்நோக்கிய சாய்ந்து எரிவுமாயின் இன்னனை பலாபலன் என்று அறியும் வழக்கிறேதத.

# கார்த்திகை தீபம்


திருவண்ணாமலையில் கார்த்திகை நாளில் இடப்படும் தீபத்திற்கு சர்வாலய தீபம் எனவும், 'கார்த்திகை விளக்கீடு' எனவும், 'ஞான தீபம்' எனவும், 'சிவஜோதி' எனவும், 'பாதாள' எனவும் போற்றி வழங்கப்படும்.


திருவண்ணாமலையில் அருணாசல தீபம் ஏற்றப்பட்டவுடன் மேகங்கள் சிறிது நேரத்தில் தீபத்தைச் சூழ்கின்றன. இதைப் பலவெளியே காணலாம்.

ஸ்பெயின் நாட்டில் குறுகிய சின்னதாக நழுவச் அதில் வெடிமருந்தை அடைத்து ஒரு திரியையும் அதற்குள் நுழைத்து தீயை வைத்தால் 'டமார்'. ஆம், முதல் பட்டாசு இப்படித்தான் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தயாரிக்கப்பட்டது. அதற்கு பிறகுதான் கம் நக்குராப செய்து பட்டாசு தயாரிக்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டது. பொட்டாசியம் நைட்ரேட், கந்தகம், கரி ஆகிய மூன்றும் சேர்ந்த கலவையே வெடிமருந்து என்று 1044-ம் ஆண்டின் சீன நூற்குறிப்பு கூறுகிறது.

நரகாசுரன் அழிந்தநாள் என்று நாமெல்லாம் சந்தோஷமாக தீபாவளி கொண்டாடுகிறோம். ஆனால் நரகாசுரனைப் பாராட்டி, புகழ்ந்து திராவிட கழக பத்திரிகையான விடுதலை வருடாவருடம் நரகாசுரன் சிறப்பிதழை வெளியிடுகிறது.

- கீர்த்திவாசு





17 புள்ளி 17 வரிசை (நேர்புள்ளி)
- கே.தமிழ்செல்வி, பசும்பொன் நகர்.




29 புள்ளி 15-ல் நிறுத்தவும்
(இடைப்புள்ளி)
- ஆர்.நிவேதா, குருசாமிபாளையம்

# தீபாவளி கோலங்கள்




13 புள்ளி 13 வரிசை (நேர்புள்ளி)
- மங்கையர்க்கரசி, ராமநாதபுரம்.



13 புள்ளி 7-ல் நிறுத்தவும் (இடைப்புள்ளி)
- ஜி.முருகேஸ்வரி கௌதமன், அரியலூர்.







13 புள்ளி 7-ல் நிறுத்தவும்
(இடைப்புள்ளி)
- எஸ்.ராமலட்சுமி, கோவை-5.




9 புள்ளி 5-ல் நிறுத்தவும்,
ஆறு பக்கமும் 4 புள்ளி 1 முடிய
(இடைப்புள்ளி)
- கே.சித்ரா, கும்மிடிப்பூண்டி.




15 புள்ளி 1 முடிய (நேர்புள்ளி)
- ஆர்.கனகவல்லி, திருச்செங்கோடு.



9 புள்ளி 1 முடிய
(இடைப்புள்ளி)
- எம்.ராஜேஸ்வரி, சிதம்பரம்.




கோலத்தில் உள்ளவாறு
புள்ளிகள் வைத்து போடவும்.
- எஸ்.பத்மாவதி, கோபி



7 புள்ளி 7 வரிசை (நேர்புள்ளி)
- எம்.சரஸ்வதி, சென்னை-81.